# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது

Volume - 8
Issue -12

டிசம்பர் 2015 - ரபியுல் அவ்வல் 1437

விலை ரூ. 20





- பாபரி மஸ்ஜித், வழக்கு நிலவரம்!
- ஷொரப்தீன்-இன் சகோதரருக்கு மோடிகளின் நெருக்கடிகள்
- மோடியின் லண்டன் பயணம்!



# வைகறை வெளிச்சம்

டிசம்பர் 2015 - ரப்பியுல் அவ்வல் - 1437

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது

துணை ஆசிரியர்
கே.எம். இல்யாஸ் ரியாஜி

**தனி இதழ் : ரூ. 20/-**

**ஆண்டுச் சந்தா:**

**உள்நாடு : ரூ. 240/-**

**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு
VAIGARAI VELICHAM
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Cell.: 8148129887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in

All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts.

بسم الله الرحمن الرحيم

பாரீஸ் தாக்குதல் யாரால்? யாரால்? – கவர் ஸ்டோரி 4

பிரான்சில் நடைபெற்ற இந்தத் தாக்குதல்களுக்கு நான் மன்னிப்புக் கேட்க மாட்டேன்! 13

பிரான்ஸ் தாக்குதல் – அமெரிக்க ஆயுத நிறுவனங்கள் மகிழ்ச்சி! 15

முஸ்லிம்கள் பாரிசில் நடந்தது போன்ற தாக்குதல்களை நடத்த மாட்டார்கள் ஏன்! 17

சிரியாவின் உள்நாட்டு யுத்தம் சீரிய சேவை ஆற்றும் அமெரிக்கா மற்றும் ரஷ்யா! 22

விஷ்ணுபிரியாவின் அம்மா சொன்னத் தகவல்கள்! 28

கற்காலத்தை நோக்கி தமிழகம் அ.தி.மு.க. ஆட்சியில் 31

பாபரி மஸ்ஜித், வழக்கு நிலவரம்! 34

முஸ்லிம்களுக்கெதிரான நாகர்கோவில் காவல்துறையின் வெறியாட்டம்! 38

தீன் சுடர் டி.எம். உமர் பாரூக் 43

கவிக்கோ பவள விழா! ஓர் இலக்கியத் திருவிழா! 44

வைகறை வெளிச்சத்துக்கு மறுப்பு 45

அந்த நடிகை ஏன் இஸ்லாத்தை ஏற்றார்? 51

ஷொரப்தீன்–இன் சகோதரருக்கு மோடிகளின் நெருக்கடிகள் 52

மரணத்திற்குப்பின் கண்ணியமாகப் புதைக்கப்படும் உரிமை தலித்களுக்கு இல்லை! 55

மோடியின் லண்டன் பயணம்! 58

எது முதலில்? 60

தரீக்குல் குர்ஆன் 63

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? 65

“இறை நிராகரிப்பாளர்கள் - உம்மை அவர்கள் சிறைப்படுத்துவதற்கு, அல்லது உம்மைக் கொலை செய்வதற்கு அல்லது உம்மை (ஊரைவிட்டு) வெளியேற்றுவதற்கு - சூழ்ச்சி செய்த நேரத்தை (நினைத்துப்பார்ப்பீராக!). அவர்கள் சூழ்ச்சி செய்தனர். அல்லாஹ்வும் (அவர்களுகெதிராய்) சூழ்ச்சி செய்கிறான். (எனினும்) அல்லாஹ் சூழ்ச்சி செய்வோரில் மிகவும் மேன்மையுடையவன்”

**(அல்குர்ஆன் அத்தியாயம் அல் அன்ஃபால் - வசனம் - 30)**

http:/www.facebook.com / vaigaraivelichammgm



# பாரீஸ் தாக்குதல் யாரால்? யாரால்?

**நா**ம் நன்றாகப் படித்தவர்கள், புத்திசாலிகள் எதையும் சீர் தூக்கிப் பார்த்துதான் ஏற்றுக் கொள்வோம். ஆனால் சில விஷயங்களை மட்டும், கண்ணைப் பொத்திக் கொண்டு ஏற்றுக் கொள்வோம்.

அவற்றில் ஒன்று 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட நிகழ்வு. இதில்தான் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டடன.

இதில் வேகமாக வந்த விமானம் வானுயர நின்ற இரட்டை கோபுரத்தைத் தகர்த்து வெளியே வருகின்றது. மிகவும் உறுதிவாய்ந்த இரும்புக் கம்பிகளால் வேயப்பட்ட கட்டடத்தை எப்படி விமானம் முட்டைக் கூடுபோல் தகர்த்துவிட்டு வெளியே வந்தது எனக் கேட்டபோது, விமானம் மோதியதில் அந்த கெட்டியான இரும்பு கம்பிகள் உருகிவிட்டன என்றார்கள்.

அறிவிற்செறிந்த அமெரிக்கர்கள் அல்லவா சொல்லுகின்றார்கள் என ஏற்றுக் கொண்டோம். ஆனால் அமெரிக்க விஞ் ஞானிகள் யாரும் ஒத்துக் கொள்ள வில்லை.

அடுத்து அமெரிக்க அதிமேதாவிகள் ஒரு செய்தியைச் சொன்னார்கள். அது,

அப்படி கம்பிகளை உருக்கிய விமானத்தின் வெப்பத்தால் விமானத்தை ஓட்டிச் சென்றவர்களின் உடனிருந்த கடவுச் சீட்டு (Passport) களைப் பொசிக்கிட இயலவில்லை. கடவுச் சீட்டுகள் இரும்பால் செய்யப்படு வதில்லை என்பதை நாமறிவோம்.

இரும்பு கம்பிகளையே உருக்கிவிட்ட வெப்பத்தாலும் சீண்ட முடியாத கடவுச் சீட்டுகளை வைத்து நாம் நிமிடத்தில் விமானத்தை ஓட்டிச் வந்து அந்தப் பாதகத்தை நிகழ்த்தியவர்கள் யார் என்பதைக் கண்டு கொண்டோம். பொய்யேயானாலும் அட்டி இன்றி அப்படியே ஏற்றுக் கொண்டோம்.

நமக்கு எதிரிகள் யார் எனத் தெரிந்து விட்டால் எந்தப் புருடாவையும் நம்புவோம்.

அடுத்து அதே நிகழ்வில் உலக முஸ்லிம்கள் சந்தோஷப் பட்டு குதூகலிப்பது போன்ற ஒரு வீடியோ காட்சிக் காட்டப் பட்டது. உடனேயே அதையும் நம்பினோம்.

பின்னர்தான் நமக்குத் தெரிந்திட வந்தது இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப் பட்ட வுடன் நமக்குக் காட்டப்பட்ட தொலைக் காட்சி பதிவுகள் அன்றிலிருந்து சுமார் 8 ஆண்டுகளுக்கு முன் சதாம் உசேனின் படைகள் குவைத்திலிருந்து வெளியேறிய போது குவைத் மக்கள் குதூகலித்த வீடியோ படம்தான் அது என்று.

இப்படி எத்தனையோ கேள்விகள் 9/11 என்ற நிகழ்வுக்குப் பின், இப்போது அமெரிக்கர்களே அந்த நிகழ்வை முஸ்லிம்கள் செய்தார்கள் என்று நம்பவில்லை. ஆனால் அதற்குள் 10-15 ஆண்டுகள் ஓடிவிட்டன. இப்போது அந்த இரட்டைக் கோபுரங்கள் இருந்த இடத்தில் ஒரு மஸ்ஜித் இருக்கின்றது. ஐந்து வேளைத் தொழுகையும் நடக்கின்றது. அதற்கு கிரவுண்ட் ஜீரோ மஸ்ஜித் எனப் பெயர்.

அதே போல பல நிகழ்வுகள் நமக்கு காட்டப்பட்டன.

## பாரிஸ்

இப்போது மொத்த காட்சியும் பாரிஸ்-ஐ நோக்கிப் பறக்கின்றன.

பாரிஸ் 13.11.2015 அன்று அகதிகள் போல் உள்ளே நுழைந்த சிலர் ஒரு பெரும் தாக்குதலை நடத்தினர். அதில் அப்பாவிகள் 130 பேர் உயிரிழந்தனர். இன்னும் பல அப்பாவிகள் காயம் பட்டனர். (இவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங் கள். தாக்குதலை நடத்தியவர் கடுமையான கண்டனத்திற்கும் தண்டனைக்கும் உரிய வர்கள்).

## தாக்குதலை நடத்தியவர்கள்

இந்த தாக்குதலை நடத்திட வந்தவர்கள் தற்கொலை படையினர் என்கின்றார்கள். ஆனால் அவர்கள் தங்களை யாரென்று காட்டிடும் கடவுச் சீட்டுகளைத் தவறாமல் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஏனெனில் தாக்குதலை நடத்தியவர்கள் துண்டு, துண்டாகிப் போனார்கள். ஆனால் அவர்கள் கடவுச் சீட்டுகள் கிழியவோ, பொசுங்கவோ இல்லை. அவர்கள் முஸ்லிம்கள் என அடையாளம் காட்டி விட்டன. உடனேயே உலக மக்கள் முன் குற்றவாளிகளாகக் காட்டிட வேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்ட வர்கள். அத்தோடு இஸ்லாத்தையும் ஈவிரக்க மற்ற ஒரு மார்க்கம் எனக்காட்டிட வேண்டும் என பாய்ந்தோடி வந்தவர்கள் என நம்மை நம்பிடச் சொல்லுகின்றார்கள் நம்புவோமா?

## தற்கொலைப்படையினர்

தற்கொலைப் படை (பாஸ்போர்ட்) கடவுச் சீட்டு இல்லாமல் தாக்குதல் நடத்தும் இடத்திற்கு வரவேமாட்டார்கள் நம்புங்கள் எங்களை என்கின்றார்கள்.



இந்தத் தாக்குதலை அல்ல இதுபோன்ற எந்தத் தாக்குதலையும், எள்ளளவு எள்ளின் மூக்களவு, மூக்கின் முனையளவு ஈமான் கொண்ட எவனும் செய்யமாட்டான். இன்றளவும் செய்யவில்லை. (பார்க்க தனி கட்டுரை)

ஆனால் ISIL என்ற இஸ்லாமிய அரசு என்ற அமைப்பு உடனேயே மின்னஞ்சல் அனுப்பி பொறுப்பேற்றுக் கொண்டது எனச் சொல்லி இது இஸ்லாமிய தீவிரவாதம் என அனைத்து பத்திரிக்கைகளும் அனைத்து ஊடகங்களும் செய்திகளைப் பரப்புகின்றன.

இன்றைக்கு அமெரிக்கர்கள் அல்லது யூதர்கள் நினைத்தால் இப்படியொரு மின்னஞ்சலை அனுப்புவதற்கு எத்தனை மணித் துளிகள் ஆகும்? அவர்கள் நினைத்தால் நொடிப்பொழுதில் இப்படியொரு மின்னஞ்சலை அனுப்பிவிட முடியும். அதுதான் இதில் நடந்திருக்கின்றது. இதற்கு முன் ஈமெயில் அனுப்பியவர்கள் யார்? என்பதை புரிய வைப்பதற்கு இரண்டு எடுத்துக் காட்டுகளைத் இங்கே தருகின்றோம்.

## இ-மெயில்களின் வரலாறு

நம் நாட்டைப் பெரிய அளவில் உலுக்கி குண்டு வெடிப்பு அஹ்மதாபாத்-இல், (27, ஜூலை 2008 ஆம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்புகள்).

ஒரே நேரத்தில் அஹமதாபாத் இல் 17 இடங்களில் குண்டுகள் வெடித்தன. இதில் 100க்கும் அதிகமான அப்பாவி உயிர்கள் பலியாகின. 100க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டார்கள். காயம்பட்டார்கள். அகமதாபாத் முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழும் ஒரு பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

வழக்கம் போல், எந்த முகாந்திரமுமில்லாமல் "சிமி" என்ற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம், 'ஹூஜி', 'லஷ்கரே தைய்பா' என்றெல்லாம் நமது உளவுத் துறை செய்திகளைச் சொல்லியது. அதன் கூற்றை அப்படியே ஏற்றுக் கொண்டு நமது ஊடங்களும் முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் இடித்து செய்திகளைப் பரப்பின.

ஏறத்தாழ அதே நேரத்தில் நமது பெங்களூரிலும் குண்டுகள் வெடித்தன.

இவற்றிற்கெல்லாம் நாங்கள்தாம் பொறுப்பு என்றொரு (இ-மெயில்) மின்னஞ்சல் ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தை வந்தடைந்தது.

அதில் இந்தியன் முஜாஹிதீன் 'IM' என்ற அமைப்புத் தானே பொறுப்பேற்றுக் கொள்வதாக செய்தி. இ-மெயில் அனுப்பியவர்களைக் கண்டு பிடித்துவிட்டால் குண்டு வைத்தவர்களைக் கண்டு பிடித்துவிடலாம். இந்த முனைப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

இந்த இ-மெயில் எங்கிருந்து வந்தது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இ-மெயில் நமது மராட்டிய மாநிலத்தின் தலைநகர் நவி மும்பையில் ஓர் அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து தான் அனுப்பப் பட்டிருந்தது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதுவும் நவி மும்பையின் Palam Beach Road பாலம் பீச் ரோடு இல் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பிலிருந்து தான் அனுப்பப் பட்டிருந்தது.

அதிலும் குறிப்பாக வீட்டு எண்கள், 1503,1504 இருந்துதான் அனுப்பப்பட்டிருந்தது. அனுப்பியவர்கள் அமெரிக்காவைச் சார்ந்த கம்யூட்டர் விஞ்ஞானிகள் கென்னத் ஹேவூட் (Kenneth Heywood) என்ற அமெரிக்கரும், அவருடைய மனைவி கென்ஸ் ஒயிட் (Kens White) என்பவருந்தான் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

மனைவி ஹென்ஸ் ஒயிட்டும் ஒரு கம்யூட்டர் விஞ்ஞானி. இவர்களின் கம்யூட்டர்களிலிருந்துதான் அஹ்மதாபாத் குண்டுகளுக்குப் பொறுப்பேற்கும் மெயில் அனுப்பப்பட்டிருந்தது. இருவரும் கைது செய்யப்பட்டார்கள். காவல் நிலையம் கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கு அவர்கள் நாங்கள் இந்த மெயிலை அனுப்பவில்லை என்று உறுதி கூறினார்களாம். உடனேயே நமது காவல்துறையினர் அவர்களை விட்டு விட்டார்களாம்.

மெயிலை அனுப்பிய இவர்களின் கம்யூட்டரின் 'Hard Disc' ஹார்டு டிஸ்க் கைப்பற்றப்பட்டு அவர்கள் தாம் மெயிலை அனுப்பினார்கள் என்பது நிரூபிக்கப்பட்டது. நீதிமன்றத்திற்கும் செய்தி சொல்லப்பட்டது. நீதிமன்றம் அவர்கள் இந்தியாவை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கக்கூடாது என்று அரசுக்கும் அதிகார வர்க்கத்திற்கும் ஆணை பிறப்பித்தது.

இதனை அடுத்து எல்லா விமான நிலையங்களுக்கும் Lookout Notice என்ற விமான நிலையத்தில் கண்டால் தடுக்க வேண்டும் என்ற ஆணையும் பிறப்பிக்கப் பட்டிருந்தது.

ஆனால் இவை அனைத்தையும் கடந்து அந்தத் தம்பதியர் மிகவும் பத்திரமாக அமெரிக்கா அனுப்பி வைக்கப்பட்டார்கள். நமது மத்திய உளவுத்துறையால்.

**(தி ஹிந்து 28, ஜூலை 2008)**

இவர்கள் அனுப்பி இ-மெயில் 14 பக்கங்களைக் கொண்டது. இ-மெயிலை அனுப்பிய (ID) முகவரி அல் அரேபியா குஜராத் (alarabiagujarath) என்பதாகும். இ-மெயிலுக்கு அவர்கள் சூட்டிய பெயர் Raise of Jihad ஜிஹாத் இன் எழுச்சி. இந்த இ-மெயில்கள் அஹமதாபாத் குண்டு வெடிப்புகள் நடப்பதற்கு 5 நிமிடங்களுக்கு முன் அனுப்பப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. இது எதைக் காட்டுகின்றது என்றால் இ-மெயில் முன்னரே தயாரிக்கப்பட்டுள்ளது. குண்டுகள் வெடிக்கப் போகின்றன என்பது அமெரிக்க தம்பதிக்கு முன்னரே தெரிந்திருக் கின்றது. இது அந்த அமெரிக்க தம்பதிக்கும் அஹமதாபாத் குண்டு வெடிப்புகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதைக் காட்டுகின்றது. அப்படியானால் அவர்களை அத்தனை அரசு ஆணைகளுக்கும் பின்னரும் அமெரிக்கா அனுப்பி வைத்தவர்களுக்கும் குண்டுவெடிப்புகளுக்கும் தொடர்பு உண்டு என்பதையே நிரூபிக்கின்றது.

## இன்னொரு இ-மெயில்

இந்த இ-மெயிலும் அஹமதாபாத் பெங்களூர் குண்டு வெடிப்புகள் 2008 முடிந்தவுடன் அனுப்பப்பட்டது. இந்தக் குண்டு வெடிப்புகள் ஜூலை 27, 2008 இல் நடந்தவை என்பதை முன்னரே குறிப் பிட்டோம். இ-மெயில் ஜூலை 31 ஆம் நாள் அனுப்பப்பட்டது. இது லூதியானா (பஞ்சாப் மாநிலம்) விலிருந்து அனுப்பப்பட்டது. இதனை அனுப்பியவர் தீபக் ஷிவ் ஷங்கர் பாண்டே என்பவர். இவர் ஆர்.எஸ்.எஸ்.ஸின் தீவிர உறுப்பினர். இவர் மராட்டிய மாநிலத்தைச் சார்ந்தவர். என்றாலும், அவர் இ.மெயிலை அனுப்பிட பஞ்சாப் சென்றிருந் தார். இவற்றையெல்லாம் புதாரி Phudari என்ற மராட்டிய பத்திரிக்கை வெளியிட்டது (புதாரி நாளிதழ் 4.8.2008)

இந்த (இ-மெயில்) மின்னஞ்சல் விவகாரத்தை வைகறை வெளிச்சம் ஆகஸ்ட் 2008 இல் வெளியிட்டிருந்தோம். வாசகர்கள் அதைப் படிக்கவும்.

இவற்றை வைத்துக் கொண்டு, அமெரிக்க உளவுத்துறை, இந்தியாவின் இந்துத்துவ அமைப்புகள், இவையெல்லாம் இணைந்து தான் இந்தக் குண்டு வெடிப்பு களை நடத்துகின்றன என அழுத்தந் திருத்தமாக எழுதினார் பத்திரிகையாளர் டீஸ்டா செட்டல்வாட் அவர் நடத்திவரும் Coomunalism Combat "கம்யூனிலிசம் காம்பாக்ட்" (CC.July / August 2008) என்ற பத்திரிகையில்.

இதுபோல இ-மெயில்கள் இஸ்லாத்திற் கெதிராகவும் முஸ்லிம்களுக்கெதிராகவும் நடக்கும் பெரும் போரின் ஓர் அங்கம். இதில் அமெரிக்க உளவுத்துறை, இந்திய உளவுத் துறை, இந்துத்துவ அமைப்புகள் இவை யெல்லாம் அங்கம்.

இப்போது பிரான்சில் நடந்த தாக்கு தலில் பிரான்ஸ் நாட்டு ஊடகங்களும், அரசும் பிரான்ஸ் நாட்டுக் காவல்துறை எந்த முடிவையையும் (அல்லது அறிக்கையையும்) தந்திடுவதற்கு முன்பே (IS) என்றும் அல்கயிதா என்றும் கதை கட்டத் தொடங்கிவிட்டன. ஆதாரமாக ஒரு இ-மெயிலைச் காட்டு கின்றனர்.

### புதிய சட்டம்

இவற்றிற்கெல்லாம் மேலாக பிரான்ஸ் நாட்டு அதிபர் ஹோலேண்ட் ஒரு புதிய எமெர்ஜன்சி சட்டம் என்ற ஒரு நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள்.

இந்த நெருக்கடி நிலையில் உலகில் அண்மையில் அமெரிக்காவைப் போல் ஓர் அறிவிப்பைச் செய்துள்ளார்கள். அதில், அடிப்படை உரிமைகளில் ஆள்கொனர் உரிமையையும் கூட மக்களுக்கு இல்லை என அறிவித்துள்ளார்கள்.

## ஆள்கொணர் உரிமை MCP, OR HABEAS CORPUS PETITION

இது நம்மில் ஒருவரை காவல்துறை அழைத்துச் சென்று விடுகின்றது. எந்தக் காரணத்தையும் சொல்லவில்லை. எங்கே கொண்டு செல்கின்றார்கள் என்பதும் தெரியவில்லை.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவரின் தாயோ, தந்தையோ நீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்வார்கள். அந்த மனுவில் காணாமல் போனவர்கள் அதாவது காவல் துறையினர் அழைத்துச் சென்றவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்பதை நிரூபிக்கும் வண்ணம் அவரை நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்துங்கள் என்பார்கள். நீதிமன்றம் மனுவை ஏற்றுக் கொண்டு ஆணை இட்டால் நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்துவார்கள். இதைத்தான் ஆள்கொணர் மனு என்பார்கள். ஆங்கிலத்தில் Habeas Corpus Petitions - HCP ஹீபியஸ் கார்ப்பஸ் பெட்டிஷன் என்பார்கள்.

### அடிப்படை உரிமை

ஐரோப்பிய நாடுகள் - அதாவது பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் இந்த ஆள்கொணர் மனுபோடும் உரிமையை மிகவும் அடிப்படையான மனித உரிமை, எனப் போற்றினார்கள். இந்த உரிமையை இந்த 13/11 தாக்குதலின் பின்னணியில் கொண்டு வந்த ‘Emergency Law’ நெருக்கடி சட்டத்தில் இந்த உரிமைப் பறிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் நடந்த 9/11 என்று அடையாளம் படுத்தப்படும் இரட்டைக் கோபுரத் தாக்குதலைப் பயன்படுத்தி அமெரிக்கா ஒரு நெருக்கடிகால சட்டத்தைச் கொண்டு வந்தது. அதன் பெயர் Patroist Law - ‘தேசபக்திச் சட்டம்’. இந்த சட்டத்திலும் இந்த இதைப் பயன்படுத்தி யாரை வேண்டு மானாலும் கைது செய்யலாம். எந்த அப்பாவி யையும் பிடித்து வைத்து சித்திரவதை செய்து வேண்டிய வாக்குமூலத்தை வாங்கலாம் காவல்துறை அவரை உயிரோடு காட்டும் வரை யாரும் தலையிட முடியாது. நீதி மன்றங்கள் கூட தலையிட முடியாது.

இவையெல்லாம் சொல்லும் உண்மை என்னவெனில் ஒரு 9/11 ஒன்று பிரான்ஸுக்கு தேவைப்பட்டிருக்கின்றது. அதை உருவாக்கி இருக்கின்றார்கள். இனி பிரான்சில் வாழும் முஸ்லிம் இளைஞர்களை சொல்லொண்ணா துயரங்களுக்கு ஆளாக்கிட இருக்கின்றார்கள். யாரும் அனுதாபப்படவோ ஆதங்கப்படவோ மாட்டார்கள். ஏன் அந்தத் திரையில் எட்டிக் கூட பார்க்க மாட்டார்கள்.

இஸ்லாத்தின் எதிரிகள் பிரான்சை தொடர்ந்து தீவிர தாக்குதல்களுக்கு ஆளாக்கி வருகின்றார்கள். காரணம் பிரான்ஸ்-இல் இஸ்லாத்தின் வளர்ச்சி அவர்களின் கண்களை உறுத்திக் கொண்டே இருக்கின்றது.

ஐரோப்பாவில், இஸ்லாம் மிகவும் அதி வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்று பிரான்ஸ்.

அதே போல் இன்று ஐரோப்பிய நாடுகளிலேயே அதிகமாக முஸ்லிம்கள் வாழும் நாடு பிரான்ஸ் என்பது மட்டுமல்ல வளரும் வேகமும் அதிகம். சென்ற ஆண்டு கணக்கெடுப்பில் முஸ்லிம்கள், மொத்த மக்கள் தொகையில், 3.8 சதவீதம் தான் இருந்தார்கள். இந்த ஆண்டு கணக்கெடுப்பில் 4.3 சதவீதமாக உயர்ந்துள்ளார்கள். இது அரசின் புள்ளி விபரங்கள். தனியார்கள் தரும் புள்ளி விபரங்கள் பிரான்ஸின் மொத்த மக்கள் தொகையில் 5 சதவீதம் முஸ்லிம்கள் என்கின்றது.

இஸ்லாம் வேகமாகப் பரவுவதற்கு காரணம் பிரபல்யங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதுதான். பிரபல்யங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதால் அவர்களைப் பின்பற்றுபவர்களும் அவர்களின் விசிறிகளும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றார்கள். இந்த மத மாற்றத்தைத் தடுக்க வேண்டும். மக்கள் இஸ்லாத்தை வெறுக்க வேண்டும். இஸ்லாம் என்றவுடனேயே ஒருவகை மரண பீதி அவர்களைப் பீடித்திட வேண்டும் என பிரான்சில் வாழும் இஸ்லாத்தின் எதிரிகள் திட்டம் போட்டு செயல்படுகின்றார்கள். அதனால்தான் இந்தத் தொடர் தாக்குதல்களை நடத்தி இஸ்லாத்தை மக்கள் வெறுக்கச் செய்கின்றனர்.

**புர்காவும் பெண்களும்**

இஸ்லாத்தின் எதிரிகள், அண்மையில் புர்காவையும், நிக்காப்-ஐயும் தடை செய்திடும் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் பிரான்சில் வாழும் பெண்கள் அதனை நடைமுறையில் வீழ்த்திக் காட்டினார்கள். இறுதியில் பிரான்ஸ் நாட்டின் நீதிமன்றத்தில் பெண்கள், “நாங்கள் விரும்பும் ஆடையை அணிந்திடும் உரிமை எங்களுக்கு உண்டா?” என்றொரு வினாவை நீதிமன்றத்தில் வைத்தார்கள். இதற்கு நீதிமன்றம் “உண்டு” எனக் கூறிற்று. அப்படியானால் நாங்கள் புர்காவை - உடலை முழுமையாக மறைக்கும் ஆடையைத்தான் விரும்புகின்றோம். அதில் அரசு தலையிடக் கூடாது என்றார்கள். அத்தோடு பிரான்சில் இஸ்லாத்தை எதிர்த்தவர்கள் பெருந் தோல்வியைச் சந்தித்தார்கள்.




புர்காவை அணிய முஸ்லிம் ஆண்களே கட்டாயப்படுத்துகின்றார்கள் என்ற நினைப்பில் கொண்டு வரப்பட்ட புர்கா தடைச் சட்டம் மண்ணைக் கவ்வியது.

மேலை நாட்டு மனித உரிமைகள் வளர்ச்சியில் French Declaration 1789 பிரஞ்சு பிரகடனம் ஆகஸ்ட் 1789 ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. இப்படிப் மனித உரிமைகள் வளர்ச்சியில் பிரான்சு முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்த நாட்டில் இன்றைய நாள்களில் மக்கள் விரும்பும் ஆடையை அணிந்திட தடை என்றால் அங்கு இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் எவ்வளவு கண் மூடித்தனமாக இருக்கின்றார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

**பிரன்ஸ்-ஐ வயப்படுத்த சதி!**

பிரான்ஸ் நாட்டின் மேல் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் பயங்கர கோபங்கள் உண்டு. காரணம்,

அண்மைக்காலத்தில் பிரான்ஸ் மேற்கொண்ட வெளிநாட்டுக் கொள்கைகள்.

2014 இல் இஸ்ரேல் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை தனது ஆக்கிரமிப்பின் கீழுள்ள காஸா பகுதியின் மேல் பாலஸ்தின் மீது நடத்தியது. தரைவழித் தாக்குதல், வான்வழித் தாக்குதல், கடல் வழித் தாக்குதல் என மூன்று வழித் தாக்குதல்களை நடத்தியது. இந்த தாக்குதலில் ஹமாஸ் என்ற இஸ்லாமிய இயக்கம் இஸ்ரேல் நாட்டை வென்றது. பின்னர் காஸா பகுதியில் வீழ்ந்த பிணங்களை ஹமாஸ் இயக்கத்தவர்கள் கைப்பற்றினார்கள். காஸா பகுதியில் தங்களைத் தாக்கிட இஸ்ரேலின் படையுடன் பிரான்சு நாட்டுப் படைகளும், பிரட்டன், அமெரிக்க நாட்டுப் படைகளும் வந்திருந்தன என்

பதைக் காஸா பகுதியில் வீழ்ந்து கிடந்த பிணங்கள் காட்டின.

இந்தப் பிணங்களை ஹமாஸ் இஸ்லாமிய இயக்கத்தினர் பத்திரமாகக் காப்பாற்றி வருகின்றனர். நோக்கம், சர்வதேச விசாரணை கள் என வந்தால் இந்தப் பிணங்களைக் காட்டிட வேண்டும். அதன் மூலம் எங்கள் மீது நடந்தது ஒரு சர்வதேச தாக்குதல் என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதே.

ஹமாஸ் இயக்கத்தின் இந்த யுக்தி பெருமளவில் பலன் பயத்தது. ஆமாம்! அன்றிலிருந்து பிரான்ஸ் நாட்டினர் தங்கள் பாலஸ்தீன கொள்கைகளை மாற்றிக் கொண்டனர். ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனில், "பாலஸ்தீன் நாடு" ஒன்று அமைக்கப்பட்டு அது முஸ்லிம்களின் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்பினர். அது ஐக்கிய நாடுகளின் தீர்மானமாக ஆகிட வேண்டும் என உறுதியாக நின்றனர்.

## சார்லி ஹெப்டோ தாக்குதல்




பாலஸ்தீனர்களுக்கு தனி நாடு என்பதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை யூதர்களாலும், அமெரிக்கர்களாலும். எப்போதோ சார்லி பெப்டோ என்ற பிரான்ஸ் நாட்டு பத்திரிகையில் வெளிவந்த கார்ட்டூனுக்காக, அந்த பத்திரிக் கை அலுவலகம் அங்கு வேலை செய்பவர்கள் எல்லோரும் தாக்கப் பட்டார்கள்.

இந்தத் தாக்குதலுக்கு யூத-அமெரிக்க, உளவுத்துறையினர் தாம் காரணம். இதனை நாம் 'வைகறை வெளிச்சம் 2015' இதழில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளோம்.

இந்தத் தாக்குதலுக்குப்பின் உலகத் தலைவர்களையெல்லாம் பிரான்ஸ் நாட்டுக்கு அழைத்தார் பிரான்ஸ் நாட்டின் ஆட்சித் தலைவர். அத்தனை பேரும் சேர்ந்து தாக்குதலைக் கண்டிக்க வேண்டும் என்பதே நோக்கம். ஆனால் இஸ்ரேல் பிரதமருக்கு அழைப்பு விடுக்கவில்லை. காரணம் தாக்குதலுக்கு மூளையானவரை அழைக்க வேண்டாம் என்பதே!

தான் அழைக்கப்பட வில்லை என்றாலும், தானாகவே வம்புக்கு வந்து கலந்து கொண்டார் இஸ்ரேல் பிரதமர். இப்படி பிரான்ஸின் அதிபர் அமெரிக்காவையும் யூதர்களையும் ஒதுக்கி வைக்கவே பார்த்தார். ஆனால் பல்வேறு உத்திகள் மூலமும் இதற்கு முன்னாலும், இப்போதும் ISIL பொது எதிரியாகக் காட்டியும் பிரான்ஸை தங்கள் பக்கம் இழுத்திட முயற்சி செய்து வருகின்றார்கள் யூதர்களும், அமெரிக்கர்களும். இந்த தாக்குதல் மூலம் அமெரிக்கர்களும் யூதர்களும் அதனை பெற்றுவிட்டார்கள். அமெரிக்க தேசபக்தி சட்டத்தைப் போல், பிரான்சிலும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. பிரான்ஸ் வழிக்கு வந்து விட்டது என்பதை அறிந்தது. அலறி அடித்துக் கொண்டு அமெரிக்க அதிபர் பல உதவிகளை அறிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் அதிபர் வேறு வழியின்றி அமெரிக்க உதவிகளை ஒத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைக்கும் வந்துவிட்டார். அத்தோடு அமெரிக்க யூத அணியோடு கைகோப்பார் என்பதே இப்போதைய நிலை. மொத்தத்தில் பாலஸ்தீனத்திற்குத் தனிநாடு என்று பேசியும் ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தியும் வந்த பிரான்ஸ் இனி யூத அமெரிக்கர்களின் அணி!

## அரபு நாட்டு அகதிகளும், பிரான்சும்

அமெரிக்கா ஐஎஸ் என்ற அமைப்பின் வழி செய்த கபளீகரங்களின் மிகப் பெரிய சாதனை அரபு உலகில், அதிகமான மக்கள் அகதிகளாக ஐரோப்பிய நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்த அகதிகளை ஐரோப்பா ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை என்பதை அன்மையில் முகம் குப்புறக்கிடந்த குழந்தையின் பரிதாப நிலை எடுத்துக் காட்டிற்று.

இந்நிலைக்குக் காரணம் அகதிகள் ஐரோப்பாவின் எல்லையை அடைவதற்கு முன்பே, யூத அமெரிக்க முகவர்கள் இன்னும் இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக வெறுப்பு பிரச்சாரத்தைச் செய்பவர்கள் ஒரு பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டார்கள். அதில் இப்படியொரு பீதியை உருவாக்கினார்கள்.

"They are coming to take away your jobs and food."

அதாவது, அவர்கள் அந்த அகதிகள் உங்கள் உணவுப் பொருள்களையும், வேலை வாய்ப்புகளையும் பிடுங்கிக் கொள்ளவே வருகின்றார்கள்.

இப்போது தாக்குதலை நடத்தியவர்கள் அகதிகள் போர்வையில் பிரான்சுக்குள் நுழைந்தார்கள் என்றே கூறுகின்றார்கள்.

இதன் மூலம் அகதிகள் பிரான்சுக்குள் வருவதை பெருமளவில் தடுத்துவிட்டார்கள். பிரான்சுக்குள் வரும் அகதிகள் பிரான்ஸ்-இன் எல்லையில் பெருமளவில் கெடுபிடிக்குத் உள்ளாக்கப்படுகின்றார்கள்.

ஏற்கனவே பிரான்சின் எல்லைகளில் காவல்காத்துவரும் எல்லை இராணுவத்தினர் எங்களுக்கு இந்த அகதிகள் பெரும் தலைவலி ஆகிவிட்டார்கள். அதனால் நாங்கள் அவர்களை அதிகமான சோதனை களுக்கு உள்ளாக்கிட வேண்டியவர்களாகி விட்டோம் எனக் கூறி இருக்கின்றார்கள்

(Source : The Hindu - 18.11.2015)

ஆக தாக்குதலை நடத்தியவர்கள், ஒரு தாக்குதலின் வழி முஸ்லிம்களுக்கும், இஸ்லாத்திற்கும் எதிராகப் பல காய்களை நகர்த்தி விட்டார்கள்.

**பத்திரிக்கைகளை அண்டவிடவில்லை ஏன்?**

குளோபல் நியூஸ் (Global News) என்ற செய்தி நிறுவனம் தரும் ஒரு செய்தி மிகவும் கூர்ந்து கவனிக்கத்தக்கது.

"More over the Media was held at bay, they were not allowed to report what was happening within the concert hall. They were prevented from talking to the witness underlying the tragic event" - Meanwhile curfew was imposed.

**Global News : 14.11.2015**

இதன் பொருள்,

ஊடகங்களை ஒதுக்கி ஓரங்கட்டி விட்டார்கள். அந்த இசை அரங்கில் தாக்குதலின் போது என்ன நடந்தது? என்பதைச் சொல்ல அவர்களை அனுமதிக்கவில்லை. ஊடகங்களைச் சார்ந்தவர்கள். இந்தச் சோக நிகழ்வைக் கண்ணால் கண்ட சாட்சியங்களோடு பேசிடவும் அனுமதிக்கப்படவில்லை.

அத்தோடு ஊரடங்கு உத்தரவையும் பிரகடனப்படுத்தி விட்டார்கள். ஏன் ஓர் அரசு ஊடகங்களை இப்படி ஒதுக்கி ஓரங்கட்டிட வேண்டும்?

இதனிடையே எல்லோரையும் பீதிவயப் படுத்தும் அளவில் ஏன் ஊரடங்கு உத்திரவைத் திணிக்க வேண்டும். ஊடகத்து மன்னர்களிடமிருந்து எதையோ அரசு மறைக்க விரும்புகின்றது என்பதைத் தானே இந்த நிகழ்வுகளெல்லாம் காட்டுகின்றது.

இத்தோடு இன்னொன்றையும் இணைத்தே பார்க்க வேண்டும். ஒரு Emergency Law "நெருக்கடி நிலை சட்டத்தை"யும் பிரகடனப் படுத்தியுள்ளது. அதுவும் காவல்துறை எந்த அறிக்கையையும் தருவதற்கு முன்னால்.

இந்நிலையில் வாய் கிழிய அன்று நமக்குச் சொன்ன செய்திகளுக்கு என்ன ஆதாரம்?

எல்லாம் முன்னரே முடிவுச் செய்யப் பட்ட அனுமானங்கள். எல்லாம் இஸ்லாத்திற்கெதிரான வெறியின் வெளிப்பாடு!

இந்தத் தாக்குதல் யாரால்? எதற்காக என்பவையெல்லாம் ஓரிரு ஆண்டுகளிலோ அல்லது 10 வருடங்களுக்குப் பின்னரோ வெளிவரும். அதற்குள், இன்னும் பல தீவிரவாத தாக்குதல்களை நடத்தி அவற்றில் வீழும் பிணங்களின் கீழ் இந்தத் தாக்குதல் பற்றிய உண்மைகளை மறைத்து விடுவார்கள்.

ஆகவே தான் இப்போது உண்மைகள் வெளியே வந்து விடாமல் தடுத்து விடுகின்றார்கள். அதன்பின் அது அந்த உண்மைகள் வெளியே வருவதைப் பற்றிக் இவர்களுக்குக் கவலை இல்லை, மக்களும் கவலைப்படமாட்டார்கள். ஒவ்வொரு நிகழ்வும் நடந்த உடன் என்ன சொல்லப் படுகின்றதோ அதுவே நிற்கும் நிலைக்கும்.

## தாக்குதல் நடத்தியவர்களை பாதுகாப்பு படையினர் அறிவார்களா?

தாக்குதலை நடத்தியவர்களை பிரான்ஸ் நாட்டுப் பாதுகாப்புப் படையினர் நன்றாக அறிவார்கள் என்ற செய்தியும் உடனுக்குடன் நமக்கு வந்துக் கொண்டிருந்தன.

அதே நேரத்தில் பிரான்ஸ் நாட்டுக் காவல் துறையினர் பாதுகாப்புப் படையினர் அரசுக்கு எந்த முறையான அறிக்கைகளையும் தந்திடவில்லை. பத்திரிக்கைகளுக்கும், ஊடகங்களுக்கும்தான் செய்தியைச் சொல்லு கின்றார்கள். மக்களின் கவனத்தைத் திருப்பிட வும் மக்களின் மனதில் இஸ்லாம் என்றால் தீவிரவாதம் என்பதைப் பதிய வைக்கவும்.

அப்படி பிரான்ஸ் நாட்டுப்பாதுகாப்புத் துறையினர் குறிப்பிட்ட தீவிரவாதியைப் பற்றியும் சில ஆய்வுகளை மேற்கொண்டுள் ளன ஊடகங்கள். இந்த ஆய்வில் அவர்கள் கண்டெடுத்தவற்றை இப்படி வரிசைப் படுத்தலாம்.

பிரான்ஸ் காவல்துறை மற்றும் அதன் பாதுகாப்புப்படையினர் நீண்ட நாள்க ளாகவே சில முஸ்லிம் இளைஞர்களைப் பின் தொடர்ந்து வருகின்றார்கள். இந்த முஸ்லிம் இளைஞர்கள் மீது பொய் வழக்குகளும் ஜோடித்து சிறையிலும் அடைத்திருக் கின்றார்கள். ஆனால், அவர்களுக்கெதிராக எந்தச் சாட்சியத்தையும் கொண்டு வந்திட இயலவில்லை. முடிவில் குற்றமற்றவர்கள் என பிரான்ஸ் நாட்டுக் நீதித் துறையாலேயே விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

“சார்லி ஹெப்டோ” தாக்குதலுக்குப் பின்னும் இது நடந்திருக்கின்றது. இந்தச் செய்தியை Global News க்குப் பின் நமது Times of India டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழும் வெளியிட்டிருந்தது.

இந்த மொத்த தாக்குதலுக்கும் சலா அப்துல்லாய் என்பவர்தான் மூளை என்றார் கள். அவனை கைதும் செய்தார்கள். ஆனால் அவனுடைய தந்தை பத்திரிக்கைகளுக்கு அளித்தப் பேட்டியில் என் மகன் என் குடும்பத்தோடுதான் வாழ்ந்து கொண்டிருக் கிறான். அவனுடைய வாழ்க்கையை நாங்கள் கண்காணித்துக் கொண்டிருக் கின்றோம். அவன் எந்தத் தீவிரவாதி அமைப்போடும் தொடர்புடையவன் அல்ல.

TOI:19.11.2015

குளோபல் நீயூஸ் தரும் செய்தியையும் டைம்ஸ் ஆஃப் இந்தியா முதலான பத்திரிகை கள் தரும் செய்திகளையும் வைத்துப்பார்த் தால் நம் நாட்டில் ஹைதராபாத்திலுள்ள மக்கா மஸ்ஜித் தாக்குதல், அஜ்மீர் தர்கா ஷரீஃப் தாக்குதல், சம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் தாக்குதல், நாடாளுமன்றத் தாக்குதல், 26/11 தாக்குதல் போன்றதொரு தாக்குதல்தான். இப்போது பிரான்ஸில் நடத்தப்பட்டுள்ளது அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்படு கின்றார்கள். இனி பிரான்சில் கைது செய்யப் பட்ட இவர்களின் தலையில் அனைத்தையும் வைத்துக் கட்டி விடுவார்கள்.

தேவையானால் ஒரு நொண்டிக் காரணத்தையும் சொல்லி, சில முஸ்லிம்களைத் தூக்கிலும் போடுவார்கள். அந்தக் காரணம் நாட்டு மக்களின் கூட்டு மனசாட்சியை திருப்தி படுத்துவதாகவும் இருக்கலாம்.

எந்த ஆதாரமும் காட்டப்படவில்லை என்பதை ஊடகங்கள் இப்படிக் கூறுகின்றன.

“President Hollarde assumed that Jihadhis were behid the attacks, but when he made his speech there was no evidence from police sources to support his statements”

Global News 18.11.2015

இதன் பொருள்,

பிரான்ஸ் நாட்டு குடியரசு தலைவர் ஹோலார்ட் தாக்குதலை நடத்தியவர்கள் ஜிஹாதிகள் என கற்பனை செய்து கொண்டார். ஆனால் அவர் மக்களிடம் பேசிடும்போது காவல் துறையிடமிருந்து எந்த ஆதாரத்தையும் காட்டிடவில்லை.

* * *

# பிரான்சில் நடைபெற்ற இந்தத் தாக்குதல்களுக்கு நான் மன்னிப்புக் கேட்க மாட்டேன்!

சவூதியிலிருந்து ஹாலித் அல் மாயினாடன் பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதம்

பாரிசில் நடந்த தாக்குதல் இன்றளவும் பத்திரிக்கைகளில் தலைப்புச் செய்தியாக வந்து கொண்டிருக்கின்றன. சமூக ஊடகங்களிலும் அவை முககிய இடத்தைப் பிடித்து வருகின்றன.

இந்தத் தற்கொலை தாக்குதலை நடத்து கின்றவர்கள், பெய்ரூத் புறநகரில் 40 பேரை கொலை செய்த சில நாட்களிலேயே நடத்துகின்றனர்.

இந்தப் பாரிஸ் தாக்குதல்கள் சினாய் பகுதியில் விமானம்வெடித்த சிதறியதற்குப் பின் நடக்கின்றது. இந்த விமானம் வெடித்துச் சிதறியதில் 200 பேர் உயிரிழந்தார்கள்.

டோயிஷ் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் தன்னைத்தானே இஸ்லாமிய அரசு என அறிவித்துக் கொண்டார்கள். இந்தத் தாக்குதல்களையெல்லாம் நடத்திய தாக பொறுப்பேற்றுக் கொண்டதாக நமக்குச் சொல்லப்படுகிறது.

பல மேலை நாட்டு பத்திரிக்கையாளர் களிடமிருந்து எனக்கு தொலைபேசி அழைப்புகள் வந்தன. அவர்கள் என்னிடம் சவூதியின் கருத்து இதில் என்ன எனக் கேட்டார்கள். நான அவர்களிடம் நாம் அனைவருமே இதுபோன்ற தாக்குதல்களைக் கண்டிக்கின்றோம். இந்தத் தாக்குதல்களால் எந்தப் பயனுமில்லை. ஆனால் இந்தத் தாக்குதல்கள், நமது இஸ்லாமிய சமுதாயத்தை யும் இஸ்லாமிய மார்க்கத்தையும் மலிவாகவும் இழிவாகவும் மக்கள் மத்தியில் காட்டுகின்றது.

என்னை அழைத்த ஒரு பத்திரிக்கை யாளர் (சவூதியிலுள்ள) நாங்கள் (பத்திரிக்கை யாளர்கள்) இதைக் கண்டிக்கின்றோமா?



எனக் கேட்டார். நான் அவரை சப்தம் போட்டேன். எதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்? மர்ம கும்பல்கள் செய்யும் கொலை பாதகங்கள், நாச வேலைகள் இவற்றிற்காக நாங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டுமா? எனக் கேட்டேன். பின்னர் ஏதேனும் பாவச் செயல்களைச் செய்துவிட்டு பழியை இஸ்லாத்தின் மேல் போடு கின்றார்கள். இதற்காக நாம் மன்னிப்புக் கேட்க வேண்டுமா? நான் அவரிடம் சொன்னேன் நான் மன்னிப்புக் கேட்க போவதில்லை.

ஒரு சர்வதேச புலன் விசாரணை நடக்கட்டும். அதன் முடிவுகளை மக்கள் மன்றத்தில் வைக்கட்டும். நான் சதித்திட்டங் களில் நம்பிக்கை இல்லாதவன். ஆனால் 9/11 தாக்குதலிருந்து தொடங்கி இன்றளவும் நடக்கும் தாக்குதல்களைப் பொறுத்தவரை பல கேள்விகளுக்குப் பதிலே கிடைப்ப தில்லை.

ஒவ்வொரு தாக்குதலுக்கும் பின்னர் ஒரு பாஸ் போர்ட் (Passport) கடவுச்சீட்டு, தவறாமல் கிடைத்து விடுகின்றதே அது எப்படி?

நம்மவர்கள் எல்லோரும் தாக்குதலை நடத்திட போகும் போதெல்லாம் ஒரு கடவுச் சீட்டை (Passport) பாஸ்போர்ட்டை சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு செல்கின்றார்கள் அதெப்படி?

அவர்கள் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு செல்லும் பாஸ்போர்ட்டுகள் (Made of nonflamable material and resistant to fire and bombs) எரியாத அதிசயப் பொருள்களால் செய்யப்பட்டவை. அவை நெருப்பினுள் எரியாது, குண்டுகள் வைத்தால் கிழியாது, அதெப்படி?

நியூயார்க் (அமெரிக்காவின் முக்கிய நகரம்) இல் 9/11ல் இன் போது சவூதி பாஸ்போர்ட் அப்படியே புத்தம் புதிதாகக் கிடைத்தது. பாரிசில் சிரியன் பாஸ்போர்ட், பின்னர், இவையெல்லாம் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டன.

அவை போலி எனக் கண்டு பிடிப்பதற்குமுன் சவூதி, இஸ்லாம், முஸ்லிம்கள், இவர்களெல்லாம் குற்றவாளிக் கூண்டுகளில் ஏற்றப்பட்டு விசாரணைகளும் நடத்தப் பட்டுவிட்டன.

அதன் பின்னர் அதே பெயரில் அதே (நம்பரில்) எண்களில் பதினொரு பாஸ்போர்ட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

நாம் இஸ்லாத்திற்கு எதிராக வெறுப்பு பிரச்சாரங்களைச் செய்து கொண்டிருப்பவர்களின் இனவெறிகளுக்குப் போதுமான அளவில் பலியாகிவிட்டோம். இனியாவது உண்மை வெளியே வரட்டும்!

தீவிரவாத அமைப்புகளை உருவாக்கி அவற்றைக் கொண்டு தாக்குதல்களை நடத்தி விட்டு வசைபாடுபவர்களின் பிடியிலிருந்து விடுபடுவோம்.

நடந்த நிகழ்வுகளை நான் கண்டிக்கின்றேன். ஆனால் எந்த விதத்திலும் இஸ்லாமோ, முஸ்லிம்களோ, பொறுப்பில்லாத நிகழ்வுகளுக்காக என்னை மன்னிப்புக் கேட்க கட்டாயப்படுத்தாதீர்கள்.

பாலஸ்தீனர்களை ஈவு இரக்கமின்றி கொலை செய்த இஸ்ரேல் பிரதமர் நதான் யாஹூவோ, யூதர்களோ மன்னிப்பு கேட்டார்களா?

மியான்மரில் அப்பாவி முஸ்லிம்களை ஆயிரக்கணக்கில் கொலை செய்ததற்காக தலாய் லாமாவோ, மியான்மரின் ஆட்சித் தலைவர் ஆங்கச் சான்வோ 'Aung San' அல்லது சவூகியோ மன்னிப்புக் கேட்டார்களா? குஜராத்தில் அப்பாவி முஸ்லிம்களைக் கொலை செய்தற்காக இந்தியாவின் பிரதமர் மோடி மன்னிப்புக் கேட்டாரா? ஈராக்கில் லட்சக்கணக்கான முஸ்லிம்களைக் கொலை செய்ததற்காக புஷ், பிளேயர், ரம்ஸ்பீல்டு, சென்னி, ஊல்ஃப்விச்ட் பிரிமர் யாராவது மன்னிப்புக் கேட்டார்களா?

பாரிஸ் தாக்குதலுக்கு எதிராக உலகமே அணிதிரளும் போது துருக்கியில் டெய்ஸ் என்ற அமைப்பு அன்காராவல் (துருக்கியின் தலை நகரில்) ஒரு தாக்குதலை நடத்தி 100 பேரை கொலை செய்ததை யாரும் கண்டு கொள்ளவில்லையே ஏன்?


இப்படி சிலருக்குக் கண்ணீர் வடிப்பதும் இன்னும் சிலரைக் கண்டு கொள்ளாமல் இருப்பதும் எனக்கு உடன்பாடான விஷயமல்ல.

இந்த தாக்குதல்களை முஸ்லிம்கள் நடத்தியதாக சொல்லப்படுகின்றது. அவையெல்லாம் சில நிழல் அமைப்புகளால் நடத்தப்படுகின்றன. அவை மேலை நாட்டு முகவர்களின் ஆக்கம். அவை முஸ்லிம்களின் பிரதிநிதிகள் அல்ல. அதனால் நான் மன்னிப்புக் கேட்க மாட்டேன்.

**ஹாலில் அலாமீயென்**
**தமிழ்வடிவம் எம்.ஜி.எம்.**

Inputs from Imthiyas Ahamed &
Harris Mohammed- NGT

# பிரான்ஸ் தாக்குதல் – அமெரிக்க ஆயுத நிறுவனங்கள் மகிழ்ச்சி!



உலகெங்கும் போர்கள் நடந்து கொண்டு இருந்தால் அமெரிக்காவின் ஆயுதங்கள் விற்றுக் கொண்டே இருக்கும். இதனால் நல்ல இலாபம் அமெரிக்க ஆயுத கம்பெனிகளுக்கு!

இந்த ஆயுத கம்பெனிகளில் பெரும் பாலானவை அமெரிக்க அரசியல்வாதிகளின் கைகளின் இருப்பவை. அமெரிக்காவின் அன்றைய அதிபர் புஷ் இந்த ஆயுதக் கம்பெனிகளில் முதலீடு செய்துள்ளார்கள்.

இவர்கள் ஆப்கானிஸ்தான், ஈராக் இப்போது சிரியா, லிபியா, யமன், சோமாலியா, பிலிப்பைன்ஸ் என போர்களை நிகழ்த்தும் போதெல்லாம் இவர்களுக்கு நல்ல ஆயுத விற்பனை நல்ல இலாபம் கிடைக்கும்.

இந்த இலாபம் நேரடியாக இவர்களின் சட்டைப் பைக்குள் செல்லும்.

ஆனால் போரில் தோற்றால் அந்த நஷ்டம் நேரடியாக அமெரிக்க அரசின் கருவூலத்திற்குத்தான். எந்த விதத்திலும் ஆயுத தொழிற்சாலைகளில் முதலீடு செய்திருக்கும் அரசியல்வாதிகளுக்கு நஷ்டங்கள் இல்லை.

இதைத்தான் அமெரிக்காவின் ஆட்சி மன்றக் குழு என்ற செனட் சபையில் ஒருவர் இப்படிச் சொன்னார்.

They have privatised all profits and nationalised all losses.

அவர்கள் இலாபங்களையெல்லாம் தனியாருக்குத் தந்து விட்டார்கள். நஷ்டங்களையெல்லாம் நாட்டுடமை ஆக்கிவிட்டார்கள்.

'This is American business of war'

இதுதான் அமெரிக்காவின் போர் வியாபாரம்.

(Source: Future Fast Forward by Mathias Chang: Thinker Publications)

இப்படி இலாபமடையும் இந்த நிறுவனங்களின் பட்டியல் பின் வருமாறு:

1. Lockhead Martin லாக் கீட் மார்ட்டின் இதில் பல அமெரிக்க ஆட்சி மன்ற உறுப் பினர்கள் முதலீடு செய்திருக்கின்றார்கள்.

2. ரேதியான் Raytheon

3. நார்த்ரோம் குருமென் Northrop ; Grummam

4. ஜெனரல் டைனமிக்ஸ் General Dynamics

இப்போது பிரான்ஸ் அதிகமான தாக்குதல்களை நடத்துவேன் என அறிவித்துள்ளது. அதனால் இந்த ஆயுத

உற்பத்தி கம்பெனிகள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைக்கின்றன என்கின்றார் பிரபல அமெரிக்க எழுத்தாளர் "Tom Cahill" "டோம் கேஹில்"

பங்குச் சந்தையில் (Stock Market) இல் இந்த நிறுவனங்களின் பங்குகள் நல்ல விலையில் விற்கின்றன என்பதையும் அவர் படம் போட்டுக் காட்டுகின்றார்.

இந்த நிறுவனங்களில் அமெரிக்கா ISIL என்ற இஸ்லாமிய அரசு என்ற அமைப்பிற் கெதிராக பயன்படுத்தும் ஏவுகணைகளின் பெயர் Hellfire Missiles ஹெல்ஃபயர் ஏவுகணைகள். இதனை லாக்கீட் மார்ட்டின் Lockheed Martin என்ற கம்பெனிதான் தயார் செய்கின்றது.

இப்படி ஒவ்வொரு நிறுவனமும் தாக்கு தலுக்கான ஒரு பகுதிக்கான ஆயுதங்களைத் தயார் செய்கின்றன. இதனால் ஆயுத தயாரிப்பு களில் ஈடுபடும் இந்த நிறுவனங்களிடையே வியாபாரப் போட்டி இல்லை. ஒரே ஆயுதத்தைப் பல நிறுவனங்கள் தயாரித்தால் தான் போட்டி வரும். அது இல்லை.

இப்படித் தங்கள் நிறுவனங்களை வாழ வைத்திடவும் இலாபங்களைச் சுருட்டிக் கொள்ளவும் போர்களை தயார் செய்கின்றார் கள் அமெரிக்கர்கள் என்கின்றார் டாம் கேஹில் தனது முகநூலில்.

(Source:tomv.cahil@gmail.com)

ஆயுத விற்பனையில் பெரும் இலாபத்தை ஈட்டிக் கொள்ளும் இந்தக் கம்பெனிகள் அரசுக்கு சில உதவிகளைச் செய்கின்றன. அவை,

1. போருக்கான பிரச்சாரங்களுக்கு பணத்தை அள்ளிக் கொட்டுகின்றன. இந்தப் பிரச்சாரங்கள், சதாம் ஹூஸைனால் ஆபத்து, தாலிபான்களால் ஆபத்து, இப்போது ISIL என்ற "இஸ்லாம் அரசு" தாக்குதல் என்பன வாக அமைக்கின்றன.

இந்தப் பிரச்சாரங்களால், போர்கள் மூளும், முழுச் சண்டை நடக்கும். இவர்களுக்கு ஆயுதம் விற்பனையாகும்.

2. தேர்தல் நேரங்களில் தங்கள் பங்குதாரர்களை ஜெயிக்க வைக்க பிரச்சாரத்திற்காக பணம் தருகின்றன.

3. அத்தோடு பிரச்சாரங்களைச் செய்கின்ற கம்பெனிகளுக்கு தேவையான எல்லா உதவிகளையும் செய்து தருகின்றன.

4. உலகில் தீவிரவாதத்தை வளர்ப்பதற்கென பல்வேறு குழுக்களை அமெரிக்க உளவுத்துறை நிறுவுகின்றது. அந்தக் குழுக்களை வளர்ப்பதற்கு இந்த நிறுவனங்கள் பணம் தருகின்றன.

பின்னர் அந்தக் குழுக்களை ஏவிவிட்டே தாக்குதல்களை நடத்துகின்றார்கள். பின்னர் அந்தக் குழுக்களுக்கு எதிராகப் போர் எனப் பிரச்சாரம் பிரகடனம்.

இதைத்தான் அமெரிக்க Global War on Terrorism GWT தீவிரவாதத்திற்கு எதிரான உலகப் போர் என அழைக்கின்றது. இதற்கு இன்னொரு பெயர் சிலுவை யுத்தம் CRUSADE 2.0 என்பதாகும்.

இந்தப் போர் குறையாமல் 2025 வரை தொடர்ந்து நடக்கும். இடையே பல பெயர்கள் மாறி மாறி வரும். அவற்றில் சில ஈரான் அபாயம், பின்லேடன் - தாலிபன் - முல்லா உமர் - அல் காயிதா - இஸ்லாமிக் ஜிஹாத் - ISIL - என்பவனாக அமையும். இதர பெயர்கள் பின்னாளில் வரும்.

அனைத்தும் அமெரிக்கா முதலான மேலை நாடுகளின் வேலை. அதைப் புரிந்து கொண்டால் உலக நிகழ்வுகளைப் புரிந்து கொள்வது எளிது.

அன்றாடம் வரும் செய்திகளுக்குப் பின்னால் சென்றால் ஏமாற்றமே பிடிக்கும்.

அல்லாஹ் காப்பனாக!

**மு. குலாம் முஹம்மத்**

Inputs from : Imthiyas & Mohamed Haris

தலையங்கம்

# முஸ்லிம்கள் பாரிசில் நடந்தது போன்ற தாக்குதல்களை நடத்த மாட்டார்கள் ஏன்!

உலக மக்களின் கண்களில் முஸ்லிம்களைத் தீவிரவாதிகள் என்றும், இஸ்லாத்தால் உந்தப்பட்டுத்தான் முஸ்லிம்கள் பாரிஸ் தாக்குதல் போன்றவற்றைச் நடத்துகின்றார்கள் என்றும் காட்டிட பாரிஸ் தாக்குதல் 13/11 பயன்படுத்தப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக, 'OPEN' ஓப்பன் என்ற பிரபல்யமான ஆங்கிலப் பத்திரிகை இப்படி எழுதுகின்றது.

This is a war waged by men who kill for better life after their own death . . . . the killers flashing their kalashnikor and invoking their God storm the football match crash into the rock concert, storm the football match, fire at the cafe, because this life is a struggle, a blood sport, and the after life is a pure bliss. Paris open the door to paradise where virgins are waiting.. . (Open 30th November 2015)

இதன் பொருள்,

இந்தப் போரை நடத்துகின்றவர்கள் கொலைகளைச் செய்கின்றார்கள். ஏனெனில் அவர்களின் மரணத்திற்குப் பின் அவர்களுக்கு சிறந்ததொரு வாழ்க்கைக் கிடைக்கும் என்பதற்காக! கொலை செய்தவர்கள் தங்கள் துப்பாக்கிகளைத் திறந்து குண்டு மழைகளைப் பொழிகின்றார்கள். தங்கள் கடவுளின் பெயரை உச்சரிக்கின்றார்கள். களத்தில் புயலாய் தாக்குகின்றார்கள்.

ராக் இசை நடந்த இடத்தையும் தாக்குகின்றார்கள். மக்கள் குழுமுமிடங்களில் சுடுகின்றார்கள். ஏனெனில் இந்த வாழ்க்கை ஒரு போராட்டம். ஓர் இரத்த விளை யாட்டு. அடுத்த வாழ்க்கை முழுமையாக சுகந்தான், பாரிஸ் சொர்க்கத்தின் கதவுளைத் திறக்கின்றது. அங்கே கன்னிப் பெண்கள் காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**- ஓப்பன் (**Open: November 30,2015**)**

பாரிஸ் தாக்குதலை நடத்தியவர்கள் பற்றி இப்படி பத்திப் பத்தியாக எழுதுகின்றது இந்தப் பத்திரிக்கை. ஏனைய பத்திரிகைகளும் இதைப் போலவே எழுதுகின்றன.

இவற்றில் உள்ளடக்கங்களைச் சுருக்கமாகச் சொன்னால்,

இந்த வாழ்க்கைக்குப் பின் இன்னொரு வாழ்க்கை இருக்கின்றது, அந்த வாழ்க்கையில் சுகம், சொர்க்கம் இவற்றைப் பெறுவதற்காக முஸ்லிம்கள், இங்கே கொலை செய்கின்றார்கள். இரத்த விளையாட்டுக்களை விளையாடுகின்றார்கள் என்கின்றார்கள்.

## இவர்கள் ஏன் இப்படி எழுதுகின்றார்கள்?

மனித வாழ்க்கை என்பது இந்த உலகத்தோடு முடிந்துவிடுவதில்லை. அது மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கை வரை தொடருகின்றது என்பது இஸ்லாத்தின் அடிப்படைகளுள் ஒன்று. இஸ்லாம் இன்னும் சொல்லுகின்றது,

இந்த வாழ்க்கையில் மனிதன், இறை வணக்கம், நற்செயல்கள், தான தருமங்கள் என நன்மைகளை நிரம்பவே செய்திட வேண்டும். பாவங்கள் அநியாயங்கள், இவற்றிலிருந்து தன்னை முற்றாக விடுவிடுத்துக் கொள்ள வேண்டும். இப்படியொரு வாழ்க்கையை அவன் வாழ்ந்தால் அவன் "மறுமை" என்றழைக்கப்படும், மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் வெற்றி பெறுவான். அவனுக்கு அங்கே நிரந்தர வாழ்க்கையும் நிம்மதியும் சுகமான வாழ்க்கையும் கிடைக்கும் எனக் கூறுகின்றது. இதனை நம்புவது இஸ்லாத்தின் அடிப்படைத் தூண்களுள் ஒன்று. இதை அழுத்தமாக நம்புகின்ற ஒருவனே முஸ்லிம்.

ஏழைகளுக்கு உணவு வழங்கிட மறுப்பவன் அந்த ஏழைகளுக்கு உணவு வழங்கிட மற்றவர்களைத் தூண்டாதவன் மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையைப் பொய்யாக்கி விட்டான். அதன் மூலம் அவன் எந்த மார்க்கத்தை அதாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகக் காட்டிக் கொண்டிருக்கின்றானோ அதைப் பொய்யாக்கி விட்டான் என்கின்றது இஸ்லாம். அதாவது இஸ்லாத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்கின்றது.

இறைவன் இதைப் இப்படிப் பிரகடனப் படுத்துகின்றான்,

“நபியே! தீனை மார்க்கத்தை (இஸ்லாத்தை) பொய்யாக்கின்றானே, அவனை நீர் பார்த்தீரா!”

“அவன் தான் அநாதைகளை விரட்டு கின்றான். ஏழைகளுக்கு உணவளிக்க தூண்டு வதுமில்லை”

**அல்குர்ஆன் : அத்தியாயம் 107**

இத்தகையவர்கள் தொழுகின்றார்கள். அதாவது இறைவனை வணங்குகின்றார்கள். ஆனால் அது பிற மக்களிடம் நாங்கள் வணங்குகின்றவர்களாக இருக்கின்றோம் எனக் காட்டிக் கொள்வதற்காகவே,

அதையும் பொட்டில் அறைந்தாற் போல் இறைவன் இப்படிக் கூறுகின்றான்,

“அவர்கள் பிறருக்கு காண்பிப்பதற் காகவே தொழுகின்றார்கள்.”

**(அல்குர்ஆன் 107: 6)**

உண்மையில் அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்றால் “அற்பமான பொருட்களை கூட அடுத்தவர்களுக்கு கொடுக்காமல் தடுத்துவிடுகின்றார்கள்”

**(அல்குர்ஆன் 107:7)**

ஏழைகளுக்கும், இலாதவர்களுக்கும் வழங்கி வாழ்ந்திட வேண்டும். அல்லது குறைந்த பட்சம் அடுத்தவர்களை வழங்கிட தூண்ட வேண்டும்.

இதையெல்லாம் செய்யாதவர்கள் நாங்கள் இறைவனை வணங்குகின்றோம் எனப் பீற்றிக் கொள்வதில் எந்தப் பயனும் இல்லை. அவர்கள் மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் நஷ்டமடைந்தவர்களாக இறைவனிடத்தில் நிற்பார்கள்.

இது மறுமை வாழ்க்கையைப் பற்றி ஒரு சிறுவிளக்கம்.

அதே நேரத்தில் அநியாயங்கள், தீமைகள் நம்மைச் சுற்றி தலைவிரித்தாடிடும் போது அவற்றை இறைவனையும், இறப்பிற்குப் பின்னால் வரும் வாழ்க்கையை யும் நம்புகின்றவர்கள் தடுத்தே ஆக வேண்டும். அந்தப் பாவங்களை நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மனித சமுதாயத்திற்கு ஒட்டு மொத்த மாக பயன்பல பயக்கும் இந்தப் பணிகளைச் செய்திடும் போது, இறைவனை நம்புகின்ற வர்கள் இழப்புகளைச் சந்திக்கலாம், சில நேரங் களில் தீமைகளில் திளைத்து நிற்பவர்கள், இவர்களின் உயிரைக் கூடப் பறித்திடலாம். இது போன்ற, பெரும் இழப்புகள் வந்து விடுமே என அஞ்சி அதர்மம், அநீதி, பாவங்கள் இவற்றை வளரவிட்டு வாளாவிருப்பதில் மனிதம் இல்லை. நீங்கள் இந்த உலகில் ஏற்படும் இழப்புகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அந்த அதர்மங்களை, அநியாயங்களை நெஞ்சுரத்தோடு எதிர்த்து நில்லுங்கள். அப்படிச் செய்தால் உங்களுக்கு மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் நல்ல சுவர்க்கம் கிடைக்கும் என வாக்களிக்கின்றது இஸ்லாம்.

இறைவன் முஸ்லிம்களைப் பார்த்து இப்படிக் கூறுகின்றான்.

“மனிதர்களுக்காகத் தோற்றுவிக்கப் பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள். ஏனெனில் நீங்கள், நல்லதைச் செய்ய ஏவுகின்றீர்கள். தீயதை விட்டும் தடுக்கின்றீர்கள். இன்னும் அல்லாஹ் வின் மேல் திடமாக நம்பிக்கை கொள் கின்றீர்கள்”

**அல்குர்ஆன் அத்தியாயம் 3: வசனம் 110**

இன்னும் இறைவன் கூறுகின்றான்,

“இவர்கள் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்கின்றார்கள். நல்லதை செய்ய ஏவுகின்றார்கள். தீமையை விட்டும் விலக்குகின்றார்கள். மேலும், நன்மை செய்வதற்கு விரைகின்றார்கள். இவர்களே நல்லடியார்களில் நின்றுமுள்ளவர்கள்.

“இவர்கள் செய்யும் எந்த நன்மையும் நற்கூலி கொடுக்கப்படாமல் புறக்கணிக்கப் படாது. அன்றியும், அல்லாஹ் பயபக்தி உடையோரை நன்றாக அறிகின்றான்”

**அல்குர்ஆன் அத்தியாயம் :3 வசனங்கள் 114,115**

நன்மையை ஏவுகின்ற போதும் தீமைகளைத் தடுக்கின்றபோதும் பாவங்களை அநியாயங்களை அதர்மங்களை கட்டுப் பாடில்லாமல் கட்டவிழ்த்து விடுகின்ற சமுதாயங்களைத் தடுக்கின்ற போதும், போர்கள் கூட வந்துவிடலாம். அப்போது கூட ஆயுதமேந்தி எதிரே வருபவர்களைத் தவிர எந்த அப்பாவிகளையும் கைவைப்பதற்கு எள் மூக்கின் அளவு கூட இஸ்லாத்தில் அனுமதி இல்லை. போர் அல்லாத காலங் களிலும் ஓர் அப்பாவி உயிரை பறிப்பவன் நிச்சயமாக முஸ்லிமாக இருக்க மாட்டான்.

அவன் மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் மொத்த மனித இனத்தையும் கொலை செய்தால் என்ன தண்டனையோ அந்தத் தண்டனையை பெறுவான். இதை இறைவன், இப்படி அறிவுறுத்துகின்றான்,

"இதன் காரணமாகவே, நிச்சயமாக எவனொருவன் கொலைக்குப் பதிலாகவோ, அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தைத் தடுப்பதற்காகவோ அன்றி மற்றொருவரை கொலை செய்கின்றானோ அவன் மனிதர் களில் யாவரையும் கொலை செய்தவன் போலாவான். மேலும் எவர் ஒருவர் ஓர் ஆத்மாவை வாழ வைக்கின்றாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவர் போலாவார்"

**(அல்குர்ஆன் அத்தியாயம் : 5 வசனம் : 32)**

முஸ்லிம்களுக்கு, அல்லாஹ்வை நம்பு கின்றவர்களுக்கு, மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையே முக்கியமானது, என்பது பெரும் உண்மைதான். அதனால் அவர்கள் பாரிசில் மனமகிழ்வுக்காக வந்த, அதே நேரத்தில், எந்தப் பாவமும் அறியாத அப்பாவிகளை நிச்சயமாக கொலை செய்ய மாட்டார்கள். அதன் வழி ஒட்டு மொத்தமான மனித இனத்தையும் கொலை செய்த பழியைச் சுமந்து பாவத்தைச் செய்து கொண்டு தங்கள் மறுமையை மரணத்திற்குப் பின் வரும் வாழ்க்கையை பாழாக்கிக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் இந்த வாழ்க்கையை விட மறுஉலக வாழ்க்கையை யே அதிகமாக விரும்புவார்கள். ஏனெனில் அது நிலையானது நிரந்தரமானது.

இதனால் தான் அடித்துக் கூறுகின்றோம் இது போன்ற தாக்குதல்களை முஸ்லிம்கள் நிச்சயமாக செய்யமாட்டார்கள்.

பாரிஸ் தாக்குதலுக்குப் பின் உலக அரங்கில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை உற்றுப் பாருங்கள் ஒன்று துலங்கும். அது,

முஸ்லிம் உலகை தரைமட்டமாக்கும் வேலையைச் செய்திட உலக நாடுகளை ஒருமுகப்படுத்திடும் வேலை வெகு லாவகமாக நடந்து கொண்டிருக்கின்றது.

பிரிட்டன் என்ற ஆங்கில நாடு அமெரிக்காவுடன் அணி சேர்ந்ததை மீண்டும் உறுதிபடுத்தியுள்ளது.

**(தி ஹிந்து, 4.12.2015)**

ஜெர்மனி, நாங்களும் உங்கள் அணியில் உறுதியாக இருப்போம் என மீண்டும் உறுதி பூண்டுள்ளது.

**(தி ஹிந்து, 5.12.2015)**

இந்தியா, ஐ.எஸ். என்ற பூச்சாண்டியைக் காட்டி முஸ்லிம்களையும் ஒட்டுமொத்த மாகவும், முஸ்லிம்கள் நடத்தும் கல்விக் கூடங்களைக் குறிப்பாகவும் கலவரப்படுத்தி வருகின்றார்கள். ஒரு படி மேலே போய் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கி வருகின்றார்கள். நம் நாட்டுப் பெண்கள், அவர்களின் கைகளில் சிக்கியபோது அவர்கள் எப்படி கண்ணியமாக நடந்து கொண்டார்கள் என்பதையெல்லாம் காற்றிலே பறக்கவிட்டு விட்டோம்.

இந்தப் பாரிஸ் தாக்குதல்கள், முஸ்லிம் களைக் கலவரப்படுத்தியுள்ளன. அமெரிக்கா வின் அணியை வலுப்படுத்தியுள்ளது.

அமெரிக்கா நடத்தும் இஸ்லாதிற்கெதி ரான போரில் எல்லா நாடுகளும் ஓர் அடங்காத வெறியுடன் அணி சேர்ந்து வருகின்றன. இந்த நாடுகளின் வெறிக்கு இப்போது சிரியா இலக்கு. அங்குள்ள இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. முஸ்லிம்கள் அகதிகளாக தாக்குதல் நடத்தியவர்களின் நாடுகளிலே தஞ்சம் புகுகின்றனர். என்னே அவலம்.

சிரியாதான் - சாம் பகுதியின் ரோமபேரசின் பிடியிலிருந்து முதன் முதலில் இஸ்லாத்தின் பிடியில் வந்தது. 1095 முதல் 1247 வரை நடந்த சிலுவைப் போர்களின் போதும் அவர்களால் சிரியாவை மீட்க முடியவில்லை.

சிலுவைப் போர் 2.0 என்கிறார்கள். Refer John Feffer Crusade 2.0 The West's Resurgent war in Islaam.

அமெரிக்காவும் மேலை நாடுகளும் இந்த சிலுவை யுத்தம் 2.0க்கு வைத்த தற்போதைய பெயர் GWT - Global War on Terrorism. தீவிரவாதத்திற்கு எதிரான உலகமகா யுத்தம். இங்கே தீவிரவாதம் என்பதை இஸ்லாம் எனப்படிக்க வேண்டும்.

இதற்கு முன் அமெரிக்கா வைத்த பெயர் Islamic Threat, Green threat after red threat, PNAC - Project for New American Centrury.

Clash of Civilisation and the demaking of the new world order Default wars. Crusade 2.0

இந்தப் பின்னணிகளோடு பாரிஸ் தாக்குதல்களை பார்க்க வேண்டும்.

**எம்.ஜி.எம்.**

# போர்களின் போது இஸ்லாத்தில் கடைபிக்கவேண்டிய நெறிமுறைகள்!

Qital Fi Sabililah - Fighting in the way of Allah is one aspect of Jihad. This is not an act of mad brutality. It has material and moral function. i.e., self - perservation and perservation of the moral order in the world.

*இதன் பொருள், அல்லாஹ் வழியில் போர் செய்வது ஜிஹாத் இன் ஓர் அம்சம். அது முரட்டுத்தனமாக, முட்டாள்தனமாக குரூரங்களை நிகழ்த்துவதல்ல. அதில் பல ஒழுக்க மாண்புகளும், பௌதீக நெறிகளும் இருக்கின்றன. தன்னடக்கம் உலகில் நல்லொழுக்க என்பனவும் அடங்கும்.*

*போருக்காகப் புறப்படுங்கள், அல்லாஹ்வின் பெயரால் அல்லாஹ்வுக்காக! ஆனால் முதியவர்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள்(*Childern and babies*) ஆகியோரை சீண்டாதீர்கள். அவர்களின் பொருள்களிலிருந்தோ, போரில் கிடைத்தப் பொருள்களிலிருந்தோ திருடாதீர்கள். போர் களத்தில் உங்கள் கரங்களில் கிடைப்பவற்றை ஒன்றாகச் சேருங்கள். நல்லதையே செய்யுங்கள். அல்லாஹ் நல்லொழுக்கம் உடையவர்களையும், அல்லாஹ் அஞ்சும் பயபக்தி உடையவர்களையும் நேசிக்கின்றான்.*

*ஷஹிஹ் புகாரி : அபுதாவூத் :*K. Tabol Jihad *புஹாரி:* Kitab Al Wa'L Siyar (Page1133 in Bhuhari)

### 1400 ஆண்டுகளுக்கு முன். . .

*சிரியாவின் எல்லையிலே போர்! புறப்பட்டார்கள் முஸ்லிம்கள். அவர்களுக்கு அபூபக்கர் (ரழி) அவர்கள் அப்போதைய இஸ்லாமிய உலகின் ஆட்சியின் தலைவர். இப்படி அறிவுரை வழங்கினார்கள்.*

*மக்களே! படை வீரர்களே!! நில்லுங்கள். நான் உங்களுக்குப் பத்துக் கட்டளைகளைத் தருகின்றேன். இவற்றை நீங்கள் போர்களத்தில் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும்.*

*"துரோகம் செய்யாதீர்கள்! அல்லது நேர் வழியிலிருந்து பிறழ்ந்து விடாதீர்கள். இறந்த உடல்களை (கண்டதுண்டமாக வெட்டிக் கிழித்து சின்னா பின்னப்படுத்தக் கூடாது) சிதைக்கக் கூடாது. குழந்தைகள், பெண்கள் முதியவர்கள், இவர்களைக் கொல்லக்கூடாது. மரங்களுக்கு எந்தத் தீங்கையும் செய்யாதீர்கள். அவற்றை நெருப்பு வைத்து எரிக்கக் கூடாது. குறிப்பாக பழம் தரும் - பயன்தரும் - மரங்களை எந்த சேதாரத்திற்கும் உட்படுத்திடக் கூடாது. எதிரிகளின் ஜீவஜந்துக்களை (ஆட்டு மந்தைகள் - பறவைக் கூட்டம்) கொல்லாதீர்கள். உங்கள் உணவுக்காகத் தேவைப் பட்டால் அந்த அளவுக்கு மட்டும் அவற்றை அறுத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் கூடாது. நீங்கள் மக்கள் சேவை செய்யும் சந்நியாசிகளையும், துறவிகளையும் (பாதிரிகளையும், கன்னியாஸ்திரிகளையும்)* i.e. People who have devoted their lives to monastic services. *கடந்து சென்றால் அவர்களை அப்படியே விட்டுவிடுங்கள்"*

Bhuhari P:1133

Abu Jafer Muhammad Sbree Jarir al Tabari Tarif al - Rasal wa'l mulk series I Volume III P:1580

*வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்று! பாட்டுப் பாடும் குமரிப் பெண் ஒருத்தியை அல் முஹாஜிர் பின் அபு உமைய்யா என்ற முஸ்லிம் கவர்னர் முன் அவர்கள் முன் கொண்டு வந்தார்கள். இந்தப் பெண் (கலீபா) இஸ்லாமிய ஆட்சியின் தலைவர் அபூபக்கர் (ரழி) அவர்களை (இழித்து) வசைபாடி திரிந்தவள். பாடல்கள் இட்டை பொருள்கொண்ட வஞ்சகப் புகழ்ச்சியாக இருக்கும். முஹாஜிர் அவர்கள் அந்தக் குமரிப் பெண்ணின் ஒரு கையைத் துண்டித்து விட்டார்கள்.*

*இந்த நிகழ்வை செவிமடுத்த ஆட்சித் தலைவர் அபூபக்ர் (ரழி) அவர்கள் நெஞ்சம் நொந்தார்கள். மஹாஜிர் அவர்களுக்கு இப்படிக் கடிதம் எழுதினார்கள்.*

*"என்னை (இழித்து) வசைபாடிய குமரிப் பெண் ஒருத்தியை நீ (கைவெட்டி விட்டாய்) தண்டித்து விட்டாய் எனக் கேள்விப்பட்டேன். இணை வைத்தவர்களைக் கூட இது போல் பழிதீர்க்க இறைவன் சொல்லவில்லை. இணை வைப்பதுதான் மிகப் பெரிய குற்றம் என்பதை நீங்கள் அறிவீர்கள். பச்சையான துரோகம் செய்பவர்களின் உடல் உறுப்புக்களைக் கூட சிதைக்க அனுமதி இல்லை இறைவனின் சட்டத்தில்.*

"இனி வரும் நாள்களில் இது போன்றவர்களிடம் கருணையோடும், கனிவோடும் நடந்து கொள்ளுங்கள். உடல் உறுப்புக்களைச் சிதைக்காதீர்கள். ஏனெனில் இஃது மிகப் பெரிய குற்றம். இறைவன் இஸ்லாத்தைத் தூய்மையாக்கித் தந்தான். அதேபோல் முஸ்லிம்களையும் தூய்மையாக்கித் தந்தான். அவர்களை கோபாதாபங்களிலிருந்தும், அளவு மீறி செயல்படுவதிலிருந்தும், தூய்மையாக்கித் தந்தான். இறைவனுடைய கோபத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வோம். உங்களுக்கு நன்றாகத் தெரியும், இஸ்லாத்தின் மிகப் பெரிய எதிரிகளெல்லாம் இறைவனின் தூதர், முஹம்மத் (அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர்கள் மீது உண்டாகட்டும்). அவர்களின் கைகளிலே சிக்கினார்கள். இவர்களெல்லாம் வரையறை இன்றி வசைபாடியவர்கள். அத்தனை வசவுகளிலும் இறைவனின் தூதர் அவர்களையே தூற்றினார்கள். இவர்கள் தாம் இறைவனின் தூதர் அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றியவர்கள். பின்னர் அவர்களுக்கு எதிராகப் போர் செய்தார்கள். அத்தனையுமிருந்தும் இறைவனின் தூதர் அவர்கள் அவர்களின் உடல்களை சிதைக்கவில்லை."

Al-Baladhuri: Ansab Al Anhuraj cains Edition

## கிருஸ்தவ வரலாற்றாசிரியர்

சிரியா சென்ற படைத்தளபதிக்கு இஸ்லாமிய ஆட்சியின் தலைவர் கலீஃபா அபூபக்கர் அவர்கள், தந்த அறிவுரைகளைப் படித்த கிருஸ்தவ வரலாற்றாசிரியர் Finlay ஸ்பின்லே என்பவர் இப்படிக் கூறுகின்றார்.

"போர்களின் போது ரோமப் பேரரசர்களும் பழைமையைப் பற்றிப் பிடிக்கும் தீவிர போப்களும் கூட இப்படியொரு போர் விதியைக் கடைபிடித்ததில்லை."

**(ஆதாரம் :** Greece Under the Romans - PP:367-3 by Finaly**)**

இந்தச் சீரிய சேவைகளை வாழ்வாலும், வார்த்தைகளாலும் கடைபிடித்ததால் தான் இறைவனின் இறுதித் தூதர் இறைவனின் சாந்தியும், சமாதானமும் அவர்கள் மீது உண்டாகட்டும். அவர்களின் வாழ்க்கையில் அந்த அதிசயம் இடம் பெற்றது.

அவர்களுடைய வாழ்க்கையின் பத்தாண்டுகள் மதீனாவில் கழிந்தது. இந்த 10 ஆண்டுகளில் தாம் இஸ்லாம் இன்றளவும் நிலை பெறுவதற்கான நிகழ்வுகள் நடந்தேறின.

இந்தப் பத்து ஆண்டுகளில்தாம் எதிரிகள் முஸ்லிம்களை இந்த உலகப்பந்திலிருந்து முற்றாகத் துடைத்தெறிந்திட வேண்டும் என்று கடல் அலைகளைப் போல் அடுக்கடுக்காய் சீறிப் பாய்ந்தார்கள்.

தங்களால் இயன்றளவும் படை திரட்டி வந்து முஸ்லிம்கள் மேல் சீறிப் பாய்ந்தார்கள். இதனால் இந்தப் பத்து ஆண்டுகளில் 82 போர்களை (சில குறிப்புகள் படி 84) போர்களை இறைவனின் இறுதி தூதர் அவர்கள் சந்தித்திட வேண்டியது வந்தது.

அணையுடைத்து வந்த வெள்ளமாய்ப் பாய்ந்த இந்த எதிரிகளை எதிர் கொண்டதில் மிகக் குறைவான சேதங்களே இடம் பெற்றன. உயிர் சேதம் எனக் கொண்டால் முஸ்லிம்களில் இந்த 82 போர்களிலும் இறந்தவர்களின் எண்ணிக்கை 259 பேர் மட்டுமே. எதிர்களில் மடிந்தவர்களின் எண்ணிக்கை 759. ஆக மொத்தமாக இருதரப்பிலும் 10 ஆண்டு போரில் உயிரை இழந்தவர்கள் 1018 பேர் மட்டுமே!

இஸ்லாமியப் போர் சீலங்களின் சிலாக்கியங்களை அறிந்திட வேண்டும் என்றால் Charles the Great - மாவீரன் சார்லஸ் என்று புகழப்படுபவர் நடத்திய ALBIGENSIAN அல்பிஜினிசியன் போர், SAXONS என்ற சாக்சன்ஸ்களுக்கு எதிராக நடத்திய ஒரே போரில் 4,500 பேர்களின் உயிரைப் பறித்தான். அவனுடைய தளபதிகள் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் இவர்களெல்லாம் எதிர்பட்ட போது இப்படிக் கட்டளை இட்டான் 'Kill everyone. Let God know his own.'

"எல்லோரையும் கொலை செய்யுங்கள். கடவுள் தன்னுடையவர்களைத் தெரிந்து கொள்வான்" என்றான்.

இத்தோடு ஐரோப்பாவே முன்னே நின்று நடத்திய முதல் உலகப்போர், இரண்டாம் உலகப்போர் இவற்றில் மடிந்த மக்கள் கூட்டத்தையும், நாடுகளையும், பொருளாதார சேதங்களையும் கணக்குப் பாருங்கள். இஸ்லாம் எத்துணை சீரிய நெறிமுறைகளைக் கொண்டது என்பது புலப்படும். நாம் இஸ்லாமிய வரலாற்றில் 10 ஆண்டுகாலம் போரில் உயிரிழந்தவர்கள் எனக் குறிப்பிடுபவர்கள், ஆயுதமேந்தி போர்களத்தில் நின்றவர்கள் அவர்கள் பாமரர்கள் அல்ல என்பதையும் நினைவு கூருங்கள். ●

# சிரியாவின் உள்நாட்டு யுத்தம் சீரிய சேவை ஆற்றும் அமெரிக்கா மற்றும் ரஷ்யா!



மக்கள் தொகையில் அரைவாசிக்கும் அதிகமானோர் அகதிகளாக்கப் பட்டு விட்டார்கள். லட்சக்கணக்ககானோர் கொல்லப்பட்டுள்ளார்கள். இருந்த போதிலும் இது வரையில் எந்த தீர்வும் எட்டப் படவில்லை. பிரச்சனை இன்னும் முடிவுக்கு வரவில்லை. சிரியாவின் உள்நாட்டு யுத்தத்திற்கு.

ஐ.நா.வின் புள்ளிவிவரப்படி இதுவரை 2,50,000க்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டுள்ளனர். 76 லட்சத்திற்கு அதிகமானோர் அகதிகளாக்கப்பட்டுளளனர். அகதிகளாக்கப் பட்ட மக்கள் அண்டை நாடுகளிலும் பிற நாடுகளிலும் தஞ்சம் அடைகிறார்கள். இவர்கள் எங்கு சென்ற போதிலும் அகதிகள் என்பதே இவர்களின் அங்கீகாரம் இப்படிக் கோரமான நிலை. சிரியாவின் உள்நாட்டு யுத்தம் தன்னுடைய ஐந்தாவது வருடத்தை சந்திக்கிறது.


**அமெரிக்க (Vs) ரஷ்யா**

**போரா? போட்டியா?**

சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தில் அமெரிக்கா ஒரு புறம் ரஷ்யா மற்றொரு புறம். இவர்களிடையே நடக்கும் போட்டியே 20ம் நூற்றாண்டின் இறுதி வரை “Cold War” பனிப்போர் என்று அழைத்தார்கள். அதன் பெயரில் தான் போர் இருந்ததே தவிர இரு நாடுகளும் ஒரு போதும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில்லை. ஏன் உலக மகா யுத்தத்தின்

போதும் கூட இவர்கள் களம் கண்டதில்லை. ஒன்று அமெரிக்கா ஆக்கிரமிப்பு செய்திடும் இடங்களில் எதிர்த்து நிற்கும் அணிக்கு ரஷ்யா ஆதரவு தரும். அல்லது ரஷ்யா ஆக்கிரமிப்பு செய்திடும் இடங்களில் தீர்த்திடும் அணிக்கு அமெரிக்கா ஆதரவுத் தரும். ஆதரவும் தரும் அணி வெற்றி பெற்றால் பிறகு இரு நாடுகளும் தங்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்திடும் முயற்சி களை மேற் கொள் ளும். ஆக இங்கு அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே நடப்பது போரல்ல போட்டியே. அந்த போட்டி தாங்கள் விரும்பும் கிருஸ்தவ கலாச்சாரத்தை இந்த உலகில் நிலைநாட்டிய பின், இந்த உலகம் யாருடைய ஆதிக்கத்தில் இருந்திட வேண்டும் என்பதே.

## ஹண்டிங்கடனின் நாகரீகங்களின் மோதல் மற்ற உலக ஒழுங்கின் மறுசீரமைப்பு




அமெரிக்காவிற்கும் மேலை நாடு களுக்கும் நீண்ட கால திட்டத்தை வரைந்து தந்த நிபுணர்தாம் சாமுவேல் ஹண்டிங்டன். இவருடைய திட்டத்தின் பெயர் தான் "Clash of Civilisations" நாகரிகங்களின் மோதல்கள். இவருடைய இந்தத் திட்டம் இப்படி பிரகடணப்படுத்துகிறது. இந்த உலகை ஒரே கலாச்சாரத்தின் கீழ் கொண்டு வந்திட வேண்டும். அந்த கலாச்சாரம் மேலை நாட்டு கலாச்சாரமாக தான் இருந்திட வேண்டும். அதை உலகெங்கும் நிலை நாட்டிட வேண்டும் இதை இப்படிக் குறிப்பிடுகிறார்,

Western civilisation is civilisation all other civlisations are uncivilisation. Therefore to be annihiliated

அதாவது,

"மேலைநாட்டு நாகரிகமே நாகரிகம் மற்றெல்லாம் அநாகரிகம் அவை அழிக்கப் பட வேண்டி யவை."

(Source: Clash of Civilisation and Remaking of worlds)

ஆகவே நடந்து கொண்டி ருப்பது நாகரிகங்களின் மோதல் என்றொரு பிரம்மை ஏற்படுத்து கிறார்கள். ஆனால் உண்மையில் யூதர்களின் கைக்குள் இருக்கும் கிருஸ்தவத்தை அதன் கலாச் சாரத்தை உலகெங்கும் நிலை நாட்டிட வேண்டும் என்பதே இதன் அடிப் படை அம்சம்.

## தடையாக இருக்கும் முஸ்லிம்கள்

கிருஸ்தவ கலாச்சாரத்தை உலகெங்கும் நிலைநிறுத்துவதற்கு மாபெரும் தடையாக இருப்பது முஸ்லிம்கள் தாம். எனவே, இந்த முஸ்லிம்களை அழித்திட வேண்டும். முஸ்லிம்களை இந்த உலகில் இல்லாமல் ஆக்கிட வேண்டும் என்பதை வெளிப்படை யாகவே கூறுகிறார் ஹண்டிங் டன். அப்படி ஏன் செய்திட வேண்டும் என்பதற்கு காரணத்தையும் கூறுகிறார். ஏனெனில் உலகில் வேகமாக வளர்ந்து வரக்கூடிய மதம் இஸ்லாமாக தான் இருக்கின்றது. முஸ்லிம்கள் இஸ்லாமிய நாகரிகத்தை தான் விரும்புகின்றனர். அதற்காக முயற்சிகளை மேற்கொள் கிறார்கள். எனவே இந்த நிலை நீடித்தால் 2025ல் எல்லா சமூகங்களைக் காட்டிலும் முஸ்லிம் சமூகத்தில் தான் இளைஞர்கள் அதிகமாக இருப்பார்கள். அந்த இளைஞர்கள் இந்த மேலை நாட்டவர்களை பழி வாங்கிட வேண்டும். இஸ்லாத்தை நிலைநாட்டிட வேண்டும் என்ற துடிப்போடு இருப்பார்கள்.

So the war should start in the woombs of Muslim women

எனவே இந்த யுத்தம் முஸ்லிம் பெண்களின் கருப்பையில் இருந்து தொடங்கிய வேண்டும்.

அதாவது, முஸ்லிம் பெண்கள் கருத்தரிக்காமல் இருந்திட செய்ய வேண்டும்.

ஒரு வேளை அப்படி கருதரித்து பெற்றிருந் தால் அந்த குழந்தைப் பருவமடையும் முன் கொலை செய்திட வேண்டும்.



### திட்டத்திற்கு தலைமை தாங்கும் அமெரிக்கா

ரஷ்யாவின் ஆக்கிர மிப்பை எதிர்த்து போர் செய்த ஆஃப்கானிஸ்தான் முஜாஹித் கள் பெற்ற வெற்றி அமெரிக் காவையும் மேலை நாடு களையும் கதிகலங்கச் செய்தது. எங்கே உலகத் தலைமை அதாவது உலகை வழிகாட்டும் கொள்கையாக இஸ்லாம் ஆகி விடுமோ என அஞ்சினார்கள். அதன் விளைவே ஹண்டிங்டன் திட்டம். இந்த திட்டத்தை அடிப்படையாக கொண்டே அமெரிக்காவும் மேலை நாடுகளும் செயல்படுகின்றனர். மேலை நாடுகளுக்கு அமெரிக்காவே தலைமை ஏற்று நிற்கின்றது. அதை தனது புதிய நூற்றாண்டிற் கான திட்டத்தின் முன்னுரையில் இப்படி கூறுகிறது.

The American leadership is good both for America and the world and that such leadership requires military strength diplomatic energy and commitment to moral principles.

அதாவது, அமெரிக்காவின் தலைமை யே அமெரிக்காவிற்கும் உலகிற்கும் மிகவும் நல்லது. இதனால் இந்த தலைமைக்கு ராணுவ பலம், இராஜ தந்திரம், பண்பாடு ஆளுமை இவை தேவை.

(Source : The project for new American century as quoted by Peter Marshalon in Afghanistan as Army Empires : page no. 99)

### அமெரிக்காவின் அடாவடித்தனம்

இதன் பின்னணியில் தான், இரட்டை கோபுரத்தை இவர்களே தாக்கிவிட்டு இதற்கு ஆஃப்கானிஸ்தான் தான் காரணம் என்றார் கள். தாக்குதல் முடிந்து மூன்றாவது நாள் ஜியார்ஜ் புஷ் இப்படி கூறினார் “The modern crusade has started” நவீன சிலுவை யுத்தம் தொடங்கி விட்டது என்றார். நடப்பது சிலுவை யுத்தம் தான் என்பதை தெளிவுப்படுத் தினார். இதனை அமெரிக்கா வின் வெளி விவகாரத்துறை செயலர் கண்டலோசா ரைஸ் ஊர்ஜிதம் செய்தார். பின்னர் அத்துமீறி ஆஃபகானிஸ் தானினுள் புகுந்து தன்னுடைய அத்துணை அடிாவடித்தனங்களையும் கட்டவிழ்த்து விட்டார்கள். 2004ல் ஜார்ஜ் புஷ் மீண்டும் பதவியேற்கும் போது இப்படி கூறினார் “It will be fought for another 60 or 70 years” அதாவது இன்னும் 60 அல்லது 70 வருடங்களுக்குச் சண்டை இடுவோம். அதாவது 60 அல்லது 70 வருடங்களில் முஸ்லிம்களை உலகில் இல்லாமல் ஆக்கிடு வோம் என்பதே இதன் பொருள்.

### இரையான முஸ்லிம்கள்



அதை செயல்படுத்தும் வண்ணம் இவர்கள் ஈராக், ஆஃப்கானிஸ் தானிலும் கொன்று குவித்த அப்பாவி முஸ்லிம்கள் ஏராளம். 2003ல் அமெரிக்கா ஈராக்கினுள் புகும் பொழுது “Cluster Bomb” என்ற குறைந்த அனுசக்தி கொத்து குண்டுகளை பொழிந் தார்கள். அதிலிருந்து வெளிப்பட்ட நச்சு





## மற்றொரு யுக்தி

அமெரிக்காவும், மேலைநாடுகளும் தாங்களே களத்தில் இறங்கி தங்களின் திட்டத்தினை செயல்படுத்திட வேண்டும் என்பதில் தோல்வியடைந்து விட்டார்கள். எனவே தன்னுடைய மற்றொரு யுக்தியை முஸ்லிம் நாடுகளில் கையாள் கிறார்கள். அது பின்வரும்,

வாய்வை கர்ப்பினி பெண்கள் சுவாசித்தால் பிறக்கும் குழந்தைகள் 'Deformed' உருக் குலைந்த நிலையில் பிறக்கும் பல குழந்தைகள் ஈராக்கில் அப்படி தான் பிறந்தன. அந்த கொடூரமான காட்டசிகளை காணொளி வழி நாமும் காண செய்தோம். இன்னும் ஈராக் கிலும், ஆஃப்பானிஸ்தானிலும் தீவரவாதத் தின் பிறப்பிடங்கள் என்று கூறி பள்ளிக் கூடங்களின் மீது குண்டு மழைகளை பொழிந்தார்கள். இவர்கள் பொழிந்த குண்டு களுக்கு லட்சக்கணக்கான குழந்தைகள் இறையானார்கள். இப்படி கடந்த 20 ஆண்டுகளாக தீவிரவாதத்திற்கு எதிராக யுத்தம் செய்கிறோம் என்று இவர்கள் முஸ்லிம் நாடுகளில் கொலை செய்த அப்பாவி முஸ்லிம்கள் 40 லட்சத்தையும் தாண்டுகிறது.

(Source:www.middleceasteye.net / columns / unworthy victims-western-wars - have killed - four -million - muslims 1990-39149394)

## தோல்வி

இப்படி தன்னால் இயன்ற அத்துனை தீவிரவாதங்களையும் செய்த பின்னும் இரு நாடுகளையும் இவர்களால் வெற்றி கொள்ள இயலவில்லை. காரணம் தன் உயிரையும் துச்சமாக மதித்து இந்த அடக்கு முறைகளை எதிர்த்து அல்லாஹ்வுடைய பாதையில் போராடி கொண்டிருக்கும் முஜாஹித்கள். காட்டிய வீரம், தொடுத்த தாக்குதல்கள். தங்களின் தோல்வியை இவர்களே ஒத்துக் கொண்டார்கள்.

அமெரிக்காவின் தோல்வியைப் பற்றி மேலும் படிக்கவும் (வைகறை வெளிச்சம், மார்ச் 2015)


"Although Huntingtons work dealt extensively with the Muslim world, he paid little attention to its diversity. For example the conflict between Shia and Sunni or to the effects of Muslim migration on Europe. Both of these intra-civilisational problems have intensified since huntington launched this theory".

"ஹண்டிங்டன் முஸலிம் உலகில் தன்னுடைய திட்டத்தை செயல்படுத்த மேற்கொண்ட நடவடிக்கை மிகவும் ஆழமானது, விரிவானது. அவருடைய கவனம் முஸ்லிம் உலகில் ஏற்பட்டிருக்கும் வேற்று மையை நோக்கி இருந்தது. உதாரணமாக முஸ்லிம்களிடம் உள்ள ஷியா - சுன்னி பிரச்சினை மற்றும் முஸ்லிம்கள் ஐரோப்பா வில் குடிபெயர்வதினால் ஏற்படும் விளைவுகள் இந்த இரண்டு உள் நாகரீக பிரச்சனைகளும் ஹண்டிங்டன் தன்னுடைய கோட்பாட்டை வெளியிட்ட பின் தீவிரமடைந்து விட்டது.

## ஹண்டிங்டனின் திட்டமும் முஸ்லிம் நாடுகளில் யுத்தமும்

இவர்கள் போட்ட திட்டங்கள் தான் இதுவரை முஸ்லிம்களில் நடந்து கொண்டிருக்கின்றன. 1979ல் ஈரானில் அமெரிக்காவை அடித்து விரட்டி விட்டு அங்கு நிலை கொண்டிருந்த மன்னர் ஷாவுடைய ஆட்சியை வீழ்த்தி ஈரானை ஒரு இஸ்லாமிய குடியரசு அறிவித்தார். புரட்சி இயக்கத்தவர் அப்துல்லாஹ் கொமய்னி அவர்கள். இஸ்லாமிய குடி அரசு என்றவுடன்





எந்த அடிப்படை ஆதாரமுமின்றி கூறினார்கள் மேலை நாட்ட வர்களும், அதன் அடிவருடி மீடியாக்களும். ஆனால் இந்த சம்பவங்களின் பின்புலத்தில் சி.ஐ.ஏ. மொசாத், எம்.ஐ.6 போன்ற இவர்களின் உளவு அமைப்புகளின் கை வண்ணமே காணப்பட்டது.

(Source:www.almanar.com .ibienglishladetails.php?ctd=55329&cid=31&promval=1)

(www.kashmirwatch.com/news/print.php/2012/o4/21/external-secre-agencies-behind-sectarian-terrorism.phtml)

பொறுக்க முடியவில்லை அமெரிக்காவால். தங்களுடைய மற்றொரு யுக்தியைக் கையாண்டார்கள். தனது ஆதரவை தருகிறோம் கூறி ஏவிவிட்டார்கள் ஈராக்கின் ஆட்சியாளர் சதாம் அவர்களை! யுத்தம் மூண்டது. 1980ல் தொடங்கிய ஈராக் யுத்தம் அன்றைக்கும் ஷியா- சுன்னி மோதலாகவே பேசப்பட்டது. ஆனால் யுத்தத்தின் பின்புலத்தில் அமெரிக்காவும் பல மேலை நாடுகளுமே நின்றன. பிறகு சதாம் உசேன் இவர்களின் பிரதான எதிரி யாக போனது உலகறிந்த செய்தி. இப்போது மோதல்களை ஏற்படுத்திடும் யுக்தியே மீண்டும் கையாளப்படுகிறது.

## குண்டு வெடிப்புகள்

ஒருபுறம் சிரியா மற்றும் இதர முஸ்லிம் நாடுகளில் ஷியா முஸ்லிம்கள் குழுமி வாழும் இடங்களிலும், ஜும்ஆ தொழுகையின் போது ஷியா பள்ளிவாசல்களில் பகுதிகளிலும் குண்டுவெடிப்பு சம்பவங் கள் நிகழ்ந்தன. இதில் ஏராளமான ஷியா முஸ்லிம்கள் உயிரிழிந்தார்கள். இந்த சம்பவங்கள் நிகழ்ந்தற்கு காரணம் சன்னி தீவிரவாதிகள் தான் என்றும் சன்னி ஃபிஸ்டு தீவிரவாதிகள் தான் என்றும்



எனவே இப்போது பெரும்பாண்மை சன்னி முஸ்லிம்கள் சிறுபான்மை ஷியாக் களுக்கு ஆபத்து என்றொரு பிரம்மையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இவர்களின் இந்த மாய வலையில் ஈரானும், ஹிஸ்புல்லா வும் சிக்கியுள்ளது.

## கிளர்ச்சி

மற்றொரு புறம் ஈராக்கில் நூர்-அல்-மாலிகி எனும் தனது ஏஜெண்டை ஏவி அப்பாவி சன்னி முஸ்லிம்களை சிறை பிடித்தார்கள். அவர்கள் மீது அடக்கு





முறைகளை ஏவி விட்டனர். சிரியாவில் ஆசாத்தின் அடக்குமுறைகளை எதிர்த்து வெகுண்டு எழுந்த கிளர்ச்சி குழுக்களுக்கு ஆரம்பத்தில் பயிற்சி அளித்து ஆயுதங்களை அள்ளித்தந்தார்கள். அவர்களிடம் இந்த அடக்குமுறைகளுக்கும் அநியாயங்களுக்கும் ஷியாமுஸ்லிம்கள் தான் காரணம் என்று சந்தடி சாக்கில் பதிய வைத்து விட்டார்கள். ஷியா - சன்னி மோதலுக்கு ஆழமாமன அடித்தளம் இட்டிருக்கின்றது. C.I.A., MOSSAD, MI6 (SIS) போன்ற உளவு அமைப்புகள். இதில் ரஷ்யாவின் உளவு அமைப்பு FIS (KGB) இவர்களுக்கு நிகராகவே வேலை செய்துள்ளது. இவர்களின் இந்த சதி வலையில் பல அமைப்புகள் வீழ்ந்தன. சில இஸ்லாமிய இயக்கங்கள் மட்டுமே மிஞ்சின.

ஆக இங்கும் ரஷ்யாவும், மேலை நாடுகளும் ஹன்டங்டனின் திட்டத்தையே செயல்படுத்துகின்றது.


(Source : infowars.com/arab-league-report-providerevidence-cta-mossad-mig-behind-vto-in-syria/

http://m.en.delfi.it/central-eastain-peuropearticle.php?id=66856642)

இன்ஷா அல்லாஹ்

**தொடரும். .**

**மு. இம்தியாஸ் அஹம்மது**


*விலை ரூ. 60 மட்டுமே*

**தீவிரவாதிகள் என்று சித்தரிக்கப்படும் தாலிபான்கள் யார்? என்பதை தெரிந்து கொள்ள இந்த நூல்களை படியுங்கள்!**




*விலை ரூ. 90 மட்டுமே*

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**

**சென்னை - 600 001.**

**தொடர்ப்புக்கு : 8148129887**

# விஷ்ணுபிரியாவின் அம்மா சொன்னத் தகவல்கள்!

எனது மகள் செல்வி ஆர். விஷ்ணுப்ரியா திருச்செங்கோடு துணை காவல் கண்காணிப்பாளராக இருந்த போது என்னிடம் பகிர்ந்து கொண்ட சில தகவல்களை கூற விரும்புகிறேன்.

1. நைட் ரவுண்டில் பார்களுக்கு ரெய்டு போகும் போது கிட்டத்தட்ட 2000 பாட்டில்களை பறிமுதல் செய்து குமார பாளையம் காவல் நிலையத்தில் ஒப்படைத்த தாகவும் எஃப்.ஐ.ஆர். போடும் படி கூறிவிட்டு சென்று மறுநாள் (சிறப்பு பணி காரணமாக) பரமத்தி வேலூர் சென்று விட்டு திரும்பிய போது எஃப்.ஐ.ஆர். வெறும் பத்து பாட்டில்களுக்கு மட்டும் போட்டு விட்டு மற்ற பாட்டில்களை பார்களுக்கே திருப்பி அனுப்பிவிட்டதாக என்னிடம் கூறினாள். இதை பற்றி நாமக்கல் மாவட்டத்தில் பயிற்சி டி.எஸ்.பி.யாக இருந்த திரு. இனிதேச திவ்யனிடமும் கீழக்கரை டி.எஸ்.பி. செல்வி மகேஷ்வரியிடமும் எஸ்.ஐ. சந்திரகலாவிடமும் கூறியிருக்கிறாள்.

2. அது முதல் நைட் ரவுண்ட்ஸில் பார் ரெய்டு செய்யும் போது பாட்டில்களை போட்டு அங்கேயே உடைத்ததாகவும் கூறினாள். மறுநாள் எஸ்.பி. செந்தில்குமார் அவர்கள் என் மகளை டி.பி.ஓ. விற்கு வர செய்து காலை 10 மணியிலிருந்து 3மணி வரை அவளை டி.பி.ஓ.வில் காத்திருக்க வைத்திருக்கிறார். மற்ற காவல் துறை அலுவலர்களை சந்தித்து பேசிய அவர் என் மகளை மட்டும் சந்திக்காமல் பல மணி நேரம் (10-3) காத்திருக்க வைத்தார். இதை என் மகள் என்னிடம் கூறி அழுதாள். இந்த நிகழ்வு நாமக்கல் டி.பி.ஓ.வில் உள்ள கேமராவில் பதிவு ஆகியிருக்கும். டி.பி.ஓ.வில் உள்ள அலுவலர் களுக்கும் எனது மகளின் ஓட்டுநர் அவர்களுக்கும் நிச்சயமாக தெரியும். இந்த நிகழ்வு பல முறை நடந்துள்ளது.



3. தடை செய்யப்பட்ட ஒரு நம்பர் லாட்டரியை ரெய்டுக்கு சென்ற போது எஸ்.பி. அவளை ரெய்டுக்கு செல்லக் கூடாது என்று கடுமையாக கண்டித்துள்ளார்.

4. என் மகளை எஸ்.பி. செந்தில் குமார் அவர்கள் பேசும் போது ‘நீ, வா, போ’ என்று ஒருமையில் பேசுவதாகவும், ‘சோத்து மூட்டை’ என்றும் ‘Useless DSP’, “Useless Sub-Division”, ‘நல்லா சாப்பிட்டுவிட்டு Camp Office-ல் தூங்கு’ என்று சொல்லி திட்டுவதாகவும் என்னிடம் கூறி கண் கலங்கினாள்.

5. Open மைக்கில் உருப்பிடாத “Sub Division”, “உருப்படாத DSP” “Uselss” என்று திட்டி இருக்கிறார்.

6. Crime Meeting என்றாலே பயப் படுவாள். "ஏம்மா, Crime Meeting என்றாலே இப்படி பயப்படுற" என்று கேட்டதற்கு "SP Crime Meeting Conduct செய்வதே என்னை திட்டுவதற்கு தான்" என்று கூறுவாள். என்னை நிற்க வைத்து Subordinate முன்னாடி (SI, Inspector, Promoted DSP) திட்டுவார். இந்த மாதிரி செய்தால் அவர்கள் என்னை எப்படி மதிப்பார்கள். நான் சொல்வதை எப்படி கேட்பார்கள் என்று கூறி கண் கலங்கினாள். இந்த நிகழ்வை பற்றி ADSP பெஸ்கி அவர்களுக்கும் தெரியும். ஏனெனில் அவர் அவளை பல முறை சமாதானப்படுத்தி யிருக்கிறார்.

7. ஜெகநாதன் கொலை வழக்கு சம்பந்தப்பட்ட Video Footage ஒன்று அந்த External Hard Disk-ல் இருந்தது. ஆனால் Case Property கைப்பற்றப்பட்ட பொருள்களில் இதை பதிவு செய்யவில்லை. External Hard Disk என் மகள் வைத்திருந்தது SI சந்திரகலாவிற்கும் தெரியும்.

8. கோகுல் ராஜ் வழக்கில் Investigation Officer ஆன பிறகு ஏகப்பட்ட நெருக்கடிகளை அவள் சந்தித்து இருக்கிறாள். இந்த கொலை வழக்கில் பெயரளவில் தான் நான் Investigation Officer. இந்த வழக்கில் என்னை முழுமையாக செயல்படவிடவில்லை. நிறைய பேரை அழைத்து வந்து ரிமாண்ட் செய்ய சொன்னார்கள். Innocent People ன்னு நான் விசாரணை செய்து தெரிந்து கொண்ட நபர்கள் மீது குண்டாஸ் போட சொல்லி கட்டாயப்படுத்தினார். மலைக் கோவிலிருந்து சுவாதியை அழைத்து வந்த Ladyயை மட்டுமாவது குண்டாஸ்-ல் போட வேண்டாம் என்று சொன்னேன். ஆனால் அவர் அதை கேட்கவில்லை. இது சம்பந்தமாக DIG கிட்ட பேசுவதற்காக கிட்டத்தட்ட 30 முறை Call செய்தேன். ஆனால் அவர்கள் Respond செய்யவில்லை. அதற்கு பின் அவர்களே (DIG) போன் செய்து ADSPகிட்ட பேசிவிட்டேன். SP சொன்னபடி செய் என்று சொன்னாங்க. இது டி.எஸ்.பி. மகேஷ்வரி, டி.எஸ்.பி. இனிகோ திவ்யன் மற்றும் ஏ.டி.எஸ்.பி. சேவியர் பெஸ்கிக்கு கூட தெரியும்.

9. ஒரு Put Up Case 16.07.2015ல் ரிஜிஸ்டர் ஆகி இருக்கிறது என்று யுவராஜ் ஆடியோவும் லெட்டரும் டிவியில் பார்த்த போது தெரிந்து கொண்டேன். ஆகஸ்ட் மாதம் கடைசியில் யுவராஜை பிடிப்பதற்காக Special Duty போட்டாங்க. அப்போது எஸ்.பி. தினமும் யுவராஜ் வீட்டிற்கு சென்று அவர் மனைவியை டார்ச்சர் செய்ய சொன்னார். அது மட்டு மல்லாமல் யுவராஜ் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கு தினமும் செல்ல வேண்டும். அதனால் அவங்க குழந்தைகளை ஸ்கூல்ல விட்டு நிறுத்திட்டாங்க. அப்பா செய்த தவறுக்கு குழந்தைகள் என்ன செய்யும். இந்த மாதிரி செய்ய எனக்கு பிடிக்கல. ரொம்ப கஷ்டமாக இருக்குமா என்று சொல்லி வருத்தப்பட்டா. இதன் விளைவாக யுவராஜ் மனைவி குழந்தைகளுடன் தற்கொலைக்கு முயற்சி செய்தார். இந்த தகவல் கிடைத்தவுடன் எனது மகள் அருகிலிருந்த காவலரை தொடர்பு கொண்டு உடனே அவர்கள் வீட்டிற்கு செல்லுங்கள் என்று நானும் உடனே வருகிறேன் என்றும் கூறினாள். பிறகு அவர்களை காப்பாற்றி சமாதானப் படுத்தி தற்கொலை முயற்சியை கைவிடச் செய்தாள். தொடர்ந்து மூன்று நாட்கள் சென்று அவளிடம் பேசி Convince செய்தாள். இந்த மாதிரி இந்த வழக்கில் எஸ்.பி. பக்கமும் யுவராஜ் பக்கமும் கடுமையான நெருக்கடி களை என் மகள் சந்தித்தாள். கடைசியாக 18.09.2015 அன்று 4.30 மணிக்கு கோகுல்ராஜ் வழக்கில் குண்டாஸ் Initiate செய்ய சொல்ல SP கட்டாயப்படுத்தினார். அவளுக்காக Magistrate Sarattar அவர்களும் மாவட்ட ஆட்சியர் அவர்களும் என் மகளுக்காக காத்திருந்தனர்.

10. 16.09.2015 அன்று நாங்கள் கடலூருக்கு கிளம்புவதற்கு முன்பாக என் மகள் திரு. கௌரிசங்கரை அழைத்து கோகுல்ராஜ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட CD File, Pen Drive இரண்டையும் கொடுத்து "இது மிகவும் முக்கியமானது. இது Camp Office Writerக்கு கூட தெரியாது. இதை மகேஷ்வரியிடம் மட்டும் கொடுத்து விடுங்கள்" என்று சொன்னார்.

11. ஏ.டி.எம். கொள்ளை பற்றி என் மகள் ரிபோர்ட் செய்யும் போது மிகவும் மோசமாக திட்டினார் (துப்பினார்) என்று கூறி அழுதாள்.

12. Probhation Period முடிந்து விட்டதா அல்லது Extension செய்யப்பட்டதா என்று எந்த Remark-கும் செய்யாமல் அவள் CD File ஐ எல்லா Subordinate முன்னால் தூக்கி எறிந்து அவமானப்படுத்தினார். அன்று இரவு உணவு கூட உண்ணாமல் டி.எஸ்.பி. மகேஷ்வரியிடம் கூறி அழுதாள். இது எஸ்.ஐ. சந்திரகலாவிற்கும் தெரியும். என் மகள் இறந்த அன்று 18.9.2015 அன்று என் கணவர் மற்றும் உறவினர்கள் நேராக சேலம் ஜி.எச்.க்கு வரவழைக்கப் பட்டனர். அங்குதான் என் மகளின் உடலை உறவினர்கள் பார்த்தனர். 19ம் தேதி அதிகாலையில் தான் சம்பவம் நடந்த இடத்தை அதிகாரிகள் அழைத்து சென்று காண்பித்தனர். மரணத்தைப் பற்றி பல சந்தேகங்கள் என் கணவரும், உறவினர்களும் எழுப்பிய போது அவர்கள் பதில் கூறவில்லை. என் கணவரும் உறவினர்களும் எஸ்.பி. மீது பலத்த குற்றச்சாட்டு எழுப்பிய நிலையில் என் மகளின் செல்போன், Tap, Laptop, Sony DSLR Camera, External Hard Disk ஆகியவற்றை எங்களிடம் ஒப்படைக்கும்படி கூறினார்கள். ஆனால் கடைசி வரை போலீசார் பல காரணங்களை கூறி ஒப்படைக்க மறுத்தனர். இந்த நிலையில் கீழக்கரை DSP 08.09.2015 அன்று மதியம் 15.48 மணியளவில் என் மகளின் செல்போனுக்கு அனுப்பிய Message செல்போன் 19.9.2015 அன்று 00.12 மணிக்கு Delivery ஆனதாக செய்தி மகேஷ்வரி செல்போனுக்கு வந்திருக்கிறது. அந்த சமயத்தில் டி.எஸ்.பி. மகேஷ்வரியுடன் வழக்கு பதிவு செய்த திரு. குலசேகரன், ராசிபுரம் டி.எஸ்.பி. திரு. ராஜு அவர்களும் சேலத்தில் Post Mortem அறைக்கு முன்னால் இருந்தனர். அப்படியென்றால் Case Property என்று கைப்பற்றப்பட்ட என் மகளின் அனைத்து பொருள்களும் அந்த நேரத்தில் யாரிடம் இருந்தது. அந்த நேரத்தில் Open செய்தது யார்? அவ்வளவு அவசரமாக நடு இரவில் Open செய்ய வேண்டிய அவசியம் யாருக்கு இருந்தது?

13. DPOவில் பணிபுரியும் திரு. முத்துக்குமார் (செல்போன் Callகளை கூசயஉந செய்பவர்) மற்றும் SP Inspector திரு. நடராஜ் 18.9.2015 அன்று என் மகளின் உடல் பிரேத பரிசோதனைக்கு சேலம் G.H.க்கு அனுப்பப்பட்டதற்கும் அடுத்த நாள் 19.9.2015 வரை Camp Officeல் தங்கி இருக்க வேண்டிய அவசியம் என்ன? அவர்களுடைய செல்போன் Location கண்டறிந்தாலே அவர்கள் திருச்செங்கோடு Camp Officeல் இருந்தது உறுதியாகும். அவர்கள் என் மகளின் செல்போன், Tab, Laptop, Sony DSLR Camera மற்றும் Extenral Hard Disk இவற்றை அவர்கள் Open செய்து பார்த்து இருக்கிறார்கள். SP சொல்லித்தான் இவர்கள் செய்திருக்க வேண்டும். SP க்கு எதிரான ஆதாரங்களையும் என் மகள் விசாரித்து வந்த வழக்குகள் தொடர்புடைய ஆதாரங்களையும் அவர்கள் நிச்சயமாக அழித்து இருக்கிறார்கள்.

14. மேலும், சி.பி.சி.ஐ.டி. அதிகாரிகள் டி.எஸ்.பி. மகேஷ்வரியின் செல் போன், டி.எஸ்.பி. கீதாஞ்சலியின் செல்போன்களை கைப்பற்றி ஆய்வு செய்தனர். ஆனால் எங்களால் குற்றம் சாட்டப்பட்ட திரு. செந்தில் குமார் அவர்களின் செல்போனை கைப்பற்றி ஆய்வு செய்தார்களா?

எனது மகளை பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் Batchmateஐ விசாரித்தாலே தெரியும். மேலும் TNPA-வில் உள்ள அதிகாரிகளை விசாரித்தாலே தெரியும்.

## WITNESS

1. டி.எஸ்.பி. இனிகோ திவ்யன்
2. ஏ.டி.எஸ்.பி. பெஸ்கி
3. எஸ்.ஐ. சந்திரகலா
4. டிரைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, சங்கர்.

இவர்கள் மட்டுமில்லாமல் மேலும் நான் உள்ளே குறிப்பிட்ட நபர்களையும் அவளுடன் பணிபுரிந்த அனைத்து காவல் அதிகாரிகளையும், அலுவலர்களையும் விசாரிக்க வேண்டுகிறேன்.

என் மகள் என்னிடம் கூறிய அனைத்து தகவல்களையும் நான் இதில் கூறியுள்ளேன். இது பற்றி, அனைத்து சந்தேகங்களையும் நான் எழுப்பியுள்ளேன். தாங்கள் இதைப் பற்றி விசாரித்து பதில் அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

# அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு நிலமானியப் பிரபு & கற்காலத்தை நோக்கி தமிழகம்

*நிலமானியப் பிரபு என்றவுடன் நிலத்தை மானியமாக தரப்போகும் பிரபு என்று வாசகர்கள் எண்ணி விடவேண்டாம். கி.பி. 1000 முதல் 1453 ஆம் ஆண்டு வரை மன்னர்கள் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் உள்ள நிலங்களை பிரபுக்களுக்கு கொடுப்பர். அவர் அதனை நில அடிமைகள் மூலம் உழுது பலன் ஈட்டி அதன் வருவாயை கொண்டு ஒரு படையை அமைப்பார். இந்தப் படை எப்போதெல்லாம் மன்னருக்கு அவசரகாலங் களில் போர் புரிய தேவைப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் இது போன்ற நில மானியப் பிரபுக்கள் வாயிலாக மன்னர்கள் திரட்டிக் கொள்வார்கள்.*

*இந்த நிலமானியப் பிரபுக்கள் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள நில அடிமைகளை எவ்வாறு நடத்துவார்கள் என்பதை வாசகர்கள் நேரடியாக பார்க்க விரும்பினால் பொள்ளாச்சி வேட்டைக்காரன் புதூர் கிராமத்திலுள்ள அ.தி.மு.க. அவைத் தலைவர் செந்தில் கவுண்டர் மற்றும் அவரது பட்டத்து இளவரசர் விக்னேஷ் கவுண்டர் வீட்டிற்கு சென்றால் கண்டு கொள்ளலாம்.*

*கேரள எல்லையை ஒட்டியுள்ள தமிழ்நாட்டு நகராட்சியில் ஒன்றான கோடை வாசஸ்தலம் பொள்ளாச்சி. சிறிய நகராட்சியாக இருந்தாலும் மாட்டுச் சந்தைக்கும், சுற்றுலாத் தளங்களுக்கும் சோடை போகாத நகராட்சி. காரணம், அதனை சுற்றியுள்ள கிராமங்கள் தான். இத்தகைய கிராமங்களில் ஒன்றான வேட்டைக்காரன் புதூர் அருகில் உள்ளது தேவிப்பட்டினம்.*

*தேவிபட்டினத்தில் வாழும் மக்களில் பெரும்பாலோர் தலித் சமூகத்தினர். இவர்களது முன்னேற்றம் குறித்தோ, வளர்ச்சி குறித்தோ அக்கறை செலுத்த யாருமே இல்லை. ஆனால் இவர்களை வைத்து பணம் பதவிகள் பெற பலருண்டு. இந்த விழிப்புணர்வற்ற சமூகத்தில் ஒருவர் தான் ஹரிஜன் காலணியைச் சேர்ந்த பெருமாள் என்பவர் மகன் முருகன்.*

*முருகன் கடந்த சில ஆண்டுகளாக நிலமானியப் பிரபு செந்தில் கவுண்டர் மகன் விக்னேஷ் கவுண்டர் பண்ணையில் தான் வேலை செய்து வந்தார். இரண்டு நாட்கள் விடுமுறை எடுத்துள்ளார். அதனால் விக்னேஷ் மிக கேவலமாக திட்டியுள்ளார். உடனே முருகன் வேலைக்கு செல்வதை நிறுத்தி விட்டார். விக்னேஷ் காரில் முருகன் வீட்டிற்கு வந்து ஏன் வேலைக்கு வரலை? என்று கோபப்பட்டுட்டியா? என்று சமாதானம் பேசியுள்ளார்.*

*இல்லை. இனி நான் வரலை என்று முருகன் கூறியுள்ளார். சரி என்று ஒரு நாள் மட்டும் வேலைக்கு வா என்று 30.9.2015 அன்று மாலை 5 மணிக்கு வந்து அழைத்துள்ளனர். முருகனும் பண்ணைக்கு சென்று ஆட்டிற்கு தீனி வைத்து விட்டு 7 மணிக்கு புறப்பட்டுள்ளார். இரவு வேலை உள்ளது என்று கூறி முருகனை தங்க வைத்துள்ளனர். 9 மணியளவில் விக்னேஷின் நண்பர்கள் சிவா, ஜெகன், கார்த்தி வந்துள்ளனர்.*

*இவர்கள் எப்பொழுதும் மது அருந்த வேண்டுமென்றால் ஆடு கட்டிப் போடும் அறையில் தான் குடிப்பார்கள். ஆனால் அன்றைய தினம் வழக்கத்திற்கு மாறாக விக்னேஷ் அறையில் மது குடிக்க ஆரம்பித்துள்ளனர். இரவு 10 மணிக்கு பெட்டிக்கடையில் சென்று சிகரெட் வாங்கி வா என்று முருகனை அனுப்பி வைத்துள்ளனர்.*

*முருகன் திரும்பி வந்தவுடன் அறை கதவை தாழ்பாள் போட்டு விக்னேஷ்,*

ஏண்டா.... ... என்று சாதியின் பெயரையும் அருவருக்கத்தக்க வார்த்தைகளாலும் ஏசி நெஞ்சில் அடித்துள்ளார். பிறகு விக்னேஷ் நண்பர்கள் சிவாவும், ஜெகனும் பிடித்துக் கொள்ள விக்னேஷ் அடித்து தலையை பிடித்து சுவற்றில் அடித்துள்ளார். இவ்வாறாக இரவு 11 மணியளவில் ஆரம்பமான அடி நள்ளிரவு வரை தொடர்ந்தது. மயங்கி விழுந்த முருகனை ஐஸ் கட்டி ஒத்தடம் கொடுத்து படுக்க வைத்துள்ளனர்.

காலை 6 மணியளவில் கதவை திறந்து முருகன் அணிந்திருந்த வேஷ்டி முழுவதும் ரத்தமானதால் விக்னேஷ் ஒரு கைலியை கொடுத்து அணியச் சொல்லிவிட்டு செந்தில் கவுண்டர் வீட்டில் வேலை செய்யும் வீரம்மாளை அழைத்து ரத்த வேஷ்டியை துவைக்கச் சொல்லியிருக்கின்றார். அந்த ஊரிலுள்ள கம்பவுண்டரை வரச்சொல்லி ஊசி போட்டுள்ளனர். பிறகு விக்னேஷ், முருகனிடம் யாராவது என்ன காயம் என்று கேட்டால் தண்ணிய போட்டு கீழே விழுந்திட்டேன் என்று காயங்களுக்கு காரணம் சொல்லச் சொல்லி மிரட்டியுள்ளார். முருகன் சரியென்று ஒத்துக் கொண்டார் பயத்தின் காரணத்தினால்.

இன்று நீ வீட்டுக்கு போக வேண்டாம் வா காட்டுக்குப் போகலாம் என்று அழைத்துள்ளார் விக்னேஷ். மீண்டும் அடிப்பார்கள் என்ற பயத்தில் முருகன் நான் வரலை என்று கூறியுள்ளார். வற்புறுத்தவே முருகன் கேட்டை திறந்து கொண்டு ஓடி தேவிபட்டினம் சென்ற பேருந்தில் ஏறியுள்ளார். விக்னேஷ் நண்பர் நாகராஜன் காரில் பேருந்தை பின் தொடர்ந்து சென்று முருகனை பிடித்து விக்னேஷிற்கு போன் செய்து அதனை முருகனிடம் கொடுத்துள்ளார். விக்னேஷ் முருகனிடம் தொலைபேசியில் உன் மனைவி குழந்தைகளை கடத்தி விடுவேன். மரியாதை யாக வா என்று மிரட்டியுள்ளார். போனை நாகராஜனிடம் கொடுத்து விட்டு ஓடி சென்று முருகன் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் ஒளிந்துள்ளார் முருகன்.

அம்பேத்கர் இளைஞர் முண்ணணியைச் சேர்ந்த மணிமாறன், மதி அம்பேத்கர் மற்றும் சிலர் சேர்ந்து முருகனை பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அவரை நாம் சென்று பார்த்த போது மேற்கண்ட தகவல்களை மிகவும் பயந்து பயந்து கூறினார். இதில் ஒரு கேவலம் என்னவென்றால் அரசு மருத்துவமனையில் காயங்களோடு வரும் நோயாளிகளை குறித்து மருத்துவமனை நிர்வாகமே காவல்துறையில் புகார் தெரிவித்து விடும். ஆனால் இவர் விஷயத்தில் நடந்ததே வேறு. இரண்டு நாட்கள் கழித்துதான் காவல்துறை ஆய்வாளர் வந்து விசாரித்துள்ளார். காரணம் என்னவென்றால் செந்தில் கவுண்டரின் செல்வாக்கு. அ.தி.மு.க. அவைத் தலைவர் நிலப்பிரபு, பணத்திமிர்.

இதில் இன்னொரு ஆச்சர்யம். எந்த காவல்நிலையத்திலிருந்து ஏதாவதொரு வழக்கு பதியப்படுமேயானால் உடனே செய்திதாள் களிலோ அல்லது தொலைக்காட்சிகளிலோ வந்து விடும். ஆனால் சம்பவம் நடந்து 5 நாட்களாகியும் எந்த ஒரு செய்தி தாள்களிலோ தொலைக்காட்சிகளிலோ வரவேயில்லை. அந்தளவிற்கு செந்தில் கவுண்டரின் செல் வாக்கு. சாதி வெறி.

5.10.2015 அன்று காலை 10 மணியளவில் அம்பேத்கர் இளைஞர் முண்ணணி மற்றும் முருகனின் மனைவி மற்றும் உறவினர்கள் அனைவரும் சேர்ந்து சப்-கலெக்டர் அவர்களை சந்தித்து நடந்த சம்பவங்களை குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி மனு அளிக்க சென்றால் சப்கலெக்டர் இன்று லீவு என்று கூறிவிட்டார்கள். சப்கலெக்டர் சுயமாக விடுமுறை எடுத்தாரா? அல்லது விடுமுறை எடுக்க நிர்பந்திக்கப்பட்டாரா? செந்தில் கவுண்டருக்கே வெளிச்சம்.

நாம் 5.10.2015 காலை 9 மணிக்கு முருகனை பேட்டி எடுத்து விட்டு சப் கலெக்டர் அலுவலகத்தில் முருகனின் உறவினர்கள் சந்தித்து விட்டு ஆனைமலை காவல் ஆய்வாளர் விவேகானந்தனை தொலைபேசியில் தொடர்பு கொண்டோம். குற்றவாளிகளை பிரிவு 506ன் கீழ் 1 மற்றும் 2, 294ன் கீழ் பி மற்றும் 323ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாக தெரிவித்தார்.

5.10.2015 அன்று மாலையே முருகனை குணமாகிவிட்டது என்று கூறி அரசு மருத்துவமனை நிர்வாகத்தினர் வலுக் கட்டாயமாக வெளியேற்றி உள்ளனர். ஒட்டு மொத்த அரசு இயந்திரங்களும் செய்தி நிறுவனங்களும் செந்தில் கவுண்டரின் ஆணைக்கு கட்டுப்படுகிறதென்றால், இந்த ஆட்சிதானே ஏழைகளின் ஆட்சி? இதற்குப் பெயர் மக்களாட்சிதான். நிலப்பிரபுக்கள் ஆட்சியல்ல.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 17வது பிரிவின்படி தீண்டாமை ஒழிக்கப் படுகிறது. இச்சட்டம் 1.6.1955 முதல் நடைமுறையில் கசட் பதிவின் படி அமுலுக்கு வந்தது. (SRO 1109/D/23-5-1955)


தீண்டாமையை யார் ஆதரித்தாலும் உடனடி நடவடிக்கை எடுக்கலாம். தீண் டாமைக்குரிய தண்டனையை அனுபவிப்ப தோடு அவர் தொழில் புரிபவராக இருந்தால் அவரது உரிமத்தை ரத்து செய்யவும், அவரது பதவியை தற்காலிகப் பணி நீக்கம் செய்யவும் உரிமை உண்டு. (Gaz. Of India – 1953 –Extra Pt-II Sec 2, P-1208).

மேலே சொன்னவையெல்லாம் சட்டங் கள், அதை நடைமுறைப்படுத்துவது யார்? ஆண்டான், அடிமை, மேலோர் கீழோர் என்பது கிடையாது என்று பாடியவருக்கு பத்தாண்டுகள் ஆட்சியை பரிசாக கொடுத்தவர்கள் தமிழர்கள். ‘சாதிகள் இல்லையடி பாப்பா’ என்று பாப்பாக்களிடம் மட்டும் சொன்னவர் பாடப்புத்தகத்தில் இடம்பெற்று விட்டார். அப்பொழுது பாப்பாக்களாக இருந்தவர்கள் தானே இன்று ஆட்சிப்பீடத்தில்?


**முஸ்லிம் அல்லாதவர்கள் திருகுர்ஆனை இலவசமாக பெற வேண்டுமா? கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்**

**8148129887**

**இப்போது பரபரப்பான விற்பனையில் படித்து விட்டீர்களா!**




**அ. மார்க்ஸ் அவர்களின்**

**டி.எம். உமர் பாரூக்**

**ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்**


வெளியீடு :

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

**விலை : ரூ. 20.00**

# பாபரி மஸ்ஜித், வழக்கு நிலவரம்!



**ஜஃபரியாப் ஜீலானியுடன் பேட்டி**

எத்தனைத்தான் நாம் பாபரி மஸ்ஜித்-ஐ மையப்படுத்தி நிகழ்ச்சிகள் நடத்தினாலும், இறுதியில் நீதிமன்ற தீர்ப்பு என்றே நின்று விடுகின்றோம்.

நமது 'வைகறை வெளிச்சம்' மாத இதழில் நாம் வருடந்தோறும் நீதிமன்றத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை மக்கள் மன்றத்தில் வைத்துக் கொண்டு வருகின்றோம்.

இதில் பாபரி மஸ்ஜித் வழக்கை சுன்னி வஃப் போர்டு சார்பில் இன்றளவும் வாதாடி வரும் மூத்த வழக்கறிஞர் ஜஃபரியாப் ஜீலானி அவர்களையே பேட்டிக் கண்டு வருகின்றோம்.

பாபரி மஸ்ஜித் வழக்கிற்கு முதல் முதலாக 2000 ஆம் ஆண்டு பணம் தந்தவர்கள் நாம், என்ற அடிப்படையில் வழக்கறிஞர் ஜஃபர்யாப் ஜீலானி அவர்கள் நம்மிடம் நன்றி பெருக்கோடு நடந்து வருகின்றார்கள்.

2012இல் லக்னோவில் நாம் நடத்திய புத்தக வெளியீட்டு நிகழ்ச்சி ஒன்றிலும் இதனைச் சொல்லிக் காட்டினார்கள். இப்போதும் அவர் களைப் பேட்டிக் கண்டோம். அன்று வெறும் மூத்த வழக்கறிஞராக இருந்த ஜஃபர்யாப் ஜீலானி அவர்கள் இப்போது உத்திரப்பிரதேச அரசின் Additional Advocate General அடிஷனல் அட்வகேட் ஜெனரல்.

சென்றவருடம் நாம் ஜஃபர்யாப் ஜீலானி அவர்களைப் பேட்டி கண்ட போது, அவர்கள் நம்மிடம் ஆழ்ந்தகவலையோடு ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். அது,

பாபரி மஸ்ஜித் வழக்கில் கடைசியாகத் தீர்ப்பு வழங்கிய அலஹாபாத் நீதிமன்றத் திலிருந்து வழக்கு சம்மந்தமான எந்த ஆவணங்களும் உச்ச நீதிமன்றம் செல்ல வில்லை என்பதே அது.

இதனால் இப்போது நாம், நமது பேட்டியை இதிலிருந்ததே தொடங்கினோம்.

கேள்வி : பாபரி மஸ்ஜித் இருந்த இடம் யாருக்குச் சொந்தம் என்ற வழக்கில், அஹமதாபாத் நீதிமன்றத்திலிருந்து வழக்குக் குறித்த ஆவணங்கள், இன்னும் உச்ச நீதிமன்றம் செல்லவில்லை என்றீர்கள் இப்போதைய நிலவரம் என்ன?

ஜஃபர்யாப் ஜீலானி : நாம் அப்போதே உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்திருந்தோம். அதில் அஹமதாபாத் நீதிமன்றத்திற்கு உச்ச நீதிமன்றம் ஓர் ஆணையைப் பிறப்பிக்க வேண்டும். அதில்



பாபரி மஸ்ஜித் சம்மந்தமான எல்லா ஆவணங்களையும் உடனே உச்சநீதிமன்றம் அனுப்பிட வேண்டும் எனக் கூறிட வேண்டும் என்றோம்.

உச்ச நீதிமன்றமும் நமது மனுவை ஏற்று ஆணையைப் பிறப்பித்தது. இந்த ஆணையை ஏற்று அஹமதாபாத் நீதிமன்றம் எல்லா ஆவணங்களையும் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றிற்று.

இப்போது அதில் அந்த ஆவணங்களில் ஆங்கிலம் அல்லாத மொழியிலிருக்கும் ஆவணங்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டும் என ஆணையிட்டுள்ளது உச்சநீதிமன்றம்.

இப்போது மொழி பெயர்ப்பிற்கான குழுவைத் தேர்வு செய்யும் பணி மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றது. இதில் வழக்கில் சம்மந்தப்பட்ட எல்லோருடைய ஒப்புதலையும் பெற்ற ஒரு குழுவை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல். இந்த வேலை, இப்போது நடந்து கொண்டிருக்கின்றது.

கேள்வி: இந்த மொழி பெயர்ப்புப் பணிகள் எத்தனை நாள்களில் முடியும் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

பதில் : ஒரு வருடத்தில் முடியும் என எதிர்பார்க்கின்றேன்.

கேள்வி: இதனிடையே பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோவில் கட்டும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு விட்டன. ஆனால் அவை மிகவும் மறைவாக நடக்கின்றது, என பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றனவே!

பதில் : (கோபத்தோடு) அது எப்படி முடியும்? இந்தியாவில் யாரும் நமது உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலை மீற முடியாது. மீறிட விட மாட்டோம். அங்கு கோயில் கட்டும் வேலைகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நடக்கவில்லை.

கேள்வி : முஸ்லிம்களின் சார்பில் அல்லது அரசு வழக்கறிஞர் என்ற அளவில் நீங்கள் அயோத்தியா சென்று ஏதேனும் கட்டுமான பணிகள் நடக்கின்றனவா? எனப் பார்ப்பதுண்டா?

பதில் : எமது பிரதிநிதி ஒருவர், அயோத்தியாவில் நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் பார்வையின் கீழ் தான் மஸ்ஜித் இருந்த இடம் இருந்து கொண்டிருக்கின்றது. அங்கு அப்படி எந்தக் கட்டுமானப்பணிகளும் நடக்கவில்லை.

ஃபைஜாபாத்திலும், நமது பிரதிநிதி ஒருவர் இருக்கின்றார். இவர் ஞாயிறு தோறும், அயோத்தியா சென்று பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தைப் பார்வையிட்டு வருகின்றார். அங்கு எந்தக் கட்டுமானப் பணிகளும் நடக்கவில்லை.

இப்போது சமாஜ்வாடி கட்சியின் ஆட்சிதான் உத்திரப் பிரதேசத்தில் நடந்து கொண்டிருக்கின்றது. அதனால், பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் யாரும் எதையும் செய்திட இயலாது.

கேள்வி : பாபரி மஸ்ஜித்-ஐ இடித்த சதிகாரர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கு என்னவாயிற்று?

பதில் : அந்த வழக்கை உத்திரப்பிரதேச அரசு விரைந்து நடத்திட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால் மத்திய புலனாய்வுத்துறை (CBI Central Bureau of Investigation) என்ற அமைப்பு தாக்கல் செய்திட வேண்டிய அறிக்கையைத் தாக்கல் செய்திடவில்லை.

மத்திய புலனாய்வுத்துறை தனது அறிக்கையை தாக்கல் செய்ததும், வழக்கை விரைந்து நடத்திட உத்திரப் பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.

**பேட்டி எம்.ஜி.எம்.**

இங்கே நாம் கவனிக்க வேண்டியவை

1. உச்ச நீதிமன்றந்தான் பாபரி மஸ்ஜித் வழக்கை இன்றளவும் இழுத்தடித்து வருகின்றது. இதனை நாம் டிசம்பர் 2014 வைகறை வெளிச்சம் இதழிலும் நாம்

வெளியிட்ட பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள் என்ற நூலிலும் விளக்கமாக குறிப்பிட்டுள்ளோம். இதை பல நீதிபதிகளே கூறியுள்ளார்கள். விரிவான தகவல்களுக்கு வாசகர்கள் அந்த நூலை வாங்கிப் படிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

2. உச்சநீதிமன்றம், இப்போது பிற மொழிகளில் இருக்கும் ஆவணங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டும் எனக் கூறியுள்ளது. இதற்கு முன் இந்த வழக்கு அலஹாபாத் உயர் நீதிமன்றத்தில் தான் நடந்தது. அலஹாபாத் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு தெரிந்த மொழி, உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அப்படி மொழிபெயர்ப்புகள் தேவைப் பட்டால் அப்போதே அதைச் செய்திருப் பார்கள். எல்லாமே நமக்கு சற்று நெருட லாகவே இருக்கின்றது. இந்த மொழிபெயர்ப்பு ஆணை வழக்கை தக்க தருணம் வரை? இழுத்தடிக்க முயற்சி செய்கின்றதோ என்ற ஐயம் எழுகின்றது.

உச்சநீதிமன்றம் நீதியின் பக்கம் நிலைத்து நிற்கும் என்றே சிறுபான்மையினர் எதிர்பார்க்கின்றார்கள். காலம் பதில் சொல்லட்டும். இன்ஷா அல்லாஹ் காத்திருப்போம்.

3. பாபரி மஸ்ஜித் இடித்த சதி வழக்கில் மோடியின் ஆட்சியின் கீழ் மத்திய புலனாய்வுத்துறை அறிக்கை தாக்கல் செய்யும் என எதிர்பார்ப்பதற்கில்லை. காரணம், இந்த சதி வழக்கில் முக்கிய குற்றவாளி சாட்சாத் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி முதலியோர் உண்டு.

அப்படியே ஓர் அறிக்கையை மோடியின் ஆட்சியின் கீழ் தாக்கல் செய்தால் அது அத்வானி வகையராவை விடுவிக்கும் அறிக்கையாகத்தான் இருக்கும்.

முலாயம் சிங் யாதவ் உத்திரப் பிரதேசத்தில் முஸ்லிம்களை நடத்தும் விதத்தைப் பார்த்தால் அத்வானிகளைக் காப்பாற்றிட எல்லா முயற்சிகளையும் செய்யும் என்பது தெளிவு. ஏனெனில் 2012 ஆம் ஆண்டில் நடந்த உத்திரப் பிரதேச சட்ட மன்றத் தேர்தலில் முலாயம் சிங்கின் கட்சி முஸ்லிம்களின் ஆதரவினால் அமோக வெற்றிப் பெற்றது. பாரதீய ஜனதா கட்சி படுதோல்வி அடைந்தது. முலாயம் சிங் யாதவ் தன் மகனை முதல்வராக்கினார்.

அந்தப் பதவி ஏற்பு நிகழ்ச்சிக்கு, அத்வானியை அழைத்து வந்து அமர வைத்து அழகு பார்த்தார். அன்று முதல் முஸ்லிம் களை 130 முறை சங்கப்பரிவாரங்களால் தாக்கப்பட்டார்கள்.

முலாயம் சிங் யாதவின் அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

ஆகவே பாபரி மஸ்ஜித்-ஐ இடித்த வழக்கிலும் நியாயம் கிடைக்கப் போவ தில்லை.

**எம்.ஜி.எம்.**

## பாபரி மஸ்ஜித் இடிப்பும் காந்தி கொலையும்

அன்மையில் வெளிவந்த 'அயோத்தியாவின் இருண்ட இரவு' என்ற நூல் (22.12.1949)ல் பாபரி மஸ்ஜிதில் சிலை வைத்த நிகழ்வுக்கும், காந்தியை கொலை செய்த நிகழ்வுக்கும் பின்னணியில் நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கூறுகின்றது. அதனை அப்படியே தருகின்றோம்.

இருப்பினும் இரண்டு நிகழ்வுகளிலும் சில வேறுபாடுகளும் இருந்தன. மசூதியைக் கைப்பற்றுவதற்கு இந்து மதவாதிகள் கையாண்ட திட்டச் செயலாக்கம் சற்று வேறுபட்டிருந்தது. அது போன்றே, பாபர் மசூதி கைப்பற்றப்பட்ட நிகழ்வை ஆளும் கட்சியான காங்கிரசும் அதன் அரசும் எதிர் கொண்ட விதமும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. பட்டப் பகலில் பொது மக்கள் முன்னிலையில் மகாத்மா காந்தி கொல்லப்பட்டார். ஆனால் பாபர் மசூதி கோயிலாக்கப்பட்ட நிகழ்வு மிக மிக இரகசியமாக இரவு நேர இருளின் போர்வையில் நடத்தி முடிக்கப்பட்டது. காந்தி கொலை செய்யப்பட்டவுடன் அரசு விரைந்து செயல்பட்டு உறுதியான நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவாக இந்து மகா சபை சில நல்ல பாடங்களைக் கற்றுக் கொண்டது. பெருமளவிலான அரசியல் ஆதாயத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக அரசுடன் மோதுவதைத் தவிர்க்க வேண்டும் என்பது ஒரு பாடம். மற்றொன்று தங்களது இந்து மதவாதச் செயல்பாடுகளுக்கு ஒத்துழைக்கும் காங்கிரஸ் கட்சியிலுள்ள ஒரு தனிப்பிரிவினரைத் தங்களது வஞ்சகச் சதித் திட்டங்களில் இணைத்துப பங்குபெறச் செய்ய வேண்டும் என்பதே. எனவே

இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் அயோத்தியில் தங்களது வஞ்சகச் சதித் திட்டத்தைச் செயல்படுத்தப் புகுந்த போது மிகவும் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டார்கள். பாபர் மசூதி முற்றிலுமாக சிறைபிடிக்கப்பட்டுத் தாழிடப்படும் அளவிலும், அவர்கள் முன்னெச்சரிக்கை யோடு திரைக்குப் பின் இருந்து செயல்பட்டார்கள். சிறை பிடிக்கப்பட்ட வுடன் நேரத்தை வீணாக்காமல் இந்துக் களைப் பெருமளவில் திரட்டும் வஞ்சகத் திட்டத்தைச் செயல்படுத்தி தாங்கள் பெற்ற வெற்றியை உறுதிச் செய்து கொண்டார்கள். அயோத்தியில் மதவாத உணர்வுகளைச் கிளறி விட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைச் செய்து முடித்ததன் வாயிலாக அவர்கள் எதிர் நோக்கிய அளவிலான அரசியல் ஆதாயங் களை அடைந்திடவில்லை என்றாகிலும், இரவில் திருட்டுத் தனமாக நடத்தி முடிக்கப்பட்ட செயல் மற்றும் அதன் பின் இருந்த வஞ்சகச் சதித் திட்டம் ஆகியவற்றின் இரகசியம் இவை முழுவதுமாக வெளிப்படாதவாறு மறைத்து தங்கள் செயலில் வெற்றி பெற்றார்கள்.

மகாத்மா காந்தியைக் கொலை செய்வதற்காக நடத்தப்பட்ட சதித் திட்டத்தின் பின்னணியைப் புலனாய்வு செய்வதற்காக இந்திய அரசு 20 ஆண்டுகள் கடந்த பின்னராவது ஒரு விசாரணை ஆணையத்தை ஏற்படுத்தியது. ஒரு நீதிபதியின் தலைமை யிலான அந்த ஆணையம் விரிவான புலனாய்வுக்குப் பின்னர் தெளிவான அறிக்கையை அளித்தது. அது போன்றதொரு புலன் விசாரணை பாபர் மசூதியைக் கைப்பற்றி இந்துக் கோயிலாக மாற்றிய செயலுக்குப் பின்னிருந்த சதித் திட்டத்தையும் சதிகாரர்களையும் அடையாளம் காட்டுமாறு செய்யப்படவில்லை. அதன் விளைவாக இந்தியாவின் அரசியல் போக்கையே மாற்றி அமைத்த ஒரு பெரு நிகழ்வு ஓர் உள்ளூர் அளவிலான ஒரு குற்றச் செயல் என்பதாக விடப்பட்டுவிட்டது. அதுவென்றாகினும் அக்குற்றச் செயலானது காந்தி கொலை செய்யப்பட்ட பின் இந்து மகாசபை இழந்து நின்று அதன் எதிர்கால அரசியல் வாய்ப்புக் களை உயிர்ப்பிக்கும் நோக்கத்துடன் மகாசபையின் தேசிய மாநில மற்றும் உள்ளூர் அளவிலான தலைவர்கள் ஒருங்கிணைந்து நுணுக்கமாகத் திட்டமிட்ட சதிச் செயலே ஆகும்.

மேலும் பொதுவிவாதத்திற்கு உரியதாக வெளிப்படத் தெரிவதை மட்டும் அழிக்காது விட்டு வைத்த காலம். இந்து மகாசபையின் அயோத்தி சதித்திட்டம் குறித்த இரகசியத்தை வெளிப்படக் காண இயலாதவாறு மூடி மறைத்து விட்டது. அந்தக் கேடு மிக்க இரவில் நடத்தப்பட்ட இழி செயலைக்காண விடாது, அச்செயல் தொடங்கி வைத்த முடிவே இல்லாத நீதிமன்ற வழக்கு திசைதிருப்பி விட அதுவே நாட்டின் மதவாத அரசியலுக்கு அடித்தளமாகவும் அமைந்துவிட்டது. வழக்கு திசை திருப்பப்பட்டதன் விளைவாக வழக்கில் முக்கியமான பகுதி, அதாவது மறைக்கப்பட்ட பகுதி - இரவில் திருட்டுத்தனமாகப் பிறருக்கு உரிமையான வழிபாட்டு இடத்திற்குள் நுழைந்து சிலையை நட்டு வைத்த குற்றச் செயல் - புலனாய்வின் அடிப்படையில் உண்மை கண்டறியப்படாது ஒதுக்கப் பட்டது. எடுத்துக்காட்டு பாபர் மசூதி. இராம ஜன்ம பூமி வழக்கு தொடர்பாக இந்திய அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் 1949ஆம் ஆண்டு நிக்ழவை வெறுமனே ஒரே ஒரு பத்தியில் கூறி முடித்துக் கொண்டது. 6.12.1992 அன்று மசூதி இடித்துக் தள்ளப்பட்ட நிகழ்வுக்குப் பின் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை 1949ஆம் ஆண்டு நிகழ்வு குறித்துக் கூறியதெல்லாம் இதுவே.

“1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பூசலுக்கு உட்பட்ட கட்டிடத்தில் சிலைகளை நட்டிவதைத்த நிகழ்வு பூசலைப் புதியதொரு நிலைக்கு கொண்டு செலுத்தியது. குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 145 இன் கீழ் பூசலுக்கு உட்பட்ட இடங்கள் ஜப்தி செய்யப்பட்டன. அதைத் தொடர்ந்து உரிமை கோரும் வழக்குகளும் உடனடியாகத் தொடுக்கப்பட்டன. இந்த உரிமை கோரும் வழக்குகளில் வழங்கப்பட்ட இடைக்காலத் தடைஉத்தரவு வழக்கில் தொடர்புயுடையவர் களோ, பிறரோ சிலையை அகற்றுவதற்கோ, அதை வழிபாடு செய்வதற்கு தடை செய்யவோ இயலாதவாறு தடை விதித்தது. அதன் விளைவாக 1969ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்திலிருந்து 6.12.1996 ஆம் நாள் வரையிலும் இந்தக் கட்டிடம் மசூதியாகப் பயன்படுத்தப்பட்டதில்லை.”

# முஸ்லிம்களுக்கெதிரான நாகர்கோவில் காவல்துறையின் வெறியாட்டம்!

நாம் பல்வேறு செய்திகளுக்காக நாகர்கோவிலை உலா வந்துள்ளோம். ஆனால் அத்துமீறல், அராஜகம், வரம்பு மீறல், சதி, உச்சநீதிமன்ற உயர் நீதிமன்ற உத்தரவை மீறுதல், எல்லாவிதமான கீழ்த்தரமான வேலைகளையும் செய்து விட்டு பாதிக்கப் படுவர்கள் மீதே பொய்வழக்கு போடுவது போன்ற கேவலமான கொடுமைகள் நடந்து வருவதும் நாகர்கோவிலில் மட்டும்தான்.

### தொடர் தீ வைப்பு சம்பவங்கள்

1. நாகர்கோவில் வடசேரியில் செருப்பு கடை வைத்திருக்கும் சித்திக் என்பவரின் ஹோண்டா சிட்டி கார் 30.11.2013 அன்று நள்ளிரவு 1.25க்கு எரிந்தது.

2. ரஸூல் என்பவருக்கு சொந்தமான ஆட்டோ 11.12.2013அன்று நள்ளிரவு 1.25க்கு எரிந்தது.

3. இடலாக்குடி வெள்ளாளர் தெருவில் வசிக்கும் நல்ல பெருமாள் பிள்ளை என்பவரின் டாடா நானோ கார் மற்றும் டாட்டா சபாரி கார் 14.02.2015 அன்று அதிகாலை 2 மணிக்கு எரிந்தது.

4. பறக்கை, காந்திபுரம் மெயின் ரோட்டில் வசிக்கும் மதுசூதனன் கார் 5.7.2015 அன்று அதிகாலை 2 மணிக்கு எரிந்தது.

5. ரஹ்மத் கார்டன் 2வது தெருவில் வசிக்கும் ஷேக் மைதீனின் ஸ்கார்பியோ கார் 10.7.2015 அன்று எரிந்தது.

6. மாலிக் தீனார் தெருவைச் சேர்ந்த ஷேக் ஷமீமின் துணிப்பை கோடவுடன் 15.7.2015 அன்று எரிந்தது.

7. நாகர்கோவில் பஸ் ஸடாண்டு மீன் மார்க்கெட் அருகில் சிறிய அளவில் ஹார்டுவேர் கடை நடத்தி வரும் லத்தீப் என்பவரின் ஹோண்டா ஆக்டிவா 25.8.2015 அன்று இரவு 9.15க்கு எரிக்கப்பட்டது.

### செருப்புக் கடை சித்திக்கின் கார்

இவருடைய கார் எரிந்து கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாகப் போகின்றது. இன்று வரை குற்றவாளி யார் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை போலீசாரால், கேவலம்! ஆனால், சித்திக் தன்னுடைய கார் எரிந்த மறுநாளே தன் வீட்டில் கேமரா பொருத்தி விட்டார். அதன் உதவியால் யார் குற்றவாளி யாக இருக்கலாம் என்று சி.டி. மற்றும் பென்டிரைவ் கூட போலீசில் கொடுத்தும் இன்று வரை நடவடிக்கை இல்லை. இது போக விசாரணை என்ற பெயரில் அடிக்கடி போலீஸ் தொந்தரவும் ரொம்ப அதிகம். கடந்த 5 மாதங்களுக்கு முன்பு தன்னுடைய சொந்த வீட்டையே விற்று விட்டு வேறு வீட்டுக்கு சென்று விட்டார். பாராட்டப் பட்ட நாகர்கோவிலில் போலீசார்.

### ரஸூல்

இவருடைய ஆட்டோ எரிக்கப்படு வதற்கு ஒரு நாள் முன் 3 பேர் இரண்டு பைக்குகளில் (போலீஸார் கூறுவது போல் ஒரு பைக் அல்ல) வந்து இவரது காரை நோட்டமிட்டுள்ளனர் மற்றும் இந்த ஆட்டோவின் மீது ஏறி விளையாடி உள்ளனர். இதனை கண்ணால் கண்ட சாட்சி உண்டு. இவருக்கென்று எதிரிகள் யாருமில்லை. இவர் தானுண்டு தன் வேலையுண்டு என்று வாழ்பவர்.

### நல்லபெருமாள்

இவரை தொடர்பு கொள்ள நாம் இவரது வீட்டிற்கு சென்ற போது இவர் வீட்டில் இல்லை. தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்றால் இவரது தொலைபேசி எண்ணை இவருடைய அண்டை வீட்டார் அணைவரிடமும் கேட்டுப் பார்த்தோம். கிடைக்கவில்லை. இவர் அ.தி.மு.க. கட்சிக்காரர்.

### ஷேக் மைதீன்

இவர் ஒரு பால் வியாபாரி. இவர் யாருக்கும் எதிரானவர் அல்ல. இவர் தன்னுடைய ஸ்கார்ப்பியோ காரை எரித்த வர்கள் இன்னாராக இருக்கலாம் என்று சந்தேகத்தின் பேரில் ஒரு பெயரை உச்சரித்துள்ளார். ஆனால் மறுநாளே இவர் யாரை சந்தேகம் என்று சொன்னாரோ அவரை விட்டு விட்டு வேறு மூன்று பேர் மீது வழக்கு போட்டு வேகவேகமாக போலீஸ் தனது வேலையை முடித்துக் கொண்டது.

### ஷேக் ஷமீம்

இவர் ஒரு துணிப்பை வியாபாரி. இவர் ரோட்டில் வண்டியில் வைத்து துணிப்பை விற்று வந்தார். தன்னுடைய லாபப் பணத்தை பணமாக சேமிக்காமல் அதில் துணிப்பை வாங்கி சரக்காக சேமித்து வந்துள்ளார்.

தன்னடைய வீட்டில் சரக்கு வைக்க வசதி இல்லாததால் கோட்டார் நாயுடு ஆஸ்பத்திரி எதிரில் உள்ள தனியார் காம்ப்ளக்ஸில் ஒரு கடை வாடகைக்கு எடுத்து அதில் சரக்கை சேமித்து வந்தார். அந்தக் கடையின் வலது மூலையில் வெளிச்சத்திற்காக கண்ணாடியின் ஒரு புகை போக்கி (அதாவது) அதின் மேல்புறம் மேல் மாடியில் (அதாவது மொட்டை மாடியில்) உள்ளது. அது திறந்தே இருக்கும். கீழே கடையில் உள்ள புகை போக்கியின் கண்ணாடி இவர் வாடகைக்கு வரும்போதே உடைந்து இருந்துள்ளது. இது குறித்து இவர் காம்ப்ளக்ஸ் உரிமையாளரிடம் புகார் தெரிவித்துள்ளார். ஆனால் உரிமை யாளரோ கண்டு கொள்ளவே இல்லை. மேலே இருந்து யாராவது ஒரு தீக்குச்சியை கொளுத்திப் போட்டால் கூட அது நேராக கடையின் உள்ளே தீப்பிடிக்கும்.

இவருடைய கோடவுன் தீப்பிடித்து எரிந்ததில் கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் ரூபாய் நஷ்டம். அப்படியே இடிந்து போன நிலையில் இருந்த இவரை ஷேக் மைதீன் ஸ்கார்ப்பியோ, நல்லபெருமாள் மற்றும் மதுசூதனன் கார்கள் எரித்த வழக்கு இரண்டையும் இவர் மீது போட்டது குரூரமிக்க காவல்துறை. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது. ஏனெனில் எந்த வழக்கையும் கண்டுபிடிக்க துப்பில்லாத நாகர் கோவில் போலீஸார் செய்த இந்த சதியால் கோடவுன் தீப்பிடித்த வழக்கு குப்பையில்.

### சம்பவங்களின் ஒற்றுமை

ஹோண்டா சிட்டி கார் சித்திக்கும் எரிந்த ஆட்டோவின் உரிமையாளர் ரஸூலும் நெருங்கிய நண்பர்கள். நல்லபெருமாள் பிள்ளையும், ஷேக்மைதீனும் அ.தி.மு.க. கட்சியைச் சார்ந்தவர்கள். எரிந்த கோடவுன் உரிமையாளர் ஷேக்ஷமீம் குற்றவாளி என்று கைது செய்யப்பட்ட அப்துல்ரகீமும் நண்பர்கள். ஷேக்மைதீனின் ஸ்கார்ப்பியோ கார் எரிந்த போது ஓடிச் சென்று அணைத்த நபர்களில் முதலாமவர் லத்தீப் (இவருடைய ஹோண்டா ஆக்டிவா பின்னாளில் எரிக்கப் பட்டது). எல்லா எரிப்புச் சம்பவங்களின் போதும் தவறாமல் அஜரானவர்கள் எழில் சுரேஷ் என்ற உளவுத்துறையைச் சார்ந்தவர்.

### ஜனநாயகத்தின் நான்காவது தூணை சிதைத்த நாகர்கோவில் போலீசார்

ஷேக் ஷமீம் வெறுமனே துணிப்பை வியாபாரம் மட்டும் செய்யவில்லை. மாறாக மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் “வைகறை வெளிச்சம்” பத்திரிக்கையில் பகுதி நேர நிருபராகவும் இருக்கின்றார். இவரை “கைது செய்து” பலப் பொய் வழக்குகளைப் தொடர்ந்து போட்டு வருகின்றார்கள். பல முறை இவர் நாகர்கோவில் காவல்துறையின் தகிடுத்தத்தங்களை தோலுரித்துக் காட்டி இருக்கின்றார். இதற்கு முன் ஜாரியத் என்ற பெண்மணி மக்கள் அடர்த்தியாக வாழும் இடத்தில் தெருவில் வைத்து செய்த விபச்சாரத்தை தீர்த்தமைக்காக கைது செய்து சிறையில் அடைத்தார்கள். பொய் வழக்குப் போட்டார்கள். பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

### போலீசாரின் முரண்பாடுகள் செயல்கள்.

1. ஷேக் மைதீனின் கார் எரிந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் (எப்.ஐ.ஆர்)

குற்றவாளிகள் பல்சர் பைக்கில் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் போலீ சாரோ குற்றவாளிகள் ஹோண்டா ஷைன் பைக்கில் வந்ததாக குறிப்பிட்டுள்ளனர்.

2. கார்கள் எரிக்கப்பட்ட உரிமை யாளர்களும் சாட்சிகளும் குற்றவாளிகள் இரண்டு பைக்கில் வந்ததாகக் குறிப்பிடு கின்றனர். போலீசார் ஒரு பைக் / (ஹோண்டா ஷைன்) கில் வந்ததாக அடித்துக் கூறுகின்றனர்.

3. கண்ணால் கண்ட சாட்சிகள் (போலீசார் குறிப்பிடும் சாட்சிகள் அல்ல) எரிக்க வந்த குற்றவாளிகளின் வயது 18 முதல் 20 வரை தான் இருக்கும் என்று சொல்லியும் 26,26 மற்றும் 39 வயதுள்ளவர்கள் மீது பொய் வழக்கு போடுவது அப்பட்டமான அநியாயம். இது பொய் வழக்கு என்று மக்களுக்குத் தெரியாதா? நாகர்கோவில் காவல் துறையினர் திட்டமிட்டுத்தான் இதைச் செய்கின்றார்கள் என மக்கள் பேசுகின்றனர்.

4.ஹோண்டா ஷைன் போன்ற பைக்கில் ஷேக் ஷமீம் மற்றும் முகமது அப்சல் இருவர் உட்கார்ந்தாலே ஒரு சிறுவன் கூட உட்கார முடியாத சீட்டில் மூன்று பேர் உட்கார்ந்து வந்ததாக கூறும் போலீஸாரின் நிலைமை நீதிமன்றத்தில் மிக பரிதாபமாக இருக்காதா?

5. சித்திக்கின் "ஹோண்ட சிட்டி கார்" எரித்து இரண்டு வருடங்களாகியும் காணாமல் போன குற்றவாளி எங்கே?

6. ரஸூலுடைய ஆட்டோவை எரித்த வர்கள் யார்? அவர்கள் காணாமல் போயும் இரண்டு வருடங்கள் ஆயிற்றே?

7. ஷேக் ஷமீமின் கோடவுனை எரித்த குற்றவாளி யார்?

8. போலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்ட குற்றவாளிகள் தான் வாகனங்களை எரித்தவர் கள் என்றால், எரித்தவர்கள் சிறையில் இருக்கும் போது லத்தீப்பின் ஹோண்டா ஆக்டிவாவை எரித்தவர்கள் யார்?

## உள்துறையின் சோம்பேறித்தனம்

சரி, உள்துறையின் கட்டுப்பாட்டில் தானே காவல்துறை வருகிறது? உள்துறை முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் தானே வருகிறது? இல்லை நாகர் கோவில் காவல்துறை மட்டும் மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் வருகிறதோ என்ற சந்தேகமும் நமக்கு வரத்தான் செய்தது. நாகர்கோவிலில் நடந்து வரும் (2013 முதல் 2015 வரை) முஸ்லீம்களுக்கு சொந்தமான கொடவுன் மற்றும் வாகனங்கள் தொடர்ந்து தீ வைக்கப்பட்டு வருகின்றனவே! தமிழில் செய்திகள் வந்தன. செய்தித்தாள் படிக்கும் பழக்கம் யாருக்கு இருக்கின்றதோ இல்லை யோ உள்துறையை சார்ந்தவர்களுக்கு இருக்கும் என்று கருதுகிறோம். இது குறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கின்றன என்று உள்துறையோ அல்லது உள்துறை யார் வசம் இருக்கின்றதோ அவர்களோ கேள்வி எழுப்பியதே இல்லையா? அல்லது கேள்வி எழுப்ப வேண்டியவர்கள் உறக்கத்தில் உள்ளனரா? இது குறித்து நாமே ஒரு புகாரை உள்துறைக்குத் தந்துள்ளோம்.

## பரிதாபத்திற்குரியவர்கள்

இந்த வழக்குகளில் குற்றவாளிகள் என்று கைது செய்யப்பட்டோர் மூன்று பேருமே பரிதாபத்துக்குரியவர்கள். அப்துல் ரகீம் ஒரு ஆட்டோ ஓட்டுநர். அன்றாடங் காய்ச்சி. அவர் இஸ்லாத்தை தழுவியவர். இதுதான் இவர் செய்த பெருங்குற்றம் காவல் துறையின் பார்வையில். இவர் செய்த இரண்டாவது குற்றம் இஸ்லாத்தின் பக்கம் தொடர்ந்து மக்களை அழைத்துச் கொண்டி ருப்பதுதான்.

அடுத்ததாக முஹம்மது அப்சல். இவர் இன்ஜினியரிங் பட்டதாரி. இவர் தந்தை ஒரு நோயாளி. இவருடைய இரு அண்ணன்களில் ஒருவர் வெளிநாட்டில் உள்ளார். இன்னொரு வர் ஒரு கல்லூரியில் பியூனாக வேலை பார்க்கிறார். தன் தம்பியை ஒரு பொறியியல் வல்லுநராக்க வேண்டும் என்று இந்த குடும்பத்தாரின் கனவில் நாகர்கோவில் போலீசார் மண்ணை வாரித் தூற்றினர்.

## விட்டுக் கதவை உடைத்தனர்

அடுத்தவர் ஷேக் ஷமீம். ரோட்டில் நின்று துணிப்பை வியாபாரம் செய்பவர்.

இவருடைய குடும்பத்திற்கு இவர் வருமான வழி. இவரை கைது செய்வதற்காக இவருடைய வீட்டிற்குச் சென்ற போலீசார் கதவை உடைத்து விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்றபோது இவரது குடும்பத்தார் சிறு சிறு பையன்கள் நால்வர் உட்பட கதறி அழுதது நெஞ்சை உலுக்குவதாக இருந்தது. இது அக்கம்பக்கத்தினர் தெரிவித்தது. கேட்கும் நமக்கே கொதிக்கின்றதென்றால் பார்த்தவர்கள் எப்படி?

**உண்மை குற்றவாளிகள்**


நாகர்கோவில் எஸ்.பி., தலைமை காவல்துறை கண்காணிப்பாளர் மணி வண்ணன், உளவுத்துறையை சேர்ந்த எழில், சுரேஷ், கோட்டார் ஆய்வாளர் கஜேந்திரன், மற்றும் எஸ்.ஐ.மோகன்ஐயர் மனது வைத்தால் உண்மை குற்றவாளிகளை கண்டுபிடிக்கலாம். ஏனென்றால் இவர்கள் குற்றவாளிகள் என்று பிடித்த மூன்று பேருமே நிரபராதிகள் என்று இவர்களுக்கு நன்றாகவே தெரியும். இன்றளவும் முஸ்லிம்கள் மேல் பொய் வழக்குப் போட்டுக் கொண்டிருந்தவர் சுஜித் ஆனந்த். ஓர் ஆட்டுக்குட்டிக் காணாமற் போனதற்கு ஒரு இளம் பெண்ணையும், அவள் கைக்குழந்தையையும் மூன்று நாள் காவலில் வைத்தவர். உயர்நீதிமன்ற ஆணைகளைத் திருத்தியவர். இதனால் உயர்நீதிமன்றத்தால் கண்டனத்திற்கு உள்ளானவர். இவரை எஸ்.பி. மணிவண்ணன் முடிந்தவரைக் காப்பாற்றினார். அவருடைய எல்லா அநீதிகளுக்கும் துணை நின்றார். ஆனால் அவர் ஓரங்கட்டப் பட்டுவிட்டார். இப்போது எஸ்.பி. மணிவண்ணன் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இராமநாதபுரம் சென்றுள்ளார். அங்குள்ள முஸ்லிம்களை "ஜாக்கிரதை" என எச்சரிக்கின்றோம்.

என்ன கொடுமை தெரியுமா வாசகர்களே? வீரப்பனை சுட்டுக் கொன்றதற்காக கிட்டத்தட்ட சத்தியமங்கலம் காட்டை கிரையும் செய்தால் என்ன விலை பெறுமோ அந்த அளவிற்கு சலுகைகளை அள்ளிக் கொடுத்த இந்த ஜெயலலிதா அரசாங்கம், இந்த அரசாங்கத்திற்கே நாகர்கோவில் போலீசார் அல்வா கொடுக்கின்றார்கள் என்றால் நாகர் கோவில் போலீசாருக்கு உள்ள திறமையை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

**கடைசிச் செய்தி**

நாம் இந்த வழக்குகள் குறித்த தகவல்களை சேகரித்துக் கொண்டிருக்கும் போதே நமக்கு ஒரு சிறப்பு அழைப்பு வந்தது. கோட்டார் ஆய்வாளர் கஜேந்திரன் டி.ஜி.பி. காத்திருப்போர் பட்டியலுக்கு அனுப்பி விட்டார் என்ற செய்தி தான் அது. ஒரு வேளை டி.ஜி.பி. உயர்நீதிமன்ற மதுரை கிளையின் 21.1.2014 தேதியிட்ட ஆணையை படித்திருப் பாரோ? வாய்ப்பே இல்லை!


**நாகர்கோவிலிருந்து ந.நி**


விலை ரூ. 200 மட்டுமே

இப்போது
பரபரப்பான
விற்பனையில்

**வேர்கள் பதிப்பகம்,**
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887




விலை ரூ. 225 மட்டுமே

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்ப்புக்கு : 8148129887

# தீன் சுடர் டி.எம். உமர் பாரூக்

## -மு. குலாம் முஹம்மத்



நாங்கள், அதாவது நான் (எம்.ஜி.எம்.), டி.எம். உமர் ஃபாரூக், கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ், தம்பி ரவூஃப், தம்பி மன்சூர் அலீ, ஒரு கட்டம் வரை டாக்டர் ஹபீப் முஹம்மத் ஆகியோர் நடத்திய இஸ்லாமிய பிரச்சாரத்தில் ஆடுதுறையை அடுத்த திருவாயப்பாடியைப் பற்றிக் குறிப்பிடப் போவதாக முந்தைய தொடரில் நான் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த வகையில் திருவாய்ப்பாடி நிகழ்ச்சியைப்பற்றி விரிவாகப் குறிப்பிடு கின்றேன். திருவாய்ப்பாடி திருப்பனந் தாளுக்கு பக்கத்தில் உள்ள குக்கிராமம். கும்பகோனத்திலிருந்து 18 கி.மீ. தூரத்தில் உள்ளது.

இந்த நிகழ்ச்சி நமது தாஃவா அமைப்பிற்கு முன்னர் எம்.என்.பி. (மனித நீதி பாசறை) அமைப்பு. முறையாக அறிவிக்கப் படுவதற்குமுன் நடந்த முதல் மாநாடு எனலாம். அப்போது தாஃவா அமைப்பிற்கு பெயர் வைத்திடவில்லை. பெயர் வைத்திட வேண்டும் என்று கூட நாம் நினைக்கவில்லை. அந்த நிலையில் தாஃவாவின் முக்கியத்துவம் பற்றிப் பேசிட இந்தியாவின் சிறந்த இஸ்லாமிய சிந்தனையாளர்களான டாக்டர் ரஃபாத் அவர் களும், டாட்கடர் யூசுப் அமீன் அவர்களும் வந்திருக்கின்றார்கள்.

டாக்டர் ரஃபாத் அவர்கள் ஒரு காலக்கட்டத்தில் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் அகில இந்திய தலைவராக இருந்தவர். இப்போது 'தாவத்' என்ற பத்திரிக்கையின் ஆசிரியராக வும் ஜமாஅத்தே இஸ்லாமிய அமைப்பின் பொது செயலாளரர்களில் ஒருவராகவும் இருந்து வருபவர். ஜாமியா மில்லியா இஸ்லாமிய என்ற உலகப் பிரசத்திப் பெற்ற பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் இருந்து வருகின்றார்.

டாக்டர் யூசுஃப் அமீன் ஒரு மருத்துவர். டெல்லிக்கு பக்கத்திலுள்ள அலிகர் பல்கலைக் கழகத்தில் புகழ் மிக்க மாணவர்களுள் ஒருவர். அங்கேயே வசித்து வருபவர். இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் மத்திய பிரதிநிதிக் குழுவில் உறுப்பினராக என்னோடு பல ஆண்டுகளாக பணியாற்றியவர். இவர்கள் இருவரும் சிறந்த சிந்தனையாளர்கள்.

இவர்களெல்லாம் திருப்பனந்தாள் வந்து நாங்கள் நடத்திய மூன்று நாள் கருத்தரங்கம், பயிலரங்கம் இவற்றில் கலந்து கொண்டு நான்காம் நாள் நடந்த திருவாய்ப்பாடி தாஃவா நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள். திருவாய்ப்பாடி நிகழ்ச்சியை ஒரு நாள் மாநாடு எனலாம். மாநாட்டின் தலைப்பு "தலீத் மக்களும், சமூக விடுதலை யும்". அன்றைய நாள் எங்களுடைய தாஃவா நிகழ்ச்சி ஒரு நாள் முழுவதும் நடக்கும். அதில் டி.எம். உமர் பாஃரூக், கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ், நண்பர் உத்திராசு ஆகியோர்

தலீத் மக்களுக்கு நடந்த தீண்டாமைக் கொடுமைகளைப் பற்றி பேசுவார்கள்.

**பினமும் புதைப்பும். . .**

திருவாய்ப்பாடி நிகழ்ச்சியில் உத்திராசு அவர்கள் தலீத் மக்களின் அவலங்களுள் ஒன்றை விவரமாக விளக்கமாக விரித்துறைத் தார்கள்.

தலீத் ஒருவர் இறந்துவிட்டால் அந்தப் பிணத்தை இடுகாட்டுக்கு எடுத்துச் சென்றி டுவதில் ஏற்படும் இடர்பாடுகள் சொல்லி மாளமாட்டா!

அரசாங்கம் மக்கள் பணத்தில் எல்லா மக்களுக்கும் போட்ட பொதுப்பாதை அல்லது சாலையில், தலீத் பிணங்களை எடுத்துச் சென்றிட அனுமதிப்பதில்லை ஆதிக்க ஜாதியினர்.

இதனால் மாற்று வழிகளைத்தான் தலீத்கள் தேடிட வேண்டியிருந்தது.

அந்த மாற்றுவழிகள் கற்களும், முற்களும் நிறைந்த பாதையாகத்தான் இருக்கும். ஏனெனில் இதுவரைக்கும் மக்கள் நடக்காத பாதைகள் வழியாகத்தான் நடந்திட வேண்டியதிருக்கும். அல்லது எப்போதாவது ஒரு முறை போய் வந்திருப்பார்கள். வழித் தடங்கள் அறவே இருக்காது.

இன்னும் கொடுமை என்னவென்றால் அந்தப் பிணத்தை தலீத்களுக்காகச் ஒதுக்கப்பட்ட இடுகாடு வரைக் கொண்டு செல்வோமா என்ற ஏக்கமே; அந்தக் கொடுமை!

ஆமாம் பிணம் கொண்டு செல்லும் நெடும் பயணத்தில் எதிர்படும் ஆறுகள் அகண்ட வாய்க்கால்கள் இவை ஒரு பெரும் சோதனை.

இந்த ஆறுகளுக்கு குறுக்கேயும் கால்வாய் இருக்கும். அரசாங்கம் . . . . . . அதாவது மக்கள் பணத்தில் கட்டிய பாலங்கள் இருக்கும். அந்த பாலத்தின் வழியாக சென்றிட வும் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்க மாட்டார்கள் ஆதிக்க ஜாதியைச் சார்ந்தவர் கள். தீட்டுப்பட்டுவிடும் என பிரஸ்தாயிப் பார்கள்.

ஆதிக்க ஜாதியினர் எதைச் செய்வார்களோ இல்லையோ பிணத்தை எடுத்துச் செல்லும் தலித்துக்கள் எந்த பாதை வழியாகச் செல்கின்றார்கள் என்பதைப் கூர்ந்து கவணித்துக் கொண்டே இருப்பார்கள்.

இதனால் பிணத்தை வைத்திருக்கும் பாடையில் தலைப்பக்கம் இருகயிறுகள், கால் பக்கம் இரு கயிறுகள் எனக் கட்டி ஆற்றின் இருபக்கமும் தலீத் இளைஞர்கள் நின்று கொண்டு இந்தப் பக்கம் இருப்பார்கள் கையிற்றை விட்டுக் கொடுக்க அந்தப் பக்கம் நிற்பவர்கள் கயிற்றை இழுப்பார்கள். பிணம் முழுதாக அந்தப் பக்கம் சென்ற பின் அதனைத் தூக்கி தனிப் பாதை வழியாகவே இடு காட்டுக்கு கொண்டு செல்வார்கள்.

சில நேரங்களில் திடீரென வரும் தண்ணீர் அலைகள் பிணத்தை அடித்துச் சென்றுவிடும். பாடை மட்டுமே மிஞ்சும். அது வரும் தண்ணீரில் பிணத்தைப் பறிகொடுத்த குடும்பத்தினரின் கனத்த இதயத்தோடு வீடு திரும்புவார்கள்.

இந்த தலீத் மக்களுக்குத் தலைமை தாங்கி பிரச்னைகளைச் சந்தித்துவரும் தலைவர்கள் செய்வதறியாது விரக்தியோடு வீடு திரும்புவார்கள்.

சில பல நேரங்களில் அனைவரும் ஒன்றாக நின்று அழுது புலம்புவதும் உண்டு.

இது போல், ஏற்பட்ட அவலங்களை மனதிற் கொண்டு சமூக ஆர்வலர்கள், தலீத் மக்களின் தலைவர்கள், இவர்களெல்லாம் ஒரு முடிவை எடுக்கின்றார்கள். இனி நாம் பொதுப் பாதை வழியாகத்தான் பிணத்தை எடுத்துச் செல்வோம். என்ன வந்தாலும் மாற்றுப் பாதைகளுக்குச் செல்லமாட்டோம் என்பதே அந்த முடிவு.

அடுத்தாற் போல் இன்னொரு தலீத் இறந்து விடுகின்றார். மாற்றுப்பாதை வழியாக போகச் சொல்லி கட்டாயப்படுத்துகின்றார் கள். முடியாது என உறுதியாக மறுத்துவிடு கின்றார்கள். விவகாரம் பெரிதாகின்றது. தலீத்கள் எதற்கும் தயாராகி விடுகின்றார்கள். காவல்துறையினர் வந்து குழுமிகின்றனர்.

காவல்துறை அதிகாரிகளும், வருவாய்துறை அதிகாரிகளும் விரைந்து வருகின்றனர்.

அத்தனை பேரும், தலீத் மக்களிடமே தங்கள் அதிகாரத்தைக் காட்டுகின்றார்கள். தலித்களிடம் நீங்கள் வழக்கமாக செல்லும் மாற்றுப் பாதை வழியாகவே செல்லுங்கள் என்று அதட்டுகின்றார்கள். தலீத் தலைவர்கள் முடியாது என்கின்றார்கள். காலம் தாமத மாகின்றது. மொத்த மாவட்ட ஆட்சிதுறையும் அங்கே வருகின்றது. அத்தனை பேரும் மாற்றுப் பாதை வழியாகப் பிணத்தை எடுத்துச் செல்லுங்கள் என்கின்றார்கள். இல்லையேல் பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தீர்கள் என வழக்குப் போடுவோம் என அதட்டுகின்றனர். ஆனால் முடியாது என்று மறுத்துவிட்டார்கள் தலீத் தலைவர்கள். அதிகாரிகள் பிணத்தை எடுத்து சென்று விட்டனர்.

அங்கலாயித்து நின்றார்கள் தலீத்கள். இப்படி ஓர் நிகழ்ச்சிக்கு பின் அப்போதும் இறந்தவரின் மகன் வந்து தலைவர்களிடம் ஒரு கேள்வி கேட்டான். என் அப்பாவுக்கு இறுதியில் இறுதிச் சடங்குகள் செய்யமுடியவில்லை. என் பிணத்திற்காவது பொதுபாதை இறுதி சடங்கு இவை கிடைக்குமா? எனக் கேட்டுக் கொண்டே அழுதான்.

சில வருடங்கள் கழித்து அவனும் இறந்துவிடுகின்றான். அவன் பிணத்திற்கும் அதே கதிதான்.

இப்படி தலீத் மக்களின் அவலங்களைப் பட்டியல் போட்டபோது குழுமி இருந்த மக்கள் அனைவரும் நெஞ்சம் நெகிழ்ந்தார்கள். கண்ணீர் விட்டு அழுதார்கள்.

இதில் சில நேரங்களில் பஞ்சாயத்துக்கு வந்த அதிகாரிகள், கலெக்டர் என்ற ஆட்சித் தலைவர் இவர்களெல்லாம் தலீத்களாகக் கூட இருந்திருக்கின்றார்கள். அவர்களாலும் இந்தப் பிரச்னையைத் தீர்த்திட இயலவில்லை.

## இஸ்லாம்

கண்ணீர் சிந்திய மக்கள் தீர்வுகளைத் தேடினார்கள். அப்போது நாம் இஸ்லாத்தை அவர்கள் முன்னால் சமர்ப்பித்தோம். அது சகோதரத்துவத்தை, சமத்துவத்தை எந்த அடிப்படைகளில் எழும்பிற்று என்பதையெல்லாம் பட்டியல் போட்டுக் காட்டினோம். இது நமது ஒரு நாள் நிகழ்ச்சியின் இரண்டாம் கட்டம் இது.

## மூன்றாவது கட்டம்

இதில் இஸ்லாத்தை ஏற்றுப் பூரண விடுதலையடைந்த மக்கள் தாம் பேசுவார்கள். எப்படி தங்களில் ஒருவர் இறந்தால் கண்ணியமாக அடக்கம் செய்யப்படுகின்றோம். என்பதையும் பிணங்களைக் கொண்டு சென்றிட மாற்றுப்பாதை தேடிடத் தேவை இல்லை எந்தப் பாதை வழியாகவும் கொண்டுச் செல்லப்படுகின்றோம் என்பதையும் அவர்கள் அடைந்த இதர சமூக அந்தஸ்த்துகளையும் விரித்துரைப்பார்கள்.

இந்த மூன்றாம் அமர்வுக்குப் பின் அனைவருக்கும் மறுமை வாழ்க்கை, சுவர்க்கம், நரகம் ஆகியவற்றை நினைவுறுத்தி அவர்களை பகிரங்கமாக இஸ்லாத்தில் இணைந்திடும் படி அழைப்போம். அதையே திருவாய்ப்பாடி நிகழ்ச்சியிலும் வைத்தோம்.

அல்ஹம்ந்துலில்லாஹ்

கண்ணீர் வடித்துத் தங்கள் அவலங்களைச் செவிமடுத்த மக்கள் தீர்வு ஒன்றும் கையில் இருக்கின்றது என்ற இனிய நினைவுடன் கலைந்து சென்றார்கள். பலர் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

இந்தத் திருவாய்ப்பாடி நிகழ்ச்சி எங்கள் தாஃவா பயணத்தில் மிகப்பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. மாஷா அல்லாஹ்.

இதே போல் மூன்று நிகழ்வுகளைக் கொண்ட தாஃவா முகாம்களை நாங்கள் தமிழ்நாடு முழுவதும் நடத்திக் கொண்டு இருந்தோம்

இன்ஷா அல்லாஹ்

**தொடரும்**

# கவிக்கோ பவள விழா! ஓர் இலக்கியத் திருவிழா!



“வேலிக்கு வெளியே தலையை நீட்டும் கிளைகளை வெட்டும் தோட்டக்காரனே, பூமிக்கு அடியே நழுவும் எனது வேர்களை என்ன செய்வாய்?”

இது கவிக்கோவின் கவிதை. தனது கவிதைக்கு ஏற்ப எல்லா மட்டங்களிலும் தன் வேர்களைப் பாய்ச்சியிருக்கிறார் கவிக்கோ.

இதை நிரூபித்தது கவிக்கோ பவள விழா. சென்னை தேனாம்பேட்டை, காமராஜர் அரங்கத்தில் அக்டோபர் 26, 27 ஆகிய இருநாட்கள் கவிக்கோ பவள விழா மற்றும் கவிக்கோ கருவூலம் வெளியீட்டு விழா ஓர் இலக்கியத் திருவிழாவாக நடைபெற்றது.

பன்னாட்டுப் பிரமுகர்கள், திரை உலகத்தினர், இசைப்பிரியர்கள், மாணவர் உலகத்தினர், புகழ் மேவிய கவிஞர்கள், தமிழறிஞர்கள், சமய அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள் என சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் பங்கேற்று கவிக்கோவின் மாண்பினைப் பறைசாற்றினர்.

விழாவில் கவிக்கோவின் நூல்கள் வெளியிடப்பட்டன. சுமார் ஆயிரம் பக்கங்கள் கொண்ட கவிக்கோ கருவூலம் வெளியிடப்பட்டது. கவிக்கோ ஆவணப் படம், கவிக்கோவின் இசைப் பாடல்கள் குறுந்தகடு, கவிக்கோ நேர்காணல் குறுந்தகடு, கவிக்கோவின் ‘பித்தன்’ எனும் நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பும் உருது மொழி பெயர்ப்பும், கவிக்கோவின் கஸல் கவிதைகளின் உருது மொழி பெயர்ப்பும் வெளியிடப்பட்டன.

கவிக்கோ.காம் (kaviko.com) இணைய தளத்தை தொடங்கி வைத்து மதிமுக பொதுச் செயலாளர் வைகோ உரையாற்றினார்.

கவிக்கோ கவிதை அறக்கட்டளைக்குப் பொற்கிழி வழங்கி தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் உரையாற்றினார்.

இரண்டு நாள் விழாவில் எல்லா தரப்பு மக்களையும் சந்திக்க முடிந்தது. எல்லா எல்லைகளையும் கடந்து கவிக்கோ அடைந்திருக்கும் புகழ் பளிசென்று தெரிந்தது.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்களைப் போல எல்லோரின் இதயங்களையும் வென்றெடுத் திருக்கிறார் கவிக்கோ.

விழாவின் ‘சமய உலகம் பாராட்டு கிறது’ என்ற அரங்கில் வரவேற்புரையாற்றிய வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி சமுதாய பணிகளுக்கு கவிக்கோ தந்த தார்மீக ஆதரவுகளை உருக்கமாக எடுத்துரைத்தார்.

“மனித நீதிப்பாசறை எனும் மாண்பாளர்களின் பாசறைக்கு எதிராக உளவுத்துறை சில சதிகளை ஏவிவிட்ட போது கவிக்கோ தந்த தார்மீக ஆதரவை என்றும் மறக்க மாட்டோம்” என்றார் இல்யாஸ் ரியாஜி.

இந்த அமர்வு, வைகறை ஆசிரியர் மு. குலாம் முஹம்மது முன்னிலை வகித்தார்.

கலைஞர் நிறைவுரை, கவிக்கோவின் ஏற்புரையுடன் விழா நிறைவுற்றது.

மனதை விட்டு என்றும் அகலாத நினைவுகளுடன் அனைவரும் கவிக்கோவை வாழ்த்தினர்.

# வைகறை வெளிச்சத்துக்கு மறுப்பு

திருப்பூரில் 06.09.2015 அன்று கல்புர்கி அரங்கில், கருத்துரிமைக்கெதிராக செயல்பட்ட உளவுத்துறையைக் கண்டித்து 17 கட்சிகள் இனைந்த கருத்துரிமைப் பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பாக கண்டனக் கூட்டமும், "மௌனத்தின் சாட்சியங்கள்" நூல் அறிமுக நிகழ்வும் நடைபெற்றது. அதில் நிகழ்ந்த விவாதங்களில் ஒரு பகுதியை அக்டோபர் 2015 "வைகறை வெளிச்சம்" இதழில் 46,47,48 பக்கங்களில் வெளியிட்டிருந்தனர். அதில் மரியாதைக்குறிய நண்பர் காதர் மைதீன் அவர்கள் நாவலில் அவர் முரண்படும் இடங்கள் குறித்தும் எனது அரசியல் நிலைபாடு குறித்தும் சில கேள்விகளை எழுப்பியிருந்தார். அவர் கேட்ட கேள்விகளுக்கான பதிலை நான் மேடையிலேயே சொல்லியிருந்தேன். இப்போது அதே கேள்விகளை "வைகறை வெளிச்சம்" பத்திரிக்கையில் கேட்டிருக்கிறார். மேடையில் நான் கூறியிருந்த பதிலை வேறு பொருளில் மாற்றி எழுதியிருப்பதால் (ஒருவேளை அவரின் தவறான புரிதலாகக்கூட இருக்கலாம்) அதற்கான மறுப்பை எழுதவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் கருத்துரிமைப் பாதுகாப்பு கூட்டியக்கத்தில் இனைந்து எங்களுக்கு தோள் கொடுத்த தாருல் இஸ்லாம் அமைப்புக்கு நன்றியைச் சொல்லிக்கொண்டு கேள்விகளுக்குச் செல்கிறேன்.

"2006 ஜூலை 22ஆம் நாள் மீண்டும் ஒரு குண்டுவெடிப்புச் சதி போலீசாரால் நடத்தப்பட்டது. மனித நீதிப் பாசறை அமைப்பின்மீது பழிபோட்டு அடாவடித்தனம் நடந்தது. உடனே அதன் தலைவர் எம்.குலாம் முகமது அவர்கள் பத்திரிக்கையாளர்களைச் சந்தித்து இதுபோன்ற செயல்களில் மனிதநீதிப் பாசறை ஈடுபடாது என தெளிவுபடுத்தினார். மேலும் கோவையின் அனைத்து ஜமாத்துக்களும் ஒருங்கினைந்து போலீசின் சூழ்ச்சியை முறியடித்தனர்.பின்பு இந்த சதித்திட்டம் தீட்டிய ஏ.எல்.இரத்தின சபாபதி இடமாற்றம் செய்யப்பட்டார். இந்த சம்பவம் இந்த நாவலில் குறிப்பிடப்படவே இல்லையே?"

அதாவது 2006 ஜூலையில் நிகழ்ந்த இந்த சம்பவத்தை ஏன் நாவலில் குறிப்பிடவில்லை என்று கேள்வியெழுப்புகிறார். அன்புக்குறிய நண்பர் காதர் மைதீன் முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். இந்த நாவல், மதவாதத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் துயரத்தை பதிவு செய்வதையும், மதச்சார்பற்ற சமூகத்தின் பார்வைக்கு இந்த துயரச்சம்பவங்களைக் கொண்டு செல்வதையும் மட்டுமே நோக்கமாகக் கொண்டு எழுதப் பட்டது. இன்னும் நூறு நூல்கள் எழுதினாலும் முழுதும் சொல்லிவிட முடியாத அளவுக்கு துக்கத்தை அந்த மக்கள் சுமந்தபடி வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். எந்த அமைப்புகளின் செயல்பாடுகளையோ பங்களிப்புகளையோ பேசவேண்டுமென்ற நோக்கம் எனக்கில்லை.

"போலீசாரால் கைது செய்து சிறை யிலடைக்கப்பட்ட அப்பாவியான யாசருக்கு மனநலம் பாதித்ததாக நாவலில் குறிப்பிடப் பட்டுள்ளது. இது உண்மையா?என அறிய இவ்வழக்கில் பத்து ஆண்டுகள் சிறையிலிருந்து பின்பு விடுவிக்கப்பட்ட சகோதரர்களைத் தொடர்புகொண்டு கேட்டபோது அப்படி யாருக்கும் மனநிலை பாதிக்கவில்லை என்று தெரிவித்தனர்."

மௌனத்தின் சாட்சியங்கள் நூல் உண்மைச் சம்பவங்களைத் தழுவி எழுதப்பட்ட புனைவிலக்கியம். அதில் யாசர், வைஷ்னவி போன்ற சில ஒரு கற்பனைப் பாத்திரங்கள் உண்டு. பல பாதிக்கப்பட்ட இளைஞர்களின் அனுபவங்களை யாசர் என்கிற கதாப்பாத்திரத்திற்குள் சொல்ல முயன்றிருக் கிறேன். அந்த கதாப்பாத்திரத்தை வெளியில்

தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை என்று சொல்வதே நகைப்புக்கு உறியதாக இருக்கிறது. நல்லவேளை நீங்கள் வைஷ்னவியைத் தேடாமல் இருந்தீர்களே. மேலும் நான் மேடையில் சொன்னதைத்தான் இப்போதும் சொல்கிறேன். நீங்கள் உள்வாங்கியிருப்பதுபோல யாசர் முற்றிலும் மனநலம் பாதிக்கப்பட்ட பைத்தியக்காரனாக சித்தரிக்கப்படவில்லை. சிறைக் கொடுமைகளும், தனிமையும், அன்புக்காக ஏங்கக்கூடிய அவனது இயல்பான குணமும் சேர்ந்து அவனது உளவியலில் தாக்கம் செலுத்துவதையும், அதன்மூலம் அவனது இயல்பான நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றத்தையும் சொல்லியிருக்கிறேன். தூக்கத்தில் பேசுவது, தூக்கத்தில் நடப்பது, அதிகமாக உணர்ச்சிவசப்படுவது, அதிகமான பய உணர்ச்சி, தாழ்வு மனப்பான்மை இப்படி மனப்பிரழ்வில் பலவகை உண்டு. அதில் யாசர் தனிமையில் பேசுவது அவனின் இயல்பான மனநிலையில் ஏற்பட்டிருக்கும் பிரழ்வு. அதைப் பைத்தியம் என்று புரிந்துகொள்ளக்கூடாது. அப்படி அவன் முழுதாக மனநிலை பாதிக்கப்பட்டிருந்தால், அவன் பாதிக்கப்பட்ட கதையை, இரயிலில் சந்திக்கும் இளைஞனிடம் நாள், தேதி முதற்கொண்டு எப்படி சரியாகச் சொல்லமுடியும் என்ற எளிய கேள்வியை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

"இந்தப்புத்தகம் இப்பிரச்சனைகளுக்குத் தீர்வாக கம்யூனிசத்தையே முன்வைக்கிறது"

இதற்கும் நான் மேடையிலேயே பதில் சொல்லிவிட்டேன். நண்பர் மறந்துவிட்டார் அல்லது வசதியாக மறைத்துவிட்டார் போலும். நாவலில் எங்குமே கம்யூனிசமே தீர்வு என்று குறிப்பிடவில்லை. மீண்டுமொருமுறை நீங்கள் நாவலை வாசியுங்கள். நான் இந்த நாவலில், சமூகத்தில் மதவாதம் வளர்ந்து செல்வாக்கு செலுத்திய நிகழ்வுப்போக்கை மார்க்சிய கண்ணோட்டத்தில் ஆய்வு செய்திருக்கிறேன். வைஷ்னவி ஃபெரோஸ் மகேந்திரன் விவாதங்களில் கூட கம்யூனிஸ்ட் கட்சிகளின் மீதான விமர்சனத்தை (சுயவிமர்சனத்தை) பதிவு செய்திருக்கிறேன். ஆனாலும் தனிப்பட்ட முறையில் கம்யூனிசமே அனைத்து சிக்கல்களுக்கும் தீர்வானது என்பதை ஆணித்தரமாக நம்புபவன் நான்.

"ஆனால் இஸ்லாம் 1300 ஆண்டுகள் இந்த பூமியில் ஆட்சி செய்தது. இன, மத, சாதி வேறுபாடின்றி சமத்துவ ஆட்சி செய்தது என கிருஸ்துவ ஆய்வாளர்களே குறிப்பிட்டுள்ளனர். கிருஸ்துவ ஆட்சியாளர்களின் கீழ் வாழ்ந்ததைவிட இஸ்லாமிய ஆட்சியின் கீழே கிருஸ்தவர்கள் நிம்மதியாக வாழ்ந்தார்கள். ஆகவே யாருக்கும் பாதிப்பின்றி நடத்தப்பட்ட இஸ்லாமிய ஆட்சியே தீர்வு."

முதலில் இஸ்லாம் 1300 வருடம் எங்கே ஆட்சி செய்தது என்று தெளிவுபடுத்துங்கள். அதன்பிறகு அது சிறந்த ஆட்சியா..? யாருக்கும் பாதிப்பில்லாமல் அந்த ஆட்சி நடந்ததா..? என்பதை விவாதிப்போம். இஸ்லாமியர்கள் ஆட்சி செய்தார்கள் என்பதும் இஸ்லாம் ஆட்சி செய்தது என்பதும் ஒன்றா..? நாளை இந்தியாவில் ஒரு இஸ்லாமியர் பிரதமரானால் இந்தியாவில் நடப்பது இஸ்லாமிய ஆட்சி என்று சொல்வீர்களா..? குறைந்தபட்சம் அரசு என்றால் என்ன?, அந்த அரசு நிலவிய சமூகம் எந்தவகைச் சமூகம்?, அப்போது எந்தவகை உற்பத்தி முறை நிலவியது?. அரசுக்கும் உற்பத்திக்குமான உறவு எப்படி இருந்தது? உற்பத்திக்கும் மக்களுக்குமான உறவு எப்படி இருந்தது? போன்ற விபரங்களைப் பரிசீலிக்காமல் பொத்தாம் பொதுவாக நல்ல அரசு, நல்ல ஆட்சி என்றெல்லாம் பேசுவது எப்படிப் பொருத்தமாக இருக்குமென்று புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு வாதத்திற்காக நீங்கள் கூறுவதுபோலவே அப்போதைய இஸ்லாமிய ஆட்சி அந்த காலகட்டத்தில் நல்லாட்சியாக இருந்தது என்று வைத்துக்கொண்டாலும் இப்போதைய வளர்ச்சியடைந்த முன்னேறிய காலகட்டத்திற்கு அதைப் பொருத்த முடியுமா? அதே வகைச் சமூகமும் அதேவகைப் பொருளுற்பத்தியும் அதேவகையான உற்பத்தி உறவும் இப்போதும் நிலவுகிறதா..? இல்லையெனில் இப்போதைய கால வளர்ச்சிக்கேற்றபடி இஸ்லாம் மாற்றமடைந்திருக்கிறதா..? பிறகெப்படி இந்தச் சமூகத்திற்கு அது பொருந்தும்?

"இஸ்லாம் மட்டுமே தான் ஆண்ட காலங்களில் வறுமையை முழுமையாக ஒழித்திருந்தது. கம்யூனிசம் ஆண்ட பகுதிகளில் ஒழிக்கப்படவே இல்லை என்பதற்கு வரலாறு சாட்சியாக உள்ளது."

இஸ்லாம் ஆண்ட எந்தப் பகுதியில் வறுமை முற்றிலும் ஒழிக்கப்பட்டிருந்தது..? அதற்கு வரலாற்றிலிருந்து ஆதாரம் கொடுங்கள். ஒரு வாதத்திற்காக இஸ்லாம் வறுமையை ஒழித்திருந்தால் ஜகாத் என்ற முறைக்கு தேவையே இல்லாமல் போயிருக்குமே..? இன்றுவரை இஸ்லாத்தில் ஜகாத் கட்டாயக் கடமையாகத்தானே உள்ளது.

கம்யூனிச ஆட்சி பற்றி நீங்கள் கேட்ட கேள்விக்கு, உலகில் கம்யூனிச ஆட்சி எங்கு நடந்தது என்று உதாரனம் சொல்லுங்கள் என்று மேடையிலேயே கேட்டேன். இங்காவது நீங்கள் பதில் சொல்லியிருக்கலாம். உலகில் இதுவரை எந்த நாட்டிலுமே கம்யூனிச ஆட்சி வந்ததில்லை. (ஆதிப் பொதுவுடமைச் சமூகம் தவிர்த்து) அப்படியிருக்க கம்யூனிச ஆட்சியில் வறுமை ஒழியவில்லை என்பதும், கம்யூனிசம் தோற்றுப்போய்விட்டது என்று சொல்வதும் எந்த அளவுக்கு சரியான வாதமாக இருக்கும். கம்யூனிச சமூகம் என்பது இறுதிக்கட்டம். சோசலிசக் கட்டம் என்பது கம்யூனிச சமூகத்திற்கு முந்தைய கட்டம். அதாவது கம்யூனிச சமூகத்தை நோக்கி நகரும் கட்டம். கம்யூனிஸ்ட்டுகள் சில நாடுகளில் அதிகாரத்திற்கு வந்தார்கள். அங்கு சோசலிச ஆட்சியை நிறுவினார்கள். கம்யூனிசத்தை நோக்கி அந்த சமூகத்தை நகர்த்திய நீண்ட போராட்டத்தில் உலக வல்லரசுகளும் முதலாளித்துவ அடிவருடி நாடுகளும் சேர்ந்து அந்த அரசுகளை உடைத்தன என்பது உண்மை. அந்த அரசுகள் தோல்வியடைந்ததை நாங்கள் மறுக்கவேயில்லை. அந்த தவறுகளைப் பரிசீலித்து அவற்றிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு முன்னேறவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். நாங்கள் கூறும் கம்யூனிச சமூகம் என்பது சுரண்டலை அறவே ஒழித்த சமூகமாக இருக்கும். சுரண்டல் இல்லையெனில் மட்டுமே வறுமை ஒழியும்.

"மௌனத்தின் சாட்சியங்கள் கோவை குண்டுவெடிப்புக் குறித்த முழுமையான தகவல்கள் அடங்கிய புத்தகமல்ல இந்தப் புத்தகம் முஸ்லிம்கள்தான் குண்டுவெடிப்பை நிகழ்த்தியதாக ஆணித்தரமாக சொல்கிறது. பிற்காலத்தில் உண்மைகள் முழுமையாக வெளிவரும்போது தவறிழைத்ததாகிவிடும்"

"தோழர் ப.பா மோகன் அவர்களின் உரையில் "இந்த நாவல் பேசும் கதைக்களத்தோடும் அந்த வழக்குகளோடும் எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. இந்த நாவல் புனைவாக சொல்லப்பட்டாலும் ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிற சம்பவங்கள் அத்தனையும் உண்மை.. அதற்கு நானே சாட்சி.." என்று அவர் கூறியதை நினைவூட்ட விரும்புகிறேன். ஒருவேளை நீங்கள் அவரைவிட இந்த வழக்கில் அதிகம் அனுபவம் கொண்டவரா என்று எனக்குத் தெரியவில்லை. அதே நேரத்தில் எல்லா தகவல்களும் அடங்கிய நூல் என்றும் நான் சொல்லிக்கொள்ளவில்லை. நான் எடுத்துக் கொண்ட கதைக்குள் பக்கச்சார்பின்றி நேர்மையாக நிகழ்வுகளைப் பதிவுசெய்ய நினைத்தேன். அதை ஓரளவுக்கு சரியாகச் செய்துவிட்டதாகவே நினைக்கிறேன். புத்தகத்திற்குள் உண்மைக்கு மாறாக ஏதாவது சொல்லப்பட்டிருப்பதாகக் கருதினால் சுட்டிக்காட்டுங்கள். கட்டாயமாகப் பரிசீலிக் கிறேன். ஒருவேளை இந்த குண்டுவெடிப்புக்கும் முஸ்லிம்களுக்கும் தொடர்பில்லை என்று நீங்கள் நிறுவ முயன்றால் ஆதாரத்தோடு நிறுவுங்கள். பொத்தாம் பொதுவாக போகிற போக்கில் எழுதிவிட்டுச் செல்வதெல்லாம் பொருத்த மற்றது.

கம்யூனிசம் ஒரு போதும் தீர்வாகாது என நாம் கூறியதை கம்யூனிசம் என்பது கிரையோஜெனிக் ராக்கெட் போன்றது, ராக்கெட் விட்ட பிறகு தோல்வியடைந்தால் எப்படிப் கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்கும். உதாரனத்திற்கு, ஒரு கிரையோஜீனிக் இயந்திரத்தை எடுத்துக்கொள்வோம். அதை

நடைமுறையில் பயன்படுத்திய பிறகுதானே அது வெற்றியடைந்ததா அல்லது தோல்வியடைந்ததா என்று சொல்ல முடியும். அது நடைமுறைக்கு வரும் முன்னமே அது தோல்வியடைந்ததாகச் சொல்வது எப்படி சரியான கருத்தாக இருக்கமுடியும்?. அதுபோல கம்யூனிசம் இதுவரை உலகில் எங்குமே நடைமுறையில் வராதபோதே கம்யூனிசம் தோல்வியடைந்து விட்ட சித்தாந்தம் என்று சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்கும்..?"

இதுதான் நான் பேசியதன் சாரம். இதை உங்கள் வசதிக்கு திருத்தி எழுதியிருக்கும் உங்கள் 'நேர்மை?' எனக்கு வியப்பளிக்கிறது. மனிதனுக்கான நடைமுறை சாத்தியங்களை கம்யூனிஸ்டுகள் கண்டு பிடிக்கவில்லை என்ற அறிய கண்டுபிடிப்பை செய்திருக்கிறீர்கள். மார்க்சியம் என்பது என்றுமே 'மாறாத' வேதம் அல்ல. அது சமூகத்தைப் பற்றிய ஆய்வு முறையைக் கற்றுக்கொடுக்கும் விஞ்ஞானம். அது நடைமுறைக்கான தத்துவம். நடைமுறையை உள்வாங்கித் தன்னை தொடர்ந்து செழுமைப்படுத்திக் கொண்டே இருக்கும் தத்துவம் அது. மாற்றம் ஒன்றே மாறாதது என்பதை வலியுறுத்திச் சொல்கிறது.


"இஸ்லாமிய ஆட்சி ஒன்றே அனைத்துக்கும் தீர்வு என்று நாம் சொன்னதைக் குறிப்பிட்டு அதில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று (நூலாசிரியர்) கூறினார். இஸ்லாமிய ஆட்சியின் வரலாறுகளை நாவலாசிரியர் படிக்கவேண்டும்"

இப்போதும் அதையே கூறுகிறேன். எப்போதுகேட்டாலும் அதையேதான் கூறுவேன். இஸ்லாமிய ஆட்சி அனைத்துக்குமான தீர்வு என்ற கருத்தில் எப்போதுமே எனக்கு உடன்பாடில்லை. சமூகத்தைப்பற்றிய ஆய்வுமுறையோ உற்பத்தி குறித்த புரிதலோ இல்லாமல் இந்தக் கருத்தை நீங்கள் எப்படி முன்வைக்கிறீர்கள் என்றே புரியவில்லை. எனது கொள்ளுத்தாத்தா மாட்டுவண்டியில் பயணித்திருக்கலாம். அப்போதைய காலத்தில் அது பயண நேரத்தைக் குறைக்கும் முக்கிய சாதனமாக அது இருந்திருக்கலாம். இது ராக்கெட்டுகளின் காலம். இந்த இயந்திரகதியான வாழ்க்கை முறையில் மாட்டுவண்டி எனக்கு பயன் தராது. என்னை இஸ்லாமிய அரசுகளின் வரலாறுகளைப் படிக்குமாறு பரிந்துரைத்தமைக்கு நன்றி. வாசிப்பு எனக்கு எப்போதுமே உவப்பான விசயம்தான். அதேபோல நண்பர் காதர் மைதீனுக்கு அரசு குடும்பம் தனிச்சொத்து என்கிற எங்கல்ஸ் எழுதிய அற்புதமான புத்தகத்தைப் பரிந்துரைக்கிறேன், இது அரசு, சமூகம், உற்பத்தி குறித்த அடிப்படைப் பார்வையை நண்பருக்கு கொடுக்கும்.

குறிப்பு: இந்த பதிலின் நகலை வைகறை வெளிச்சம் பத்திரிக்கைக்கும், கீற்று இணையதளத்துக்கும் அனுப்பியிருக்கிறேன்.

**காதர் மைதீன் அவர்கள் பதில் அடுத்த இதழில் இடம் பெறும்.**


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரு. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**

# அந்த நடிகை ஏன் இஸ்லாத்தை ஏற்றார்?

**நான் தலையை மறைத்தேன். இஸ்லாமிய ஆடையை அணிந்தேன் கண்ணாடியில் பார்த்தேன்.**

**படத்தில் நடித்துவிட்டு அதே ஆடையுடன் காரில் ரோட்டில் சென்றேன். பலர் என்னை கண்ணியத்தோடு பார்த்தார்கள்.**

**என்னுள் எத்தனை மாற்றங்கள். . . .**

ஜெர்மனி என்ற நாட்டில், முஸ்லிம்கள் அமுக்கப்படுகின்றார்கள், ஒடுக்கப்படுகின்றார்கள். இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று முஸ்லிம்கள் தீவிர வாதிகள் என்ற பிரச்சாரம் முழு வீச்சில் கட்டவிழ்த்திடப் படுகின்றது.

இரண்டு, ஐரோப்பாவில் பிரான்சுக்கு அடுத்தப்படியாக முஸ்லிம்கள் அதிகமாக வாழுகின்றார்கள். காரணம், மிகவும் அதிகமாக ஜெர்மன நாட்டுக் குடிமக்கள் இஸ்லாத்தை ஏற்று வருகின்றார்கள். அதற்கும் காரணம் ஜெர்மன் நாட்டில் பல பிரபல்யங்கள் இஸ்லாத்தை ஏற்று வருகின்றார்கள்.

இந்தப் பின்னணியில் அண்மையில் ஓர் நிகழ்வு. ஜெர்மன் நாட்டில் முஸ்லிம்கள் அமுக்கப்படவில்லை என்று ஊர் உலகத்தை நம்ப வைத்திட வேண்டும் என்றொரு நிர்பந்தம் ஜெர்மன் அரசுக்கு.

இதற்காக ஜெர்மன் நாட்டு அரசு தொலைக்காட்சி "ZDF" ஓர் திரைப்படத்தைத் தயாரிக்க முன்வந்தது. அதில் முஸ்லிம் மாணவர்கள், மாணவிகள் இவர்களெல்லாம் பள்ளிக் கூடங்களில் நன்றாகப் நடத்தப் படுகின்றார்கள் என்று காட்டிய ஜெர்மன் நாட்டின் பிரபல நடிகை அவாசெலின் என்பவர் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

காட்சிக்காக அவர் இஸ்லாமிய உடையில் தோற்றந்தந்திட இஸ்லாமிய ஆடைகளை அணிந்தார்.

கண்ணாடி முன் சென்றார். நாம் இஸ்லாமிய ஆடையை சரியாக அணிந்திருக்கின்றோமா என (டெஸ்ட்) சோதனை செய்திட.

என்ன ஆச்சர்யம்! அவள் தன்னுள் ஓர் புது அழகும், ஆத்மாவும் பொங்கிவருவதைக் கண்டார். ஆமாம் இந்த ஆடையை அசிங்கம் இல்லை. பெண்மைப் பளிச்கிடுகின்றது அகத்தில்.


நடித்துக் கொண்டிருக்கும் போதே இஸ்லாத்தை கற்றார் ஏற்றார்.

இதுபோன்ற பிரபல்யங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டே இருப்பதால், ஜெர்மனியில் இஸ்லாம் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது.

(நன்றி : Radiance Views Weekly. 15-21. November 2015)

**- M.G.M**

# ஷொரப்தீன்–இன் சகோதரருக்கு மோடிகளின் நெருக்கடிகள்






14.6.2004 அன்று மும்பையின் 'மும்புரா' என்ற இடத்திலிருந்து இர்ஷத் ஜஹான் என்ற முஸ்லிம் பெண்மணி குஜராத் காவல் துறையால் கடத்திச் செல்லப்பட்டார். பின்னர் ஓர் பண்ணை வீட்டில் வைத்துக் கொலை செய்யப்பட்டார். அதேபோல் இன்னும் மூன்று பேர், குஜராத் காவல் துறையால் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். அத்தனை பேரும் கொலை செய்யப்பட்ட பின்னர் ஓர் காரில் ஏற்றப்பட்டு வந்து நடு ரோட்டில் போடப்பட்டார்கள். இவர்கள் முதல்வர் மோடியைக் கொலை செய்திட குஜராத்திற்கு வந்து கொண்டிருந்தார்கள் என்று பொய் சொன்னார்கள்.

குஜராத் இனப் படுகொலைப் புகழ் நரேந்திர மோடியின் எடுபிடி குஜராத் காவல்துறையின் சீருடை அணிந்த கொலைகாரன், "வன்சாரா" என்பவன் தான் இந்தக் கொலைகளைச் செய்தான். சில பதவி உயர்வுகளும், பரிசுகளும் தரப்பட்டன. வன்சார அப்போது காவல்துறையின் துணை ஆணையர்.


பின்னர் நீதிக்காகப் போராடும் வீரமங்கை 'டீஸ்டா செட்டல்வாட்' போன்றவர்களின் இடையறா முயற்சியினால் கொலைகாரன் என நிரூபிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான் "வன்சாரா".

சிறையில் இருந்து கொண்டு அவன் எழுதிய கடிதத்தில் அதாவது குஜராத் இனப்படுகொலை புகழ் மோடிக்கு எழுதிய கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டான்.

"கொலைகளைச் செய்ய சொன்ன நீ



பிரதமர் பதவியில். உனக்காகக் கொலை களைச் செய்த நான் சிறையில். அதாவது நான் இருக்க வேண்டிய இடத்தில் (சிறையில்) இருக்க வேண்டிய நீ அரியணையிலா" என்னைக் காப்பாற்றிட இயலாத நீ என்ன ஆள்?" என்று ஒரேயடியாக வசைபாடி எழுதியிருந்தார்.



**(Source: Times of India)**

இந்தக் கொலைகளிலிருந் தெல்லாம் அமித்ஷாவை விடு வித்து சில சில்லரை பதவிச் சுகங் களைத் தட்டிச் சென்றவர்தான் முன்னாள் தலைமை நீதிபதி சதாசிவம். இதனைத் தான் அத்தனை நேர்மையான நீதிபதிகளும் நீதித்துறையின் மிகப் பெரிய அவமானம் எனக் கண்டித்தார்கள்.

இதே வன்சாரா என்ற குஜராத் காவல் துறையின் சீருடை அணிந்த கொலைகாரன் தான் ஷேராப்தீன் ஷேஹ் என்ற அப்பாவி முஸ்லிமையும் கொலை செய்தான். ஷேராப்தீன் ஷேஹ் பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் அமித் ஷாவின் முன்னாள் ரவுடித்தனங்களுக்குத் துணை நின்றவன். தன்னுடைய கும்பலைச் சார்ந்தவன். என்றாலும், முஸ்லிம் என்பதற்காகவே கொலை செய்யப்பட்டார் ஷோராப்தீன் அமித்ஷாவால்.

ஷேராப்தீனோடு நிற்கவில்லை இந்தக் கொலை. அமித்ஷாவின் ஆட்களால் ஷொரப்தீன் ஷேஹ் இன் மனைவி கவ்சர் பீயும் கடத்திச் செல்லப்பட்டு, கற்பழிக்கப்பட்டு துண்டு துண்டாக வெட்டப்பட்டு எரிக்கப் பட்டாள். பின்னர் அந்த எலும்புகளை அந்தப் பண்ணை வீட்டின் கிணற்றிலேயே போட்டார்கள். இதையும் கண்டெடுத்து வழக்குத் தொடர்ந்தார் டீஸ்டா செட்டல் வாட். இதையும் மோடிக்காகவும், அமித்ஷாவுக் காகவும் செய்தவர் கொலைகாரன் வன்சாரா தான்.

இந்தக் கொலைகளில் அமித்ஷாவும், அவனுடைய ஆசான் மோடியும் நேரடி யாகவே தொடர்புடையவர்கள். குறிப்பாக அமித்ஷாஷவுக்கு நேரடியாக தொடர்புண்டு. இந்தக் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையிலும் இருந்தவர்தான் அமித்ஷா. இப்போது பா.ஜ.க. வின் தலைவன்.



இந்த ஷேராப்தீன் கொலை வழக்கில் தீவிரமாக அறிவோடு ஆழமாக செயல்பட்டு, பல சாதனைகளைச் செய்தார்கள் டீஸ்டா செட்டல்வாட். இதனால் சொல் லொண்ணா நெருக்கடிகளுக்கு ஆளாகி நின்றார்கள் வீராங்கணை டீஸ்டா செட்டல்வாட்.

ஆனால் மோடி பிரதமரானவுடன் இர்ஷத் ஜஹான் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பெற்று சிறையிலடைக்கப்பட்டிருந்த வன்சாரா உட்பட எல்லோரும் விடுவிக்கப் பட்டார்கள். ஷொராப்த்தீன், அவருடைய மனைவி கவ்சர் பீவீ ஆகியோர் கொலை வழக்கை அமித்ஷாவுக்கு எதிராக நடத்திக் கொண்டிருந்த ஷேரப்தீனின் சகோதரன் ருபாபுதீன் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

எல்லா நெருக்கடியையும் எதிர்த்து நின்று அமித்ஷா முதலானோருக்கு எதிரான வழக்கை ஆண்மையோடு நடத்திக் கொண்டிருந்தார். அவரால் சதாசிவம் போன்றோர் அமித்ஷா போன்றோரை வழக்கிலிருந்து விடுவித்ததை சகிக்க இயலவில்லை. அமித் ஷாவை வழக்கிலிருந்து விடுவித்தது சரியல்ல, என்ற அடிப்படையில் வழக்குகளைப் பதிவு செய்தார். இந்த வழக்குகளைத் திரும்ப பெற்றிட வேண்டும் என ஷேராப்தீனின் சகோதரன் ருபாபுதீன் கட்டாயப்படுத்தப் பட்டார். ஏதேனும் ஒரு காரணத் தைச் சொல்லி ருபாபுதீனை கொலை செய்யும் முயற்சிகளைப் பாசிஸ்ட்டுகள் செய்தார்கள். இந்நிலையில் ருபாபுதீனுக்கு டீஸ்டா செட்டல்வாட் தான்

உதவி செய்திட வேண்டும். ஆனால் அவரைக் கிடுக்கிப் பிடிக்குள் கொண்டு வந்து விட்டார்கள் மத்தியில் ஆட்சியில் உள்ள பரிவாரத்தைச் சார்ந்தவர்கள். மோடி டீஸ்டா செட்டல் வாட்டை எப்படியேனும் கைது செய்திட வேண்டும் என முயற்சி செய்து கொண்டி ருக்கின்றார். அதனால் செய்வதறியாது திணறினார் படுகொலை செய்யப்பட்ட ஷேராப்தீன் சகோதரன் ருபாபுதீன்.

யாரும் உதவிச் செய்திட மாட்டார்கள் என்ற நிலையில் அவர் தன் உயிரைக் காப்பாற்றிட வழி தெரியாமல் ஷோரப்தீனின் கொலை வழக்கை விசாரித்து வரும் மும்பை நீதிமன்றத்தில் தோன்றினார். எல்லா வழக்குகளையும் அதாவது கொலைகாரன் அமித்ஷா முதலானோருக்கு எதிராக தான் தொடுத்த வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெறுவதாக அறிவித்தார். ஆனால் எந்த வழக்கறிஞரும் அவருடன் வரவில்லை.

இதனைக் கண்ட மும்பை நீதிமன்ற நீதிபதிகள் என்ன நடந்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு வழக்கை திரும்பப் பெறுவது குறித்து முடிவு செய்ய கால அவகாசம் கொடுத்தனர் ரூபாபியுத்தீனுக்கு. அனால் அந்த 3 வார கால அவகாசத்திற்குப் பின்பும் ஷேராப்த்தீனின் சகோதரன் ரூபாபுத்தீன், மீண்டும் ஆஜரானார் மும்பை நீதிமன்றத்தில் வழக்கை வாபஸ் திரும்பப் பெறுவதாகவே அறிவித்தான். ஆனால் நீதிமன்றம் இன்னும் ஒரு மாத காலம் அவகாசம் வழங்கிற்று.

அதே நேரத்தில் இந்த வழக்கை விசாரித்து வரும் பெண் நீதிபதி அனுஜா பிரபு தேசாய் அவர்கள் ரூபாபுதீனை தன்னுடைய தனி அலுவலகத்தில் (Chambers) சந்திக்க ஆணையிட்டார், சந்தித்தார். நீதிபதி அவர்களை சந்தித்து விட்டு வெளியே வந்த ரூபாபுதீன் நீதிபதியிடம் என்ன பேசினார் என்பதைச் சொல்லிட மறுத்துவிட்டார்.

ஆனால் அவர் தன்னைப் பொல்லாத நோய்கள் பீடித்துக் கொண்டிருப்பதாகவும், அதனால் கடுமையான நெருக்கடிகளுக்குள் இருப்பதாகவும், காட்டி இருக்கின்றார். இந்த விவகாரத்தில் இவர் இன்னும் தன் வழக்கறிஞர்களைச் சந்திக்கவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மும்பை நீதிமன்றங்கள் குறிப்பாக கீழ் நீதிமன்றங்கள் மோடிப் பேரவையாக மாற்றப்பட்டுவிட்டன.

அதாவது, ஆட்சியிலிருக்கும் மோடி தன்னை உச்சநீதிமன்றம் வரை உயர்த்துவார் அல்லது ஓய்வுக்குப் பின் ஒரு கவர்னர் பதவியோ அல்லது "பிக்காளி" பதவியோ தருவார் என நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கும் சதாசிவன் போன்றோரும் இருக்கும் அவையாக மாறிவிட்டன.

இப்போது மராட்டிய மாநிலத்தில் மோடியின் இனப்படுகொலையின் பக்தர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உறுப்பினர், தேவேந்திர பண்டாவிஸ் என்பவரது ஆட்சி. அதனால் நீதி கிடைக்கவே வழி இல்லை. இவர் தான் குறித்த நாளில் யாகூப் மேமனை தூக்கில் போட்டார். அதற்காக நீதிமன்றங்கள் குறிப்பாக உச்சநீதிமன்றம் இரவும் உழைத்தது.

அவர் குறித்த நாளுக்காக ஜூன் 30,2015 க்காக நீதிமன்றம் அல்லும் பகலும் உழைத்தது. அந்த நேரத்தையும் நாளையும் உறுதி செய்து கொடுத்தது நமது உச்சநீதிமன்றம்.

ஆனால் நீதிபதி அனுஜா பிரபு தேசாய் வித்தியாசமானவராய் இருக்கின்றார். இனி அவருக்கும் அழுத்தங்கள் வரும். ஆனால் அவர் ரூபாபுதீன் அவர்களின் வழக்கை திரும்பப் பெற அனுமதிக்கலாம்.

## இன்னொரு திருப்பம்

இதனிடையே, இராஜேஷ் காம்லே என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் ஓர் வழக்கை மும்பை உயர் நீதிமன்றத்தில் பதிவு செய்திருக்கின்றார். அமித்ஷாவை விடுதலைச் செய்த (கீழ் நீதிமன்ற) தீர்ப்பை விசாரணைக்கு எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

எது எப்படி இருந்தாலும் இந்தியாவில் நீதிமடிந்து விட்டது. இனி நீதியையும் நேர்மையையும், எல்லா நிலையிலும், தூக்கிப்பிடிக்கும் ஒரு கொள்ளை மட்டுமே இந்தியாவை அத்தனை அநீதிகளிடமிருந்தும் பாதுகாத்திட இயலும்.

**எம்.ஜி.எம்.**

(An Artile in the interest of Justice and not be belittle the Judiciary)

# மரணத்திற்குப்பின் கண்ணியமாகப் புதைக்கப்படும் உரிமை தலீத்களுக்கு இல்லை!

இப்படியொரு தலைப்பை நமது தி- ஹிந்து ஆங்கில பதிப்பு நவம்பர் 18,2015 என்று சென்னைப் பதிப்புப் பதிவு செய்திருந்தது.

அனைவர் கவணத்தையும் கவர்ந்த அந்த ஆய்வின் தலைப்பு இதுதான்,

"Right to decenit burial still a dream for a sanampatti Dalits"

கண்ணியமாக புதைக்கப் வேண்டும் என்பது சானாம்பட்டி தலீத்களுக்கு இன்றும் ஒரு கனவுதான்.

சானாம்பட்டி எனுமிடத்தில் சுமார் 100 தலீத் குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் தங்களில் இறப்பவர்களை பஞ்சாயத்திற்குச் சொந்தமான புதை குழியில் பண்டைய காலந்தொட்டே புதைக்க முடியவில்லை. ஆதலால் ஊருக்கு வெளியே ஓர் ஒதுக்குப் புறத்தைத் தேர்ந்தெடுத்து தங்களில் மரணிப்பவர்களைப் புதைத்து வருகின்றார் கள். அது மதுரை - திண்டுக்கல் - வழியில் ஒதுக்குபுறமாக அமைந்த வாடிப் பட்டி எனுமிடத்திற்குப் பக்கம்.

சானாம்பட்டி பஞ்சாயத்து உறுப்பினர் அதவாது அந்தப் பகுதி பஞ்சாயத்து உறுப்பினர் தலீத் ஜி. சீனிராஜா என்பவர், அந்தப் புதைகுழியில் சில அடிப்படை வசதிகளைச் செய்திட முயற்சிகளை மேற் கொண்டார். அதாவது தண்ணீர் அந்த இடத்திலேயே கிடைக்க வகை செய்தார். பெரிதாக என்றுமில்லை. ஓர் அடி பம்பை அங்கே நிறுவிட முயற்சி செய்தார். உடனேயே அதிகாரிகள். அதனை தடுத்துவிட்டார்கள். காரணம் பக்கத்து இடத்தைச் சார்ந்தவர். இதனை எதிர்த்து ஒரு மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இப்போது உள்ளதும் போச்சடா நொள்ள கண்ணா என்பது போல் தேசிய நெடுஞ்சாலை ஆணையம். தலீத்கள் காலா காலமாக பிணங்களைப் புதைத்து வந்த இடத்தை தேசிய நெஞ்சாலைக்குச் சொந்த மானது எனத் தாக்கீது அனுப்பியுள்ளது. இந்த தேசிய நெஞ்சாலைத் துறையையும் பக்கத்து இடத்துக்காரர்தான் சீண்டிவிட்டுள்ளார்.

பஞ்சாயத்துக்குச் சொந்தமான புதை குழியில் புதைக்கலாம் என்றால் அங்குள்ள உயர் ஜாதிக்காரர்கள் அதை அனுமதிக்க வில்லை. அவர்கள் தலீத்கள் கால காலமாக ஊருக்கு வெளியேதான் பிணங் களைப் புதைத்து வருகின்றார்கள். அவர்கள் அங்கே யே பிணங்களைப் புதைக்கட்டும் எனக் கூறிவிட்டார்கள். அதில் கிஞ்சிற்றும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

தலீத்களும், தங்கள் பிணங்களை பஞ்சாயத்திற்குச் சொந்தமான இடத்தில் புதைக்க விரும்பவில்லை. அதாவது உயர் ஜாதிக் காரர்கள் புதைக்கும் இடத்தில் புதைக்க விரும்பவில்லை. காரணம் அதில் ஜாதி சண்டைகள் வரும் பிணங்கள் வீழும் இப்போது இருக்கும் அடிமை வாழ்வும் நிலைகுலையும். அதனால் உயிரோடு இருப்பவர்கள் புது புகலிடங்களைத் தேடி அலைய வேண்டி இருக்கும்.

ஆனால், பஞ்சாயத்தார் வழக்கம் போல் விரைவில் தலீத்களுக்கான ஓர் தனி புதைக்குழி ஏற்பாடு செய்யப்படும் எனக் கூறியுள்ளனர். இந்த ஆறுதலான வார்த்தையோடு மொத்த சப்தத்தையும் மூடிக் கொண்டனர்.

Source : The Hindu, Nov. 18,2015

## பெருந்தியாகி கொடிக்கால் அண்ணன்

# ஷேஹ் அப்துல்லாவின் துணைவியார்

## மரியம் ஜெமீலாவை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்!

கடந்த 65 ஆண்டுகாலமாக தன்னை சமுதாயத்திற்குத் தந்து போராடி வருபவர் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள். ஆமாம் சிறுவயது முதலே போராட்ட வாழ்க்கைக்குத் தன்னைத் தந்தவர்.

அவருடைய பொது வாழ்வில் போராட்ட வாழ்வில் அவரோடு துணை நின்றவர் அண்ணி மரியம் ஜெமீலா அவர்கள். மரியம் பிறப்பால் கிறிஸ்தவர். கொள்கையால் நாத்திகர். இயக்கத்தால் பொதுவுடைமை யாளர்.

போராட்ட வாழ்வில் தனக்குத் துணையாக நின்ற மரியம் அவர்களை வாழ்க்கை துணைவியாகவும் ஆக்கிக் கொண்டார். அதுவும் தேவிகுளம் பீர்மேடு போராட்டத்தில் சந்தித்த வீராங்கணைதான் மரியம் அவர்கள். கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அப்போது கொடிக்கால் செல்லப்பா.

பொதுவுடைமை இயக்கத்தின் வழி சமூக நீதிக்காகவும் பொருளாதார சமத்துவத்தைப் பெறவும் பொதுவுடமையை நிலை நாட்டிடவும் போராடிவந்தார்கள். கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களும் மரியம் ஜெமீலா அவர்களும்.

இந்த பொதுவுடமை போராட்டங் களில் எல்லாம் துணைவியார் துணை நின்றார்கள். அப்போது அவர் நாத்திகம் என்ற இறை மறுப்புக் கொள்கையில் மிகவும் முன்னணியில் நின்றார். போராளி மரியம் ஜெமீலா அவர்களின் மற்றொரு இலக்கு "பெண்களின் விடுதலை". பெண்களின் விடுதலைக்காகவும், விவசாயிகளின் உரிமைக் காகவும் பாடுப்பட்டார். இவர் பிறந்தது பீர்மேடு என்றாலும் கல்வியைக் குமரி மாவட்டத்தில்தான் பெற்றார். பின்னர் குமரி மாவட்ட பொதுவுடைமை பெண்கள் அமைப்பில் மாவட்டப் பொறுப்பாளராக இருந்தார்கள். அது AIDWA. அதே போல் இராஜா மங்கலம் பஞ்சாயத்து யூனியனில் அரசு நியமன உறுப்பினராகவும் பணியாற்றி னார்..

இந்நிலையில் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் (அப்போது கொடிக்கால் செல்லப்பா) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள விரும்பினார். ஏற்றார்கள். இந்தச் செய்தியை ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள் தன் மனைவியிடம் சொன்னபோது, என்ன இருந்திருந்தும் ஓர் மதவாதியாக மாறிப் போனீர்களோ என சற்று ஆதங்கப்பட்டி ருக்கின்றார்கள்.

மனைவி அறிவாளி, யதார்த்தமானவர், ஆகவே உண்மைகளை முறையாகச் சொன்னால் ஒத்துக் கொள்பவர் என்பதைக் கொடிக்கால் அவர்கள் நன்றாக அறிவார்கள். அதனால் இஸ்லாத்தை அவர்களுக்கு எடுத்துச் சொன்னதோடு இஸ்லாமிய நூல்களையும் உடன் வழங்கி இருக்கின்றார்கள்.

இஸ்லாத்தை நன்றாக ஆய்வு செய்தபின் இஸ்லாத்தை மரியம் அவர்களும் ஏற்றுக் கொண்டார். மரியம் அவர்கள் மரியம் ஜெமீலா ஆனார்கள். இவர்களுக்கு முஹம்மத் ரப்பீக் என்றொரு மகனும் இருக்கின்றார்.

மரியம் ஜெமீலா அவர்கள் தனது 72ஆம் அகவையில் 13.11.2015 அன்று நாகர் கோவிலில் உள்ள தனியார் மருத்துவமனையில் வைத்து 13.11.2015 அன்று வபாஃத்தானார்கள். அவர்களின் உடல் 14.11.2015 மாலை நாகர்கோவில் வடசேரி முஸ்லிம் ஜமாத்தின் ஜும்மா பள்ளிவாசல் வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு துஆ செய்தார்கள்.

வைகறை வாசகர்கள், தாருல் இஸ்லாம் டிரஸ்ட்-இன் உறுப்பினர்கள், கலந்து கொண் டார்கள். 15.11.2015 அன்று வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர் களையும் குடும்பத்தினரையும் நேரில் சந்தித்து ஆறுதல் சொன்னார்கள்.

பத்திரிகைகள் பலவும் முதற்பக்க செய்தியாக மரியம் ஜமீலாவின் மரணத்தையும் பொதுவாழ்வையும் வெளி யிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களின் "புறப்படு நீயும் இஸ்லாத்தை நோக்கி" என்ற நூல் பல்லாயிரக் கணக்கில் தமிழகமெங்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது. இந் நூலைப்படித்து பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு "இலக்கியப் பணிமனை" வழியாக வெளி வந்தது. Let us March Towards Islam என்பது அதன் ஆங்கில வடிவத்தின் பெயர்.

இதனை அடியொற்றி இலக்கியப் பணிமனையின் நிறுவனர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் வழி அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் ஹிந்தி துறை ஹிந்தி யிலும் இந்த நூலை வெளியிட்டிருந்தது. அல்ஹம்ந்துலில்லாஹ்!

**நாகர்கோவிலிருந்து நமது நிருபர்**

# மரியம் ஜமீலா அவர்களுக்கு அஞ்சலிகள்!

என் மதிப்பிற்குரிய நண்பர் கொடிக்கால் ஷேக் அப்துல்லா அவர்களின் துணைவியார் மரியம் ஜமீலா அவர்களின் மறைவு குறித்த இன்றுதான் அறிந்தேன்.

கொடிக்கால் செல்லப்பா அவர்கள் மரியம் அவர்களை மணந்த போது மரியம் அவர்கள் ஒரு கிறிஸ்தவர். செல்லப்பா ஷேக் அப்துல்லா ஆன போது மரியம் அவர்களும் முஸ்லிம் ஆனார்கள். ஒரு மகன், மருமகள் மலப்புரத்தைச் சேர்ந்த ஒரு மலையாள முஸ்லிம். கொடிக்கால் அவர்கள் குமரிப் போராட்டத்தில் பங்கு பெற்றவர். நீண்ட காலம் சி.பி.ஐ. கட்சியின் மாவட்ட செயலாளராக இருந்தவர்.

இஸ்லாமியருக்கு எதிரான ஒரு வெறுப்பு அரசியல் இங்கு தலை எடுத்த போது இன்று வரை முஸ்லிம் சமூகத்தின் நியாயங்களுக்காக நிற்பவர்.

மரியம்ஜமீலா அவர்களை இரண்டாண்டுகளுக்கு முன் ஒரே ஒரு முறை கொடிக்கால் அவர்களைச் சந்திக்கச் சென்ற போது நாகர்கோவில் அவரது இல்லத்தில் பார்த்து. அவர் இஸ்லாத்திற்கு வருமுன் நாத்திகராக இருந்தவர் எனவும், சாலினி இளந்திரையனுடன் தொடர்பில் இருந்தவர் என்பதையும் கொடிக்கால் அவர்கள் இன்று சொல்லும்போதுதான் அறிந்தேன்.

சென்ற வாரம் நாகர்கோவிலில் நடந்த இறுதிச் சடங்கில் கட்சி வேறுபாடுகள் இன்றி இடதுசாரிகள் திராவிட இயக்கத்வர் காங்கிரஸ்காரர்கள் பெரிய அளவில் ஜாமாத்தார் கலந்து கொண்டுள்ளனர்.

முழுமையாக இஸ்லாமிய நெறிமுறைகளின்படி இறுதிச் சடங்குகள் நிகழ்ந்ததை நெகிழ்ச்சியோடு கொடிக்கால் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

இன்னொரு நெகிழ்ச்சி மிகு அன்பு வெளிப்பாடு ஒன்றையும் பகிர்ந்து கொண்டார். மரியம் ஜமீலா அவர்களுக்கு அஞ்சலிகள்.

# மோடியின் லண்டன் பயணம்!



பீகார் மாநில தேர்தலில் மண்ணைக் கவ்வியது மோடியின் பாசிச ஜனதா கட்சி (இப்படித் தான் தி ஹிந்து 10.11.2015 இதழ் தலைப்பிட்டிருந்தது).

இந்தத் தோல்வியை அள்ளிக் கட்டிக் கொண்டு லண்டன் மாநகர் சென்றார். குஜராத் இனப்படுகொலை புகழ் நரேந்திர மோடி. உலகில் இரண்டாவது அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாட்டின் பிரதமராக, அதாவது இந்தியாவின் பிரதமராக!

இப்படிச் செல்லும் போதெல்லாம் நம் நாட்டுப் பிரதமருக்குப் பெருவாரியான மதிப்பும் மரியாதையும் கிடைக்கும் ஆங்கில நாட்டு மக்களிடம்.

ஆனால் மோடிக்கு இந்தியாவின் உலகின் மிகப் பெரிய நாட்டின் பிரதமர் என்ற அளவிலான மரியாதை கிடைக்கவில்லை மட்டுமல்ல, ஓர் இனப்படுகொலையை நடத்தியவர், என்ற பெயர் மட்டுமே லண்டன் பயணத்தில் மேலாங்கி நின்றது.

ஓர் இராஜாங்க மரியாதையின் நிமித்தம் இங்கிலாந்து இராணி கைகுலுக்க தன் கைகளை நீட்டிய போது ஆங்கில நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் முக நூல்களில் “There is blood in his hands” அவருடைய கைகளில் இரத்தம் இருக்கின்றது என்ற செய்தியை சுழலவிட்டுள்ளனர்.




இனப்படுகொலைப் புகழ் மோடிக்கு எதிராக ஆர்பாட்டங்கள், ஆங்கில நாடெங்கும்.

அவற்றில் முத்தாய்ப்பானது, லண்டன் மா நகராட்சி மேயர் அவர்களின் தலைமையில் நடந்தது. அதில் லண்டன் வாழ் ஆங்கில நாட்டு மக்கள், சீக்கியர்கள், நேப்பாள



மக்கள், தமிழர்கள், பெண்கள் இப்படி ஏராள மானோர் கலந்து கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஒரே குரலில், "ரத்த கறைபடிந்த மோடியே திரும்பிப்போ! திரும்பிப்போ!" எனக் குரல் கொடுத்தனர். (விடுதலை 16.11.2015)

### லண்டன் பத்திரிக்கைகள்

லண்டனிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் அனைத்தும் அன்று மோடியைப் பற்றியும், மோடிக்கு லண்டன் வர அனுமதி வழங்கியதற்கும் ஆங்கில நாட்டு ஆட்சியாளர்களைக் கண்டித்துத் தலையங்கம் எழுதி இருந்தன. சில பத்திரிகைகள் நடுப்பக்கக் கட்டுரைகளை எழுதி இருந்தன. லண்டனிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ்' என்ற தொன்மை வாய்ந்த பத்திரிகை "ALL IS FORGETTEN Mr. CAMREON" எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா திருவாளர் கேமரூன் அவர்களே! என ஆங்கில நாட்டுப் பிரதமரைக் கண்டித்து தலையங்கம் எழுதியுள்ளது. இந்தப் பத்திரிகைதான் ஆங்கில நாட்டிலேயே அதிகமாகப் படிக்கப்படுவது.

மோடி, தான் லண்டன் செல்வதற்கு முன்பே தனது இந்தியப் பாசிச பரிவாரம் ஒன்றை லண்டன் அனுப்பி வைத்துள்ளார். இந்தப் பரிவாரம் அங்கே சென்று மோடிக்கு ஆதரவாக கருத்துக்களை உருவாக்க வேண்டும். அத்தோடு ஒரு பெரிய 'ஆள்' வருகின்றார் என்ற பிரம்மையையும் ஏற்படுத்திட வேண்டும். இவற்றிற்குப் பின் பிரம்மாண்ட வரவேற்பு ஒன்றுக்கும் ஏற்பாடு செய்திட வேண்டும். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

மோடியின் பாசிச பரிவாரமே பயந்து பதுங்கும் அளவிற்கு அங்கே மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

"நீங்கள் ஓர் இனப்படு கொலையின் நாயகன் என்ற எண்ணமே மிகைந்து நிற்கின்றது" என மோடிக்கு வேண்டியவர்கள் மோடியின் காதுகளில் செய்தியைப் போட்டுள்ளனர்.

### நேரு - மோடி - மன்மோகன்

இனப்படுகொலைப் புகழ் மோடி, தன் விளம்பரத்தில் செலவழித்த கோடிக்கணக் கான டாலர்களும், பாழாகிப் போய் விட்டது. மக்கள் தன்னைக் கொலைகாரனாகவே பார்க்கின்றார்கள் என்பதை நன்றாக உணர்ந்தார். அதனால் தன்னுடைய உரையில் நேரு, மன்மோகன் சிங் என்றெல்லாம் பேசிப்பார்த்தார் எடுபடவில்லை.

விரக்தியில் வீடு திரும்பினார்.

**எம்.ஜி.எம்.**
**(பல பத்திகைகளிலிருந்தும்)**


உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ள
கீழே உள்ள
தொலைபேசியை
தொடர்பு கொள்ளவும்
**8148129887**




# ரித்தா இருவகை, அவற்றுள் எது பயங்கரமானது?

அல்லாஹ் ஒருவனுக்கு நேர்வழி காட்டிய பின்னர் அவன் இஸ்லாத்திலிருந்து வெளியேறுவது 'ரித்தா' எனப்படும்.

இது, இறைமறுப்பின் பல்வேறு வகைகளில் மிக மோசமானவகை என்பது இஸ்லாமிய அறிஞர்கள் ஐயந்திரிபற ஏற்றுக் கொண்ட ஒன்று.

இஸ்லாத்தைக் ஏற்றுக் கொண்ட பின்னர் இறைமறுப்புக்கு திரும்பச் செல்வது பூர்வீகத்திலிருந்தே இறை மறுப்பாளர்களாக இருப்பதைவிட கொடூரமானது.

இஸ்லாத்தின் எதிரிகள் இதற்காக பெரும் பாடு பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அல்லாஹ் கூறுகிறான் : "அவர்களுக்கு முடியுமானால் உங்களை உங்கள் மார்க்கத்திலிருந்து (வேறு வழிக்கு) மாற்றும் வரை உங்களுடன் போரிட்டுக் கொண்டேயிருப்பார்கள்" *(2:217)*

இந்த வழி கேடர்களின் அழைப்பை ஏற்று பொன்னரிய மார்க்கத்தை விட்டு விலகி தம் மனம் போக்கில் வாழ்வோரின் வழிகளைப் பின்பற்றுபவனுக்கு என்ன தண்டனை என்பதை அதே வசனத்தின் பிற்பகுதியில் அல்லாஹ் இப்படிக் கூறுகிறான்.

"யார் தனது மார்க்கத்தை விட்டு விலகி வழி மாறிச் சென்று இறைமறுப்பாளனாகவே மரணமடைகின்றானோ அப்படிப்பட்டவர்களின் நற்செயல்கள் இவ்வுலகிலும் மறு உலகிலும் பாழாகிவிட்டன. அவர்கள் நரகவாசிகள். அதில் அவர்கள் என்றென்றும் இருப்பார்கள்" *(2:217)*

ஒருவன் மதம் மாறினால் அது அவன் ஏற்றுக் கொண்ட இஸ்லாத்துக்கும் எந்த சமுதாயத்தின் ஓர் அங்கமாக அவன் இருந்தானோ அந்த சமுதாயத்துக்கும் செய்து விட்ட துரோகமாகும்.

ஏனெனில் இது தன் அபிமானத்தையும் அணியையும் திசையையும் மாற்றிக் கொள்வதாகும். ஒரு சமுதாயத்திலிருந்து மாறி மற்றொரு சமுதாயத்தின் அங்கமாக ஆவதென்பது தேசத்துரோகம் போன்றதே.

ஆம், இவன் தன் நாட்டுக்கும் தன் சமுதாயத்துக்கும் காட்ட வேண்டிய அன்பை, அபிமானத்தை ஒத்தாசையை வேறொரு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் காட்டுகிறான்.

ஆக, மதம் மாறுதல் (ரித்தா) என்பது சிந்தனை சார்ந்த நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றம் மாத்திரமல்ல. மாறாக அதுகாறும்

அவன் எந்த சமுதாயத்தின் அங்கமாக இருந்தானோ அந்த சமுதாயத்துக்கு நேரெதிரான நேர்முரணான வேறு ஒரு சமுதாயத்தின் அங்கத்தினராக தன்னை மாற்றிக் கொள்வதும் அபிமானத்தை மாற்றிக் கொள்வதும் என்று விரிவாகின்றது.

எனவே தான் இஸ்லாம் 'ரித்தா'வுக்கு எதிராக கடும் நிலைப்பாட்டை எடுக்கிறது. குறிப்பாக தாம் இஸ்லாத்தை துறந்து விட்டதை (ரித்தா) பகிரங்கமாக அறிவிப்ப வருக்கு எதிராகக் கடுமையான நிலைப் பாட்டை எடுக்கிறது.

இவ்வகைப்பட்ட மதம் மாறிகள் மற்ற மக்களையும் 'ரித்தா' வை நோக்கி அழைப்பார்கள். இஸ்லாமிய சமுதாய அமைப்பின் உள்ளே பெரும் குழப்பத்தை ஏற்படுத்துவார்கள். அதன் அடிப்படை நம்பிக்கைகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பார்கள்.

இதனால் தான் தாபிஈன் எனப்படும் இரண்டாம் தலைமுறையைச் சார்ந்த முன்னோடி அறிஞர்களில் சிலரும் வேறு பல அறிஞர்களும் இவர்களை 'அல்லாஹ் வுடனும் அவனுடைய திருத்தூதருடனும் போர் தொடுத்து பூமியில் குழப்பம் செய்து திரிபவர்கள்' வரிசையில் சேர்த்துள்ளனர்.

இவர்களுக்கு அல்லாஹ் கூறும் தண்டனை என்ன தெரியுமா?

"அல்லாஹ்வுடனும் அவனுடைய திருத்தூதருடனும் போர் தொடுத்து பூமியில் குழப்பம் செய்து திரிபவர்களின் தண்டனை என்னவென்றால் அவர்கள் கொல்லப்பட வேண்டும் அல்து கழுவில் ஏற்றப் பட வேண்டும் அல்லது மாறுகால் மாறு கை வாங்கப்பட வேண்டும் அல்லது நாடு கடத்தப்பட வேண்டும் இது அவர்களுக்கு இவ் உலகில் ஏற்படும் இழிவு. மறுமையில் அவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனையுமுண்டு". (5:33)

இந்த வசனத்துக்கு இமாம் இப்னு தைமிய்யா இப்படி விளக்கம் தருகின்றார் : "உதிரம் சிந்துவதன் மூலமும் செல்வங்களைச் சூறையாடுவதன் மூலமும் பூமியில் கலகம் ஏற்படுத்துவதை விடவும் பயங்கரமான குற்றம் இறைமறுப்பைப் பரப்புவதன் மூலமும் சமுதாயத்தின் நம்பிக்கையில் குழப்பத்தை ஏற்படுத்துவதன் மூலமும் கலகம் செய்வதுதான்."

இமாமின் கருத்து மெத்தச் சரியானதே. சமுதாய அமைப்பைச் சிதைப்பதும் அதன் கொள்கைகளைப் பாழாக்குவதும் தனி நபர்களைக் கொன்று வீடுகளை தரைமட்டமாக்கி செல்வங்களை அழிப்பதை விட பயங்கரமானதே.

எனவேதான் 'ரித்தா' வுக்கு எதிராகப் போராட வேண்டும் என்று திருக்குர்ஆன் முஸ்லிம்களைத் தூண்டுகிறது. இந்த அநீதியைக் கண்டு மவுனம் காக்கக்கூடாது. போராட வேண்டும். இதில் பழிப்போரின் பழிப்பைக் கண்டு கலங்கிவிடக் கூடாது என்கிறது இறைவேதம். இதே பாருங்கள்,

"இறை நம்பிக்கையுள்ளவர்களே! உங்களில் எவராவது தம் மார்க்கத்தை விட்டு மாறிச் சென்றால் (அவரால் எந்த பாதிப்புமில்லை) விரைவில் அல்லாஹ் வேறொரு சமுதாயத்தைக் கொண்டு வருவான். அவர்களை அவன் விரும்புவான். அவர்களும் அவனை விரும்புவார்கள். அவர்கள் இறைநம்பிக்கையாளர்களிடம் பணிவு மிக்கவர்களாக இருப்பார்கள். இறை மறுப்பாளர்களிடம் கண்டிப்பானவர்களாக இருப்பார்கள். தூற்றுவோரின் தூற்றலுக்கு அஞ்ச மாட்டார்கள். இது அல்லாஹ்வின் அருள். அதை அவன் தான் நாடுவோருக்கு வழங்குகிறான். அல்லாஹ் தாராளமானவன். நன்கறிந்தவன்." (5:54)

பின்வரும் வசனத்தில் இறைமறுப்பை பகிரங்கமாக அறிவிக்கும் நயவஞ்சகர்களை அல்லாஹ் எச்சரிக்கிறான்.

"(நபியே) நீர் கூறுவீராக : (வெற்றி அல்லது வீரமரணம்) ஆகிய இரு அழகிய நன்மைகளில் ஒன்றைத் தவிர வேறு ஏதாவது எங்களுக்கு நடக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியுமா? ஆனால் (நயவஞ்சகர் களே) உங்களுக்கோ அல்லாஹ் தன்னிடத்திலிருந்தோ அல்லது எங்கள் கைகளாலோ வேதனை அளிப்பான் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். எனவே நீங்கள் எதிர்பார்த்திருங்கள். நாங்களும் உங்களோடு எதிர்பார்த்திருக்கிறோம்." (9:52)

அதாவது, நயவஞ்சகர்கள் தமது இதயத்தில் குஃப்ர் எனும் இறைமறுப்பை மறைத்து வைத்துக் கொண்டு (நாங்களும் முஸ்லிம்கள் தான் என்று கூறிக் கொண்டு) இருக்கும் வரை முஸ்லிம்கள் அவர்களைப் பற்றி எந்தக் கவலையுமின்றி இருப்பார்கள்.

"நாங்கள் முஸ்லிம்களல்ல இறை மறுப்பாளர்கள்தான்" என்று நயவஞ்சகர்கள் வெளிப்படையாக அறிவித்துவிட்டால் முஸ்லிம்களின் கைகளால் அவர்களுக்கு தண்டனை வரும்.

நயவஞ்சகர்கள் தம் வாயாலும் உறுப்பு களாலும் இறை மறுப்பை வெளிப்படுத்தும் போது அதற்கேற்றபடி முஸ்லிம்களும் அவர்களிடம் நடந்து கொள்வார்கள்.

இஸ்லாத்தை துறந்து (ரித்தா) வெளியேறியவன் கொல்லப்பட வேண்டும் என்று ஏராளமான ஹதீஸ்களை நபித் தோழர்கள் அறிவித்துள்ளனர். அவை ஸஹீஹ் எனப்படும். நம்பத்தகுந்த நபி மொழிகளே. இந்த சமுதாயத்தின் ஏகோபித்த முடிவும் அதுதான்.

இஸ்லாத்தை விட்டு வெளியேறி மதம் மாறிச் சென்றவனை சிறையிலடைக்க வேண்டும். தம் கருத்தை அவன் மாற்றிக் கொண்டு திருந்தி அல்லாஹ்விடம் பாவ மீட்சி பெறும் வரை அவனைச் சிறையிலேயே வைத்திருக்க வேண்டும் என்பதற்கு உமர் (ரழி) விடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ள தகவல் களில் சான்றுகள் உள்ளன.

இதே கருத்தை இமாம் நஹயீ (ரஹ்) இமாம் ஸவ்ரீ (ரஹ்) ஆகியோரும் கொண்டிருக்கின்றனர்.

என்னைப் பொறுத்த வரை இஸ்லாத்திலிருந்து வெளியேறி அதைத் தனக்குள்ளேயே வைத்துக் கொள்கின்றவர் களுக்கு சிறைதண்டனை என்பது சரியே.

ஆனால், தாம் இஸ்லாத்தை துறந்து விட்டதை பகிரங்கமாக அறிவித்து அதைப் பிரச்சாரம் செய்து, அதை (ரித்தா) நோக்கி பிறரையும் அழைப்பவர்களுக்கு சிறை தண்டனை மட்டும் போதாது.

இந்த சமுதாயத்தின் நம்பிக்கையை பாழ்படுத்திச் சிதைப்பவர்களை எதிர்க்காமல் அவர்களின் பிரச்சாரத்தை முறியடிக்காமல் (ரித்தா என்ற) ஆபத்துக்கு மூக்கணாங்கயிறு போடாமல் விட்டு விட முடியுமா? இதை உமர் பின் கத்தாப் (ரழி) இமாம் நஹயீ (ரஹ்) இமாம் ஸவ்ரீ (ரஹ்) ஆகியோரில் ஒருவராவது ஏற்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. கருதவில்லை.

இந்தத் தீயவர்களுக்கு ஆதரவாகவும் உறுதுணையாகவும் சிலர் பின்னிருந்து இயக்கிக் கொண்டிருக்கும் போது வெறும் சிறை தண்டனை மட்டுமே போதாது என்றே நான் கருதுகிறேன்.

எனவே, 'ரித்தா' வை நாம் இருவகையாகப் பிரித்துப் பார்ப்பது அவசியம். இலகுவான ரித்தா, கடுமையான ரித்தா இவ்விரண்டிற்கும் இடையே வேறுபாடு உண்டு.

இஸ்லாத்தை துறந்து அதிலிருந்து வெளியேறிவிட்டு தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவன் வேறு. தான் வெளியேறியதோடு நிற்காமல் அதை நியாயப்படுத்திப் பிரச்சாரம் செய்பவன் வேறு. இருவரும் ஒரே தரமானவர்கள் அல்ல.

இரண்டாமவன் அல்லாஹ்வுடனும் அவனின் திருத்தூதருடனும் போரிடுபவன். பூமியில் கலகம் ஏற்படுத்துபவன்.

இந்த சன்மார்க்கத்தில் பித்அத் எனும் நூதன அனுஷ்டானங்களைப் புகுத்துபவர் களைக் கூட மார்க்க அறிஞர்கள் இருவகை யாகப் பிரிக்கின்றனர்.


பித்அத்-ஐக் கடைப்பிடிப்பவர்களும் உண்டு. அதைப் பிரச்சாரம் செய்பவர்களும் உண்டு. முந்தையது மென்மையானது. பிந்தையது கடுமையானது.

இது போலவேத்தான் 'ரித்தா'வும் இருவகையுண்டு. இரண்டையும் ஒரே நேர்கோட்டில் வைக்க முடியாது. இரண்டும் வேறானவை. வெவ்வேறு தண்டனைகளுக் குரியவை.

**தொடரும். . .**

**தமிழ் வடிவம் - இல்யாஸ் ரியாஜி**

# தரீக்குல் குர்ஆன்



இல்யாஸ் ரியாஜி

**அத்தியாயம் : அல்பகரா**

**வசனங்கள் : 122,123**

***“இஸ்ராயீலின் மக்களே நான் உங்களுக்கு அருளிய என் அருட் கொடையை யும் நிச்சய மாக நான் உங்களை அகிலத் தாரை விட மேன்மையாக்கி வைத்ததையும் எண்ணிப் பாருங்கள்.***

***யாரும் யாருக்கும் எந்தப் பலனும் தந்து விடமுடியாத ஒரு நாளை நீங்கள் அஞ்சிக் கொள்ளுங்கள். (அந் நாளில்) எவரிட மிருந்தும் எந்த இழப் பீடும் பெற்றுக் கொள்ளப் படாது. எவருக்கும் எந்தப் பரிந்துரையும் பயன் தராது. அவர்கள் உதவி செய்யப்படவும் மாட்டார்கள்.”***

**விரிவுரை**

இவ்விரு வசனங்களும் மிக முக்கியமானவை. இவற்றுக் முந்தைய வசனத் தொகுதிகளுடனும் தொடர்புடையவை. அவ்விரு தொகுதிகளுக்கிடையே ஓர் இணைப்புப் பாலமாக இருப்பவை.

முந்தைய வசனத் தொகுதியில் இஸ்ரவேலர்கள் எனப்படும் யூதர்கள், அவர்களின் நடவடிக்கைகள், வாக்கு மீறல்கள், அவர்களின் ஷரீஅத் எனும் வாழ்க்கை நெறிகள், நபி மார்களுடன் அவர்கள் பழகிய விதம் , குறிப்பாக மூசாநபியிடம் அவர்கள் காட்டிய குணம், பண்பாடு, கேலி, கிண்டல், வரம்பு மீறல் அனைத்தும் கூறப்பட்டிருந்தன.

அவர்களின் ஒழுங்கீனமான நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் அல்லாஹ் அவர்களுக்கு எப்படியெல்லாம் அருள் புரிந்தான். மேன்மைப்படுத்தினான் என்பதும் கூறப்பட்டிருந்தன.

ஆனால் இஸ்ரவேலர்களோ அநீதி யிலிருந்து விலகவும் இல்லை. இறையச் சத்துடன் நடந்து கொள்ளவுமில்லை. மறுமையை பற்றிக் கவலைப்படவுமில்லை.

எனவே இறைவனின் அன்பரான நபி இப்றாஹீம் (அலை) வின் மகன் இஸ்ஹாக் (அலை) வின் வழித்தோன்றலான இஸ்ரவேலர் கள் தம்கவுரவத்தை இழந்தனர். பெருமை யிலிருந்து வீழ்ந்தனர்.

மனித குலத்துக்கு நேர் வழிகாட்டி வழி நடத்தும் பெரும் பொறுப்பை

அல்லாஹ்விடமிருந்து பெற்ற இஸ்ரவேல் சமுதாயம் அந்த பொறுப்பைத் தட்டிக் கழித்தது. புறக்கணித்தது தடம் மாறி வழி கேட்டில் வீழ்ந்தது.

எனவே எல்லாம் வல்ல ஏகன் அல்லாஹ் இன்னொரு சமுதாயத்தை உருவாக்கினான். அதுவும் நபி இப்றாஹீம் (அலை) வின் வழித் தோன்றலே.

இபுறாஹீம் (அலை)வின் மூத்தமகன் இஸ்மாயீல் (அலை) வின் வழித்தோன்றலில் ஒரு சமுதாயத்தை உருவாக்கினான். அது இறைவனின் பிரதிநிதியாய் பூமியில் செயல்படவும் இதர சமுதாயங்களை வழி நடத்தவும் அநீதியை அழித்திடவும் சத்தியத்தை நிலை நாட்டவும் இறைவனால் உருவாக்கப்பட்டது.

அந்த சமுதாயம் உருவான இடமும் அதற்கான இறைத்தூதர் தோன்றிட இடமும் நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் காட்டிய இடம்தான்.

அங்குதான் தம் மனைவியையும் தம்முடைய மூத்த புதல்வரையும் இப்றாஹீம் நபி குடியமர்த்தினார்கள். உலகின் முதல் இறையில்லம் அங்குதான் இருந்தது.

அந்த முதல் இறையில்லத்தை இப்றாஹீம் நபியும் அவர்தம் மூத்த புதல்வர் இஸ்மாயில் நபியும் அடித்தளமிட்டுக் கட்டியெழுப்பினர்.

தூர்ந்து போன மனிதப் பண்புகளை நாகரீகங்களை மீட்டெடுக்கும் ஒரு தூதர். அவர் காட்டிய வழியில் வாழ்ந்திடும் ஒரு தலைமுறை இங்கே உருவாக வேண்டும் என்ற இறைவனுடைய ஏற்பாட்டின் ஒரு அறிகுறியாக அது இருந்தது.

இப்படியான தலைமைத்துவத்தின் இடமாற்றம் முதல் இறையில்லம் குறித்த செய்திகள் பின்னருள்ள வசனத் தொகுதிகளில் (124 முதல்) இடம் பெறுகின்றன.

ஆக, இஸ்ரவேல் சமுதாயத்திடமிருந்து தலைமைத்துவம் இடம் மாறியதற்குக் காரணம் அவர்கள் செய்த அநீதிகளே.

முன்னரே இது குறித்து இப்றாஹீம் (அலை) விடம் அல்லாஹ் கூறியிருந்தான்.

“என்னுடைய வழித் தோன்றல்களிலும் தலைவர்களை ஏற்படுத்து இறைவா!” என்று இப்றாஹீம் நபி வேண்டி நின்றபோது, “சரி. ஏற்படுத்துகிறேன். ஆனால் என்னுடைய இந்த வாக்குறுதி அநீதியாளர்களுக்குப் பொருந் தாது” என்று அல்லாஹ் கூறிவிட்டான். (காண்க: 2:124)

எனவே, தலைமைத்துவ இடம் மாற்றம் குறித்த நிகழ்வுகளைக் கூறும் வசனத் தொகுதிகளுக்கு முன்னர் (122,123 ஆகிய) வசனங்களில் இஸ்ரவேலர்களுக்கு அழைப்பு விடுத்து மறுமை நாளை அஞ்சிக் கொள்ளும் படி கூறுகிறான் அல்லாஹ்.

அதாவது அல்லாஹ் உங்களுக்குத் தந்துள்ள அருட் கொடைகளை எண்ணிப் பார்த்து அவன் உங்களுக்கு வழங்கியுள்ள மேன்மைகளை உணர்ந்தறிந்து அவனுடைய பிரதிநிதியாய் உலகில் வாழுங்கள். அவனுடைய ஷரீஅத் எனும் வாழ்க்கை நெறியை நிலை நாட்டுங்கள். மறுமை வாழ்வை அஞ்சி வாழுங்கள்.

இல்லாவிட்டால் இஸ்ரவேலர்களைப் போல நீங்களும் இறையருளிலிருந்து விலக்கப்படுவீர்கள். உங்களின் மேன்மை அகற்றப்படும். அருள்கள் பறிக்கப்படும் என்று புதிய சமுதாயத்துக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

புதிய சமுதாயம் என்பது இப்றாஹீம் நபியின் மூத்த புதல்வரான இஸ்மாயில் நபி யின் வழித்தோன்றல்களான அரபுக்களை (முஸ்லிம்களை) க் குறிக்கும்.

122,123 ஆகிய வசனங்களைப் போன்ற சிறு வித்தியாசத்துடன் 47,48 ஆகிய வசனங்கள் இதே அத்தியாயத்தில் உள்ளன. அவ்விரு வசனங்களும் இருவித வசனத்தொகுதிகளுக்கு மத்தியில்தான் கூறப்பட்டுள்ளது.


அல்லாஹ்வின் கட்டளைக்குப் பணிய மறுத்த இப்லீஸ் மற்றும் அல்லாஹ்வின் தடையை மீறிய ஆதம் (அலை) குறித்த செய்தி கூறப்பட்டு பின்னர் இஸ்ரவேலர்களின் நடவடிக்கைகள் கூறப்பட்டிருக்கின்றன.

ஆதம் (அலை) இப்லீஸ் ஆகிய இருவரின் வரலாறு இஸ்ரவேலர்களுக்குப் படிப்பினை. இம்மூவரின் வரலாறும் இறுதி சமுதாயமாம் முஸ்லிம்களுக்குப் படிப்பினை.

**தொடரும்**

தொடர். . .

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# வீழ்ந்தது உஸ்மானியப் பேரரசு!

**- அபுல் ஹசன் அலீ நத்வீ**

**மொழிபெயர்ப்பு:**

**அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

உஸ்மானியப் பேரரசின் மீது நாம் இப்போது வைத்த விமர்சனங்களெல்லாம் யதார்த்தங்களை எடுத்துச் சொல்லுவதற்காகத் தான்.

வரலாறு ஓர் அமானிதமல்லவா? அதை உள்ளால் உள்ளபடிதானே கூறவேண்டும்! அதனால் அதை அப்படியே கூறிவிட்டோம்.

உஸ்மானிய பேரரசு இத்தனை பின் தங்கியிருப்பினும் கூட இஸ்லாத்தைக் கட்டிக் காக்கும் எஃகுக் கோட்டையாக இருந்தது. வலிமை மிக்கதொரு வேலியாகவும் விளங்கிற்று.

(மக்கா, மதீனா ஆகிய புனித நகரங்களை உள்ளடக்கியுள்ள) ஹிஜாஸ் பகுதி, (முதல் கிப்லாவாம் பைத்துல் முகத்தஸை தன்னகத்தே கொண்ட) ஃபலஸ்தீன் உள்ளிட்ட மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமிய நாடுகளையெல்லாம் அரணாய் காத்துநின்றது உஸ்மானிய பேரரசு.

இஸ்லாமிய நாடுகளுக்குள்ளே மேற்கத்திய அந்நிய சக்திகள் புகுந்து விளையாட விடாமல் காப்பாற்றியது இஸ்லாமிய நாடுகளின் புனிதத்தை சிதைத்து விட மேற்கத்திய சக்திகள் முயன்றபோது முளையிலேயே அதைக் கிள்ளி எறிந்தது உஸ்மானிய பேரரசு.

இதே நிலை சுல்தான் அப்துல் ஹமீது அவர்களின் ஆட்சிக் காலம் வரை நீடித்து நிலைத்து நின்றது.

இவர் பற்றியும் சில விமர்சனங்கள் பரவலாகக் கூறப்பட்டாலும் கூட இவரின் ஆட்சிக் காலத்தில் இஸ்லாத்தின் புனிதங்களுக்கு எதிராக யூதர்களின் சதிகளும் கிறித்தவர்களின் யுக்திகளும் வலுவிழந் திருந்தன.

1914 முதல் 1918 வரை முதலாம் உலகப் போர் நடந்த போது நேச நாடுகளெல்லாம் அரபுக்களை தமது அணியில் இணைத்துக் கொள்ள முயன்றனர். துருக்கியர்களின் உஸ்மானியப் பேரரசுக்கு எதிராக அரபுக் களைத் தூண்டினர்.

இக்காலக் கட்டத்தில் அரேபிய இனவாதக் கோட்பாடு பரவியது. இதனால்

உஸ்மானிய சாம்ராஜ்யத்திலிருந்து அரபு நாடுகள் பிரிந்தன. பல நாடுகள் உருவாகி விட்டன. சிறிய, பெரிய மன்னராட்சிகளும் ஏற்பட்டுவிட்டன.

இப்படிப் பிரிந்த சில நாடுகள் நேச நாடுகளின் மேலாண்மையில் கீழ் நீண்ட நெடும் காலம் இருந்தன. பின்னர் தனித்து இயங்கின.

இதைத் தடுத்து நிறுத்திப் பாதுகாத்திடும் வலிமை மிக்க சக்தி எதுவும் உலகில் அப்போது இருக்கவில்லை.

இக்காலக் கட்டத்தில் மகா ஐரோப்பாவின் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் அரபுலகத்தின் இதயப் பகுதியிலேயே இஸ்ரேல் என்ற யூதர்களின் தேசம் உருவானது.

இறுதியில் அது கி.பி. 1967 ஜூன் மாதத்தில் மேற்குக் கடற்கரைப் பகுதி மீதே ஆதிக்கம் செலுத்தி ஆக்கிரமித்தது. சீனாய் தீபகற்பத்தையும் பிடித்தது. வரலாற்றில் முதல் முறையாக சங்கைக்குரிய அல்குத்ஸ் ஐயும் பிடித்தது.

அரபுலகமோ இதைத் தட்டிக் கேட்கவோ, தடுக்கவோ வலிமையற்றுக் கிடந்தது.

அரேபியப் பழமொழியொன்றுக்குப் பொருத்தமான சூழல் இஸ்லாமிய உலகுக்கு ஏற்பட்டது. இதுவே அந்தப் பழமொழி.

“வெள்ளைக் காளை தின்னப்பட்ட நாளிலேயே நானும் தின்னப்பட்டனே”*

உஸ்மானிய சாம்ராஜ்யம் வீழ்ந்து போன நிகழ்வு (குறிப்பாக கிழக்குப் பகுதியில்) ஐரோப்பிய சிலுவைக்காரர்களுக்கும் யூத உலகத்துக்கும் பெரும் வெற்றியாக ஆகிவிட்டது.

அப்போது இஸ்லாமிய உலகில் ஏற்பட்ட இடைவெளி இட்டு நிரப்பப்படவே யில்லை.

* அடிக்குறிப்பு: உஸ்மான் (ரழி) அவர்கள் படுகொலை செய்யப்பட்டது பற்றி அலீ (ரழி) கூறியதே அப் பழமொழி. அதாவது “மாபெரும் மனிதர்களுக்கே அநீதி இழைக்கப்படும் போது நான் எம்மாத்திரம்” என்று பொருள்.

மிகப்பெரிய உஸ்மானிய சாம்ராஜ்யம் அநீதியாக வீழ்த்தப்பட்ட பின் மற்ற அரசுகள் எம்மாத்திரம் என்ற பொருளில் இப் பழமொழி இங்கு ஆளப்பட்டுள்ளது.

**தொடரும். . .**

# நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்!

## முஹம்மது (ஸல். . ) அவர்கள்

## நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி

ஆகிய இரு தொடர்களும் அடுத்த இதழில். . .

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.